
கல்கி
'பெற்றோருடன்
பேச என்ன
இருக்கு!'
KALKI 16.2.92
ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

# காலை உணவிற்கு சுவைமிக்க பானி மிக்ஸ் சாப்பிடுங்கள்

## கூடவே ரூ. 4/- சேமியுங்கள்




**அறிமுகம்!**

## ரீஃபில் பேக்கிலே பானி மிக்ஸ்

காலை உணவிற்கு சுவையுடன் ஊட்டச்சத்தும் கூடிய பானிமிக்ஸை உங்கள் குடும்பத்திற்கு தினந்தோறும் அளியுங்கள். அத்துடன் பணமும் சேமியுங்கள்.

உங்களுக்குப் பிடித்தமான பாரிட்ஜ் இப்பொழுது சிக்கனமான ரீஃபில் பேக்கில் கிடைக்கிறது.

டின் பேக்கைவிட ரூ. 4/- விலை குறைவு

**பானி மிக்ஸ்**Ⓣ உடனடியாக தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்
நாச்சுரல் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

இப்பொழுது தேர்ந்தெடுத்த இடங்களில் மட்டுமே கிடைக்கிறது

GL/331/91 TAM



''ரொம்ப நல்லா ஒர்க் பண்ணியிருக்கீங்க. மை காம்ப்ளிமென்ட்ஸ்!'' என்று முதல்வர் ஜெயலலிதா பாராட்டினாராம். ஓவியம் தீட்டிய கைக்கு ஒரு தங்க மோதிரம் பரிசளித்திருக்கிறார் ஜெ.

''நாலு மாதங்களுக்கு முன்னால், எங்கள் ஓவியக் கல்லூரி பிரின்சிபால் அந்தோணிதாஸ், செய்தித் துறை அதிகாரிகளைப் போய்ப் பார்த்துவிட்டு வரச் சொன்னார். சட்டசபையில் எம்.ஜி. ஆர். அவர்களின் ஓவியம் வைக்கப்பட இருக்கிறது என்றும், அதை வரைய என் பெயர் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார். எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்ததில் சந்தோஷப்பட்டேன். எனக்கு, உயிரோடு வாழ்ந்த எம்.ஜி.ஆர். என்ற மனிதரின் தனிச் சிறப்புகளையும் குணாதிசயங்களையும் புரிந்து கொள்ளவும், நுணுகி ஆராயவும் கொஞ்சம் அவகாசம் தேவை என்றேன். கிட்டத்தட்ட மூன்று மாசங்கள் அவரது நூற்றுக் கணக்கான புகைப்படங்களையும், திரைப் படங்களையும் அலசினேன். அவர் மற்ற தலைவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டவர். அவருடைய உருவத்தை எழுதினால் போதாது, அவர் மனத்தை முகம் பிரதிபலிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. எந்த வித பாவம், எந்தக் கோணம், என்று யோசித்தபடியே இருந்தேன். அவர் தயாள சிந்தை உடையவர், மக்களோடு நெருங்கி உறவாடியவர் என்பதையெல்லாம் எனது ஓவிய எம்.ஜி.ஆர். பிரதிபலிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்!'' என்றார் ஓவியர் அல்ஃபான்ஸோ.

சென்ற டிசம்பர் முதல் வாரத்தில் ஓவியம் வரையத் தொடங்கி, ஜனவரி 27 ஆம் தேதி ஒப்படைக்கும் வரை வேறு எதிலுமே கவனம் செலுத்தவில்லையாம்.

ஏராளமான ஓவியக் காட்சிகளை உலகின் பல நாடுகளில் நடத்தி, பட்டியல் போட்டு நீளும் அளவுக்குப் பரிசுகள், விருதுகள் பல பெற்ற இவரை எம்.ஜி.ஆரின் படம் வரையத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

''நான் வரைந்திருந்த அண்ணாதுரை ஓவியத்தைப் பார்த்துவிட்டுத்தான் எனக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தார்கள்!'' என்றார் அல்ஃபான்ஸோ.

இவர் வரைந்த இந்திரா காந்தி ஓவியத்தை தில்லியில் ஒரு காட்சியில் பார்த்துவிட்டு அப்போதே வாங்கிக் கொண்டு விட்டார்களாம். ''இப்போது அது சோனியா காந்தியிடம் இருக்கிறது.''

மகாத்மா காந்தி ஓவியம் கோவை லட்சுமி மில்ஸில் இருக்கிறது. நவீன பாணியில் இவர் வரைந்திருக்கும் ராஜீவ் ஓவியம், தலைக்கு மேல் ரத்தச் சிவப்பான அஸ்தமன சூரியனுடன், பார்க்கிற எவரையும் சற்று உலுக்கத்தான் செய்யும்!

எம்.ஜி.ஆரின் நினைவு இல்லத்துக்குப் போய், அவர் வைத்திருந்த புத்தகங்கள் என்னென்ன என்று பார்த்திருக்கிறார். ஒரு செட் என்சைக்ளோபிடியா அஃப் ஆர்ட்! (ஓவியத்தில் சஜஷனாக இது தெரிகிறது.)

- சித்தார்த்

# சட்டசபையில் எம்.ஜி.ஆர்!

## பம்பாய்க் கடிதம் :

# பம்பாயில் பாபா

காஞ்சி சங்கராச்சாரியார் வந்து சென்ற சிலதினங்களிலேயே புட்டபர்த்தி சாயிபாபா அவர்களின் ஆன்மீக மழையால் பம்பாய் குளிர்ந்தது. வி.டி. ஸ்டேஷன் அருகேயுள்ள கிராஸ் மைதானத்தில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்த கூட்டத்தில் அவர் பேசினார். சுமார் ஒரு மணிநேரம் அவர் பேசிய போது அந்த மாபெரும் கூட்டம் மிக அமைதியாகக் கேட்டது! ''நாம் சுதந்திரம் பெற்றோமே யன்றி, இன்றும் ஒற்றுமையைப் பெற வில்லை. நாம் அனைவரும் இந்தியர் என்று நினைக்கத் துவங்கவில்லை. மனிதன் சுய நலத்தை ஒழித்து, பொது நலம் பேணி மன அமைதி காண வேண்டும். நமது கல்வி, உழைப்பின் உயர்வு, மனத்தின் வலிமை, தீமையின் கொடுமை இவற்றை வலி யுறுத்துவதாக இருக்க வேண்டும். (இதையே ஆங்கிலத்தில் Bend your body, Mend your mind, End all evil என்று அழ காகக் கூறினார் பாபா) கல்வி நம்மை முழு மனிதர்களாக்கி, முன்னேற்ற வழி வகுப் பதேயன்றி, வெறும் வேலைவாங்கித் தரும் சாதனம் அல்ல என்பதை உணர்ந்து கொண் டால் நாடே செழிக்கும்'' என்று கூறி முடித் தார் பாபா.



### சிவசேனாவில் மேலும் பிளவு :

மக்கள் சபை எம்.பி.க்கள் அசோக் தேஷ்முக், விலாஸ் குண்டேவார் மற்றும் ராஜ்ய சபை எம்.பி. குமாரி சந்திரிகா கேனியா ஆகியோர் சிவசேனாவிலிருந்து பிரிந்து, தனியாக சிவசேனா (பி) என்று இயங்கப் போவதாகவும் பின்னர் இந்தக் கட்சி காங்கிரஸில் சேரலாம் என்றும் தெரி கிறது. அனைவரும் ஜில்லா பரிஷத் தேர் தலை எதிர்நோக்கியிருக்கும் இத்தருணத் தில் சிவசேனாவுக்கு இது ஒரு பேரிடி! இந்தப் பிளவின் பின்னணியில் சரத் பவார் செயல்பட்டிருப்பதாகச் சொல்லப்படு கிறது. சேனா வட்டாரத்தினர் இது எங்கள் கட்சியை ஒன்றும் பாதிக்காது என்று சொல்லி வருகின்றனர்.

### பேரழகி பாமெலா

பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களோடு மிக நெருக்க மாகப் பழகி, அவர்களைத் தர்மசங்கடத்துக் குள்ளாக்கிய பாமெலா போர்ட்ஸ் பம் பாய்க்கு விஜயம் செய்து மிகுந்த பர பரப்பை ஏற்படுத்தினார். 'லண்டன் மெயில்' என்ற பத்திரிகையின் போட்டோ கிராபராக வந்திருந்தாராம்! அவர் எங்கு போனாலும் பத்திரிகை நிருபர்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தனர். பேட்டி கொடுக்கவோ, போட்டோவுக்கு போஸ் கொடுக்கவோ மறுத்த பாமெலா, ராகுல் சிங் (குஷ்வந்த் சிங்கின் மகன்), ஷோபா டே போன்ற சிலருக்கு மட்டும் தன் உள்ளத்தைத் திறந்திருக்கிறார்! ஷோபா டேயிடம், ''ஆண்வர்க்கத்தினர் அனைவ ருமே சுயநலவாதிகள்'' என்று சாடியிருக் கிறார் பாமெலா.



☛ ஜெயா பச்சன்

☛ பாமெலா

### டாகுமெண்டரி படவிழா

சர்வதேச டாகுமெண்டரி, கார்ட்டூன் மற்றும் சிறுபடங்களுக்கான திரைப்பட விழா பம்பாயில் நடக்கிறது. இத்தகைய படங்களுக்கான சர்வதேசப் போட்டியில் நூற்றுக்கு மேல் டாக்குமெண்டரிகள் பங்கு பெறும். நடுவர் குழுவில் பிரிட்டன், அமெ ரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து வந்த திரைத்துறை நிபுணர்களிடையே நமது நாட்டு ஜயா பச்சனும் ஒருவர்.

– ராஜீவி நரசிம்மன்



# பறந்து உயரும் மருந்து விலைகள்!

**அத்தியாவசிய மருந்துகள் சில, சமீப காலமாகக் கிடைப்பதே இல்லை; போதாக்குறைக்கு மருந்துகளின் விலைகள் அதிகரிக்கப் போகின்றன என்ற பயமுறுத்தல், செய்தித்தாள்களில் அடிபடுகிறது.**

ஏற்கெனவே விலைவாசிகள் உச்சாணிக் கொம்பில் ஏறி, பொது மக்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதில் மருந்து விலைகளும் ஏறி, மேலும் துன்புறுத்துவது நியாயம்தானா?

''துளியும் நியாயமில்லை!'' என்கிறார் நுகர்வோர் பாதுகாப்புக்குழுத் (கன்ஸ்யூமர் புரொடெக்ஷன் கவுன்சில்) தலைவர் ஆர். தேசிகன். ''விலை உயர்வுக்குக் காரணம் மருந்து உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்தாம். இதைத்தான் அமெரிக்க நுகர்வோர் பாதுகாப்பு முன்னோடி என்று கருதப்படும் ரால்ஃப் நாடர் அடித்துச் சொல்லியிருக்கிறார், 'மல்ட்டி நேஷனல் கம்பெனிகள், வளரும் நாடுகளைச் சுரண்டி விடும்' என்று. 'இன்டெலக்சுவல் பிராபர்ட்டி ரைட்ஸ்' என்ற சட்டதிட்டங்களை ஒப்புக் கொள்ளும் எந்த நாட்டுக்கும் இந்த ஆபத்து உண்டு. நம் நாட்டின் பொருளாதார நிலை, வாழ்க்கைத் தரம் இவற்றை மனத்தில் கொள்ளாமல் ஒப்புக் கொள்ளப்படும் இம்மாதிரிச் சட்டதிட்டங்களால்தான் விலை உயர்வு ஏற்படுகிறது!''

''இது முற்றிலும் தவறு!'' என்கிறார் இந்திய மயமாக்கப்பட்ட, பன்னாட்டு நிறுவனத்தின் சென்னை அதிகாரி திரு மாதவன் குட்டி. ''பல ஆண்டுகள் ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கப்பட்டு, பல மிலியன் டாலர்கள் இவ்வகை ஆராய்ச்சிகளில் முதலீடாகப் போடப்பட்டு, பிறகே ஒரு மருந்து பொதுமக்கள் உபயோகத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. அந்த ஆய்வு, அதன் பலன் ஆகியவை மீது அந்த நிறுவனம் உரிமை கொண்டாடுவதில் தவறு என்ன? இந்த ஆராய்ச்சிக்காக, வளரும் நாடுகள் எதுவும் செலவழிப்பதில்லை. ராயல்டி தொகையாகக் கூட ஒரு பைசாவும் நாம் கொடுக்க வேண்டியதில்லை. அவர்களுடைய பங்குகளுக்கு ஏற்ற லாபத் தொகை மட்டுமே, நம்முடைய பங்குதாரர்களுக்குக் கொடுப்பது போலக் கொடுக்கப்படுகிறது. உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன்: FELDENE என்ற மருந்தை, இங்கே டோலோனக்ஸ் என்ற பெயரில் விற்பனை செய்கிறோம். அமெரிக்காவில் FELDENE க்குக் கொடுக்கப்படும்

விலையைவிட, இங்கே டோலோனக் ஸுக்கு விலை குறைவுதான். நம் நாட்டில் ஆறு ரூபாய் விலைக்குக் கிடைக்கும் ஒரு ஸ்கின் ஆயின்ட்மென்டின் விலை அங்கே கிட்டத்தட்ட 90 ரூபாய்! சிங்கப்பூரிலிருந்து வரும் சில நோயாளிகள், இங்கிருந்து திரும்பிப் போகும் போது, ஐந்நூறு, ஆயிரம், மாத்திரைகளை வாங்கிக் கொண்டு போவதற்குக் காரணம் இதுதான்! மேலும், Patent Protection என்பது செய்யப் படும் முறைக்குத்தான். பொருளுக்கு அல்ல.''

''மருந்துகள் விலைக் கட்டுப்பாடு சட்டம் எனப்படும் DPCO விலிருந்து விலக் களிக்க வேண்டும் என்பது மருந்துத் தயா ரிப்பாளர்களின் கோரிக்கை. அப்படி டி.பி. சி.ஓ.வுக்கு வெளியே விட்டால் இன்னும் எக்கச்சக்கமாக விலையை உயர்த்திவிடு வார்கள்!'' என்று குற்றம் சாட்டுகிறார் தேசிகன்.

''இது மிகத் தவறான வாதம். நீரிழிவு நோய்க்கான டயாபினீஸ் மாத்திரைகள் டி.பி.சி.ஓ.வுக்கு வெளியேதான் இருக்கின் றன. அதற்கென்று ஒரு மாத்திரை ஐந்து ரூபாய் என்று வைத்துக் கொள்ளை லாபம் அடிக்கவில்லையே? முப்பது பைசா தானே?'' என்கிறார் மாதவன் குட்டி.

''ஏராளமான பணத்தை ரீசர்ச் அன்ட் டெவலப்மென்ட்டுக்குச் செலவழிப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பணத்தைக் குறு கிய காலத்தில் எடுத்துவிட நினைப்பதால் தான், மருந்தை அறிமுகம் செய்கிற வரு டங்களில் அதிக விலை வைத்து விற்கி றார்கள்!'' என்று குறை காண்கிறார் தேசிகன்.

''அறிமுகப்படுத்துகிற சில வருடங் களில் உள்ள விலையைவிட, பிறகு படிப் படியாக இதே மருந்துகள் விலை குறைக் கப்பட்டு வந்திருப்பதை நான் சுட்டிக் காட்ட முடியும். இருபது வருடங்களுக்கு முன் விற்பனை செய்யப்பட்ட டெர்ரா மைசின் காப்ஸ்யூல் விலை சுமார் ஒன்றரை ரூபாய். இப்போது சுமார் அறுபத்தைந்து பைசா. டெர்ராமைசின் ஊசி மருந்தின் விலையும் பதிமூன்று ரூபாயிலிருந்து இப் போது மூன்று ரூபாய்க்குக் குறைக்கப் பட்டுள்ளது... என்னைக் கேட்டால், முன் னைக்கு இப்போது எந்தப் பொருளாவது விலை குறைந்திருக்கிறது என்றால், அது மருந்துகள்தான்!'' என்கிறார் மாதவன் குட்டி.


மாதவன் குட்டி

கிட்டத்தட்ட 75 சதவிகித மருந்துகள், மருந்து விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத் தின் கீழ் வருகின்றன. இதுவும் தவிர, மொத்த லாபத்தின் மீதும் கட்டுப்பாடு இருக்கிறது. மருந்து விலைகள் கட்டுப் பாட்டுச் சட்டத்தின்படி, மொத்த லாபம், விற்பனையில் எட்டிலிருந்து பதிமூன்று சத விகிதம் இருக்கலாம். ஆனால், ரிசர்வ் வங்கி வெளியிட்டிருக்கும் சமீபத்திய அறிக் கையின்படி, இது வருடா வருடம் படிப்படி யாகக் குறைந்து, ஐந்து சதவிகிதத்துக்கு வந்துவிட்டது!

செப்டம்பர் '91 வரையிலான ஆறுமாத லாப - நஷ்டக் கணக்குகள் வெளியிட்டிருக் கும் பல பன்னாட்டு, இந்திய மருந்து நிறு வனங்களின் அறிக்கைகள்படி, இந்த நிறுவ னங்கள் அத்தனையும் நஷ்டம் கண்டிருக் கின்றன!

''மருந்துத் தயாரிப்புக்கான கச்சாப் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு எது வும் கிடையாது. ஆம்பிசிலினின் ஆதாரப் பொருள் (bulk drug) விலை ஜனவரி '91 ல் ஒரு கிலோவுக்கு 1925 ரூபாய் இருந்தது. இதுவே டிசம்பரில் 3100 ரூபாய்க்கு உயர்ந்து விட்டது! அதாவது 61 சதவிகிதம். ஆனால் விற்பனைக்கு வரும் ஆம்பிசிலின் மாத் திரையின் விலை மட்டும் 5 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது! இது ஒரே ஒரு உதா ரணம்தான். கிட்டத்தட்ட எல்லா மருந்து களுக்கும் பேஸிக் டிரக் எனப்படும் மூலப் பொருள்கள் விலை எக்கச்சக்கமாக உயர்ந் திருக்கிறது. கட்டுப்படியாகும் விலைக்கு இவை தயாரிப்பாளர்களுக்குக் கிடைக்காத தால்தான், உற்பத்தி தடைப்பட்டு, மருந் துகள் தட்டுப்பாடு உண்டாகிறது!'' என்கி றார் மாதவன் குட்டி.

''மருந்துகளை பிராண்ட் பெயர் சொல்லி விற்காமல், அவற்றின் மூலப் பொருள் (ஜெனரிக்) பெயரைச் சொல்லி விற்றால், போட்டா போட்டியில் மருந் துகள் விலை நிச்சயம் குறையும்!'' என்பது தேசிகன் சொல்லும் வாதம்.

''இந்த வாதம் எடுபடாது. பாகிஸ்தா னில் இந்த முறையைக் கையாண்டு, படு தோல்வி கண்டுவிட்டார்கள். பல ஜெனரிக் பெயர்கள் வாயில் நுழையாத அளவுக்கு, நினைவில் வைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு, முழுநீளம் இருக்கின்றன. அப்



● தேசிகன்

படியே ஜெனரிக் பெயரை எழுதிவிட்டு அடைப்புக் குறிக்குள் கம்பெனியின் பெயரை எழுதுவது டாக்டருக்கா தெரியாது? அது ஒரு புறம் இருக்கட்டும். கிட்டத் தட்ட ஒரே மாதிரி உச்சரிக்கப்படும் ஜெனரிக் பெயர்கள் உண்டு. காம்போஸ் மாத்திரைக்குப் பதில் ஆன்டாசிட் மாத்திரை கொடுக்கப்பட்டுவிடும் அபாயம் இதில் இருக்கிறது. அது மட்டுமல்ல, தரம் குறைந்த மருந்துகள் விற்பனை செய்யப் படுவதற்கும் இது வழி வகுக்கும். தரமான மருந்தை உட்கொள்ளுகிறோம் என்ற நம்பிக்கையை நோயாளிக்கு அளிப்பது இந்த பிராண்ட் பெயர்கள்தான்,'' என்கிறார் மாதவன் குட்டி.

''கச்சாப் பொருட்களின் திடீர் திடீர் விலை ஏற்றம் தவிர, பாக்கிங் செய்யப் படும் அலுமினியத் தாள்கள், கண்ணாடி பாட்டில்கள், அட்டைப் பெட்டிகள் எல்லாமே இந்தப் பத்து வருடங்களில் பயங்கரமாக விலை ஏறியிருக்கின்றன. லாரி போக்குவரத்து வாடகை பல மடங்கு பெருகிவிட்டது. ஊழியர்கள் சம்பளம் விலைவாசி உயர்வுக்குத் தகுந்த மாதிரி ஏறிக் கொண்டே போய்விட்டது. மருந்துகள் விலை மட்டும் எப்படி குறைவாக வைக்க முடியும்?'' என்று கேட்கிறார் மாதவன் குட்டி.

''பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் அரசுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் பணத்தை வாரிக் கொடுக்கின்றன. பிறகு இதை மருந்துகளின் விலையின் மீது ஏற்றிப் பொது மக்களை வதைக்கின்றன'' என்ற தேசிகனின் குற்றச்சாட்டுக்கும் பதில் சொல்கிறார் மாதவன் குட்டி. ''எங்கள் நிறுவனத்தைப் (ஃபைஸர்) பொறுத்த மட்டில் நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். நாங்கள் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த ஓர் ஊழியரும் அரசுக்கோ, அரசியல்வாதிக்கோ கையூட்டுக் கொடுக்கலாகாது என்று எங்கள் நிர்வாகம் விதிமுறைகளை, பணியின் விதிமுறைகளோடு சேர்த்தே எழுதித் தந்து விடுகிறது!''


வாதங்கள் ஒரு புறமிருக்க, உயரும் விலைவாசிகளில் மருந்துகளின் விலைகளும் சேரத்தான் போகின்றன. நாமும் கொடுக்கத்தான் போகிறோம்!

– சாருகேசி


# இதற்குள்ளே ... இத்தனையா!

சோயா ...இதனைத்தான், புரதச்சத்தின் புதையலாக உலக நாடுகள் ஒப்புக் கொள்கின்றன. உடல் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் சோயாவைத்தான் விரும்புவர். அந்த சோயாவின் அதீத புரதச்சத்து உங்களைத் தேடி வருகிறது, மிக வசதியான, பயன்படுத்த எளிதான, ''விகர்'' சோயா மாவின் வடிவில்''!

50% புரதச்சத்து
100% சைவ உணவு





விகர் அம்மா... நல்ல அம்மா!

சக்தியின் தயாரிப்பு

SAS/13/92

# சிகரங்களை நோக்கி
# வைரமுத்துவின் பயணம்!

கவிஞர் வைரமுத்து எழுதி, கல்கியில் பிரசுரமான 'சிகரங்களை நோக்கி' தொடர், புத்தக உருவில் கோவையில் நடைபெறும் விழாவில் வெளியிடப்படவிருக்கிறது. அப் புத்தகத்தைப் பற்றி தமிழ்நாடு அரசின் பண்பாட்டுத் துறைச் செயலாளர் ஔவை நடராஜன், தமிழகக் காவல் துறை உயர் அதிகாரி ரவி ஆறுமுகம் ஐ. பி. எஸ். (டி. ஐ. ஜி. - சி. ஐ. டி. - சிவில் சப்ளைஸ்) இருவரும் விமர்சித்து உரையாடுகிறார்கள் :



ரவி

**ஔவை நடராஜன் :** என்ன ரவி ஆறுமுகம்! எப்படி இருக்கிறீர்கள்? பார்த்து ரொம்ப நாளாகி விட்டது... உங்களுக்குப் புத்தகங்கள் மீதுள்ள ஆர்வம் எனக்கு மிக நன்றாய்த் தெரியும். பொறியியல் படித்த பின், சட்டம் பயின்று, அதன் பிறகு ஐ.பி. எஸ். தேறி காக்கிச் சட்டையணிந்த இலக்கியவாதியாயிற்றே நீங்கள். நான், உங்களுடைய வீட்டு நூலகத்திலிருந்து நிறையப் புத்தகங்களை எடுத்துச் சென்று படித்தவன் மட்டுமில்லை, படித்த புத்தகங்களை ஒழுங்காகத் திருப்பித் தந்து விட்டவனும் கூட!

**ரவி ஆறுமுகம் :** (சிரித்தபடி) என் நூலகத்தில் லேட்டஸ்ட்டாய் வந்து சேர்ந்திருப்பது கவிஞர் வைரமுத்து எழுதிய 'சிகரங்களை நோக்கி' என்ற புத்தகம். அதைப் படித்தவுடன் என் மனத்தில் ஏற்பட்ட உணர்வுகளை உங்களைப் போன்ற இலக்கியவாதி ஒருவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் விரும்பினேன்.

**ஔவை :** நான் கூட வைரமுத்து எழுதிய அந்தப் புத்தகத்தை மூன்று நான்கு நாட்களுக்கு முன்புதான் படித்து முடித்தேன். அவர் மாணவராய் இருந்தபோதிலிருந்தே அவர் எழுத்துக்களைப் படித்து ரசித்து மகிழ்ந்து வருபவன் நான். ஆரம்ப கால எழுத்துக்களைப் படித்தபோதே, இவர் பிற்காலத்தில் தனக்கென ஓர் இடத்தை இலக்கிய உலகில் பிடிப்பார் என்று அவர் மீது நம்பிக்கை வைத்தவன். என் நம்பிக்கை வீண் போகவில்லை.

**ரவி :** இதுகாறும் நாம் லெபனான் நாட்டுக் காடுவெளிகளில் பிரவேசித்து, அங்கேயுள்ள புல்புல் பறவைகளின் சங்கீதத்தை மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தோம். இப்போது இப் புத்தகம் மூலமாய் நாம் நன்கறிந்த போடிநாயகனூர் பள்ளத்திற்கு அழைத்துச் சென்று, மண் மணம் கமழும் கரிச்சான் குஞ்சுகளின் ஒலி நயத்தை நாம் கேட்டு மகிழச் செய்திருக்கிறார் வைரமுத்து.

**ஔவை :** இந்தப் புத்தகத்தை நான் ஒரு ''4 இன் 1'' புத்தகம் என்பேன். பாருங்களேன். முதலாவதாக, இது கவிதை நடையில் எழுதப்பட்ட ஓர் உரைநடைநூல். இரண்டாவதாக, முழுமையாய்க் கதை வடிவம் கொண்ட ஒரு நூல். மூன்றாவதாக சில தத்துவச் சிந்தனைகளை வரைந்து காட்டிய நூல், நான்காவதாக, தமிழில் விஞ்ஞான உண்மைகளை எளிய முறையில் சொல்ல முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அமைந்த நூல்.

**ரவி :** ''இந்தப் பிரபஞ்சம் என்னுள் எழுப்பிய சில கேள்விகளை, அலங்காரத்தோடு உங்கள் சபைக்கு அழைத்து வருகிறேன்'' என்கிறார் வைரமுத்து. அழைத்து வரும் பாணியே அலாதியாய் இருக்கிறது. அவருடைய திருஞானம் பாத்திரம் - மழையில் நனைவதில், நிலவைப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறான். கற்பனை உலகில்

சஞ்சரிக்கிறான். இங்கே நான் பிரெஞ்சு தேசத்துப் புரட்சி எழுத்தாளரான ரூசோ வின் நோபின் சாவேஜைக் காண்கிறேன். முழுமையான யதார்த்தவாதியான ஓவியா வின் பாத்திரத்திலே கலீல் கிப்ரானின் 'உடைந்த சிறகுகளி'ல் வரும் 'சில்வா' வைப் பார்க்கிறேன்; தாகூரின் 'ஊர்வசி' படைப்பின் தாக்கத்தைப் பார்க்கிறேன். அதே போல, விரக்தியில் இவ்வுலகை அழிக்கத் துடிக்கும் விஞ்ஞானியின் பாத்திர மும் அழுத்தமானதுதான்.

ஔவை : ஒரு கோணத்தில் பார்த்தால், வைரமுத்துவே, தன்னைத் திருஞானம் என்ற கதாபாத்திரத்தின் மூலமாய் மக்க ளுக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறாரோ என்று கூடத் தோன்றுகிறது! 'உள்ளுவதெல் லாம் உயர்வுள்ளல்' என்பதற்கு மாறாக உயர்ந்த ரசனையற்ற மக்களைக் கண்டு அவர் மனம் ஒரு சோகத்தில் ஆழ்ந்து போயி ருப்பது புரிகிறது. அதே சமயம் வாழ்க் கையின் அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தியாகாத மக்களிடம் உயர் ரசனை உணர்வை எப்படி எதிர்பார்க்க முடியும் என்ற யதார்த்த நோக்கும் இவருக்கு இருக் கிறது. இவர் கொண்டுள்ள மனித நேயம் என் நெஞ்சை உருக்கி விட்டது. ஓரிடத்தில் பாருங்கள்:

''மழை வந்தால் தவிர, இந்த ஏழைகள் எங்கே குளிக்கப் போகிறார்கள்?'' என் கிறார். கவிதைச் சாறுபிழிந்த அவரது உரைநடை வரிகளைப் படிக்கிற போது எனக்கு உடம்பு சிலிர்த்தது. ஆனாலும், வைரமுத்து, முடிவாக என்ன சொல்ல வரு கிறார் என்பது எனக்குப் பிடிபடவில்லை. ஒரு விஞ்ஞானி இருக்கிறானாம்; அவ னுக்கு வாழ்க்கையில் ஒரு ஏமாற்றம். உடனே வாழ்க்கையே கசந்து போய் உலகத் தையே பழிவாங்கத் துடிக்கிறானாம். இது தான் ஒரு விஞ்ஞானிக்கு அழகா? எனக்குப் புரியவில்லை. வாழ்க்கையே ஒரு போராட் டம்தானே!

ரவி : விஞ்ஞானியின் விரக்திக்கு ஆழ மான காரணமில்லை என்ற உங்கள்

▬ ஔவை




முட்டை, பால், மட்டன், பருப்பு ... இவற்றை விட வலிமை!

புரதம் அதிகமாயிருக்கும் உணவெல்லாம் விலையிலும் அதிகம். பால், முட்டை, மட்டன், போன்றவை எல்லாம் இப்படித்தான். இந்த நிலை இனியில்லை. ''விகர்'' சோயா மாவு வந்து விட்டது. பாலையும், முட்டையையும், மட்டனையும் விட புரதச்சத்து நிறைந்த ''விகர்'' மாவில் 10-15% வரை உங்கள் உணவில் கலந்தால் போதும். உங்கள் உணவு சத்துணவாகும்.

50% புரதச்சத்து
100% சைவ உணவு




விகர் அம்மா... நல்ல அம்மா!

சக்தியின் தயாரிப்பு

SASI / 13 / 92

கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். கதையில் விஞ்ஞானிக்கு ஏற்படும் ஏமாற்றம் அவரைப் பொறுத்தவரை தாங்க முடியாததாக இருக்கிறது. மேலும் விஞ்ஞானம், அழிவை நோக்கிப் போகக் கூடாது என்பதுதான் வைரமுத்து தரும் செய்தி. ஓர் இடத்தில், ''மனிதா! உன் விஞ்ஞானம் விண்வெளிக்குப் போகப் போக, உன் மனிதாபிமானம் மண் குழிக்குள் போகிறதே!'' என்பதிலிருந்து இது புரிகிறதே!

**ஔவை :** ''நீங்கள் கனவுலகிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உழைப்புதான் உயர்வு'' என்று அவர் சுட்டிக்காட்டும் இடங்கள் மகத்தானவை. ''இன்றைய இளைஞர்கள், தங்கள் பாதத்தைப் பூமியில் பதித்து விட்டு, வானத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கனவுகள் வாழ்க்கையாதலால், வாழ்க்கையே இன்று கனவாகிப் போய் விட்டது. கிழிந்த பாயில் படுத்துக் கொண்டு, அவர்கள் கிளியோபாட்ராவை அணைக்கிறார்கள். அவர்கள் செருப்பில்லாத பாதத்தோடுதான் அலைகிறார்கள். ஆனால் அவர்கள் கால்களில் நட்சத்திரங்கள் குத்துகின்றன'' என்றெல்லாம் வரும் வரிகள் வெகு யதார்த்தம்.

**ரவி :** ''எனக்குச் சிற்பம் தெரியாது; சித்திரம் வராது சங்கீதம் முடியாது; ஆனால் உளி, தூரிகை, வயலின் செய்யும் அத்தனை வேலைகளையும் என் பேனா செய்யும்'' என்கிறாரே! அதற்கு அத்தாட்சியாய் இது போன்ற வரிகள் நிறைய வருகின்றன. புதுமைப் பெண்ணைப் பற்றிக் கூறும் போது, ''நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை'' என்றெல்லாம்தானே குறிப்பிடுவார்கள். அந்த வரிசையில் இன்னொன்றையும் வைரமுத்து சேர்த்திருக்கிறார். ''அவள் அச்சத்தையே காலணியாய்ப் போட்டிருக்கிறாள்'' என்று ஓவியாவைக் கம்பீரப்படுத்துகிறவர் இன்னும் மேலே சென்று ''பெண்பால் சூரியன்'' என்றும் வர்ணிக்கிறார்.

**ஔவை :** ''கலை, கலைக்காகவே'' என்பார்கள் ஒருசிலர். 'கலை, மக்களுக்காகவே' என்பார்கள் வேறு சிலர். 'கலை, என்பது சில லட்சியங்களைச் சொல்லுவதற்காகவே' என்பார்கள் இன்னும் சிலர். முதல் இரு கருத்துக்களுக்கும் வடிவம் கொடுப்பது போல திருஞானம், ஓவியா, ஆகியோரைப் படைத்திருக்கிறார் வைரமுத்து. கலை என்பது சில லட்சியங்களுக்காக என்று தொடங்கி, துரதிருஷ்டவசமாய்த் திசை திரும்பி, முடிந்து போகிற விஞ்ஞானி மூன்றாவது ரகம். மானுடமும் மனிதநேயமும் எட்ட வேண்டிய சிகரத்தை இன்னும் எட்டவில்லை. அந்த சிகரத்தை எட்டுவதற்கு என்ன வழி என்று மூன்று முரண்பட்ட கதாபாத்திரங்கள் மூலமாய்ச் சொல்ல வருகிறார் வைரமுத்து.

இதையும் தவிர, தாம் பல்வேறு சமயங்களில் அறிந்து கொண்ட, பல செய்திகளையும் வைரமுத்து ஆங்காங்கே தெளித்துள்ளது பாராட்ட வேண்டிய மற்றொரு அம்சம். அம்மை நோய் தாக்கியவர்களின் போர்வைகளைச் செவ்விந்தியர்களுக்குத் தந்தது பற்றிய குறிப்பைப் படிக்கும் போது நெஞ்சு கலங்குகிறது.

**ரவி :** அடுத்து காதலைப் பற்றி அவர் எழுதும் போது நெஞ்சம் கரைகிறதே!

**ஔவை :** ''சிற்பம், ஓவியம், இசை மாதிரிதான் காதலும்'' என்று கூறும் வைரமுத்து, அது எப்படி என்று விளக்கமும் தருகிறார். ''காதல் ஓர் அத்வைதம். கலந்து போ; கரைந்து போ; காணாமல் போ. இது தான் காதலுக்கும், கலைக்கும் தேசிய கீதம்!'' என்கிறாரே!

**ரவி :** காதலைக் காமத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டியிருக்கிறாரே அதை நான் மிகவும் ரசித்தேன். ''பாச உணர்ச்சி மட்டுமே காதல் என்றால், ஒரு பிராணி போதும். பாலுணர்ச்சி மட்டுமே காதல் என்றால் ஒரு விலைமகள் போதும். ஆனால் இந்த இரண்டும், எந்தப் புள்ளியில் சந்தித்துக் கொள்கின்றனவோ அதுதான் காதல்!'' வைரமுத்துவின் படைப்புகளில் தலையாயது இது என்றாலும் கூட, இது முற்றுப் பெற்ற நூல் அல்ல என்பது என் அனுமானம். பிரபஞ்சம் எழுப்பியுள்ள ஒருசில கேள்விகளுக்கு மட்டுமே, கவிஞர் இதில் விடைகாண முயற்சி செய்துள்ளார். புத்தகத்தில் பிற்பாதியில், கவிஞர் கதையை முடிக்க வேண்டும் எனக் கொஞ்சம் அவசரப்பட்டிருப்பது போலத் தெரிகிறது. இது சிகரங்களை நோக்கிய பயணத்தில் சிறிது சரிவுதான்.

**ஔவை :** எனக்கும் கூட லேசான வருத்தம் என்னவென்றால், திருஞானத்துக்கும், ஓவியாவுக்கும் திருமணம் செய்து வைத்திருக்கலாம். (சிரிப்பு) வாசிப்பதற்கு மட்டுமில்லை; வாசித்த பிறகு யோசிப்பதற்கும்தான் புத்தகங்கள் என்கிற வகையில் பார்த்தால், 'சிகரங்களை நோக்கி' புத்தகத்தைப் படித்த பின், அடுத்த சில நாட்களுக்கு அந்த விஞ்ஞானி என் எதிரே நிற்பது போலவும், ஓவியாவும், திருஞானமும் மலைச் சரிவில் பேசியபடி நடந்து போவது போலவும் எனக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. அதுதான் எழுத்துக்கு வெற்றி என்று நான் கருதுகிறேன்.


தொகுப்பு : எஸ். சந்திரமௌலி
படங்கள் : யோகா

# நல்ல அம்மாவுக்கு நல்லாத் தெரியுமே!

அம்மாவுக்குத் தெரியுமே.....



வளரும் பிள்ளைகளுக்கு வலிமை தரும் புரதச்சத்துடைய உணவு தான் தேவையென்று. வலிமை தரும் உணவுக்கு சோயாதான் சரியான மூலமென்றும் அம்மாவுக்குத் தெரியும். அதனால்தான் அவரின் தினசரி சமையலில் "விகர்" தவிர்க்க முடியாததாகி விடுகிறது. சமையலில் 10-15% "விகர்" கலந்தால் போதும். மொத்த உணவுமே சத்துணவாகிறது.



சப்பாத்தி, பூரி, இட்லி தோசை போன்றவற்றுக்கு மட்டுமின்றி ஜிலேபி, பக்கோடா போன்றவற்றுக்கும் "விகர்" உன்னதமான கலவையாகத் திகழ்கிறது.

**"விகர்" ஒவ்வொருவருக்கும் உகந்த உணவு**

விளையாட்டு வீரர்களுக்கு. "விகர்" வலிமையை சேமித்து வெற்றியினைத் தருகிறது.




தாய்மை நிலையிலுள்ள பாவையருக்கு. ஊட்டச்சத்து மிகுந்த உணவாய்த் திகழ்கிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு உணவு முறையை சமப்படுத்தி உறுதுணை புரிகிறது.

**சக்தி சோயாஸின் "விகர்"**

ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தின் தொழில் நுட்ப உதவியோடு தரமுயர்ந்த சோயாபீனில் தயாராகி வருகிறது "விகர்".

**உன்னதமான உணவுக்கலவை**





100%
சைவ உணவு
50%
புரதச்சத்து



*விகர் அம்மா... நல்ல அம்மா!*

சக்தியின் தயாரிப்பு

SASI/13/92


இனிங்க பாருங்க... அதையும் மேலேதான் உட்கார்ந்து இருக்கீங்க!
வசூலிக்கப்படாத வரிகள் 497 கோடி
நரசிம்மராவ்
இந்தியா பாகிஸ்தான் நல்லுறவு முயற்சி
காஷ்மீர் பிரச்னையில் பாக். 'பந்த்'துக்கு ஆதரவு
மூன்றுமுறை இருக்கானுன்னு எழுதிக்காத்தான் இனிமே பேரணிக்கு அனுமதி!
அ.தி.மு.க. குண்டர்கள்
ஜெயலலிதா
அங்கே மட்டும் என்ன வாழுதாம்? சிதம்பரம் காரு நொறுங்கினது மறந்து போச்சா!
கருணாநிதி
தி.மு.க. குண்டர்கள்



கல்கி

1992
பிப்ரவரி 16
மலர் : 50
இதழ் : 29
பிரஜோத்பத்தி
மாசி 4


# பரங்கிமலையில் அடிதடி; சின்னமலையில் கல்லெறி!

தமிழக அரசியல் தலைவர்கள் தங்கள் தொண்டர்களிடையே சகிப்புத்தன்மை வளரப் பாடுபடவேண்டும். இல்லையெனில் ஜனநாயகம் இங்கே தடிநாயகமாகிவிடும்.

பரங்கிமலை கண்டோன்மெண்டில் தேர்தல் நடக்கிறது எனில் அதிக இடங்களைப் பெறுவது தி.மு.கவா, அ.தி.மு.கவா என்பதை விட, தேர்தல் அமைதியாக நடந்ததா என்பது முக்கியம்.

தடா சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வதை எதிர்த்துக் கருணாநிதி ஊர்வலம் போகிறார் எனில், அவரது கோரிக்கை ஏற்கப்பட்டதா இல்லையா என்பதைவிடவும், பேரணி அமைதியாக நடந்ததா என்பது ஜனநாயகத்துக்கு அதிமுக்கியமானது.

இவ்வாறு நடக்கவில்லை; வன்முறையே தலைவிரித்தாடியது என்பது நம் அனைவருக்குமே தலைகுனிவு. பரங்கிமலை கண்டோன்மெண்ட் தேர்தலில், அடிதடியில் இரு கட்சியினரும் இறங்க, பலருக்கும் காயம், சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதி என்று சோகக் கதை உருவாகிறது.

பேரணியின் போது, கருணாநிதி ஆளுனரிடம் கோரிக்கை சமர்ப்பித்துத் திரும்பு முன்னர், சின்னமலைப் பகுதியில், கல்லெறிதல், துப்பாக்கிச் சூடு, பஸ் உடைப்பு - எரிப்பு, ஒருவர் மரணம் என்று சோகக் கதை தொடர்கிறது.

அ.தி.மு.க. தொண்டர்கள் குற்றம் புரிந்தார்களா அல்லது தி.மு.க. தொண்டர்கள் முதலில் வம்புக்கு இழுத்தார்களா என்றெல்லாம் வாதம் நடக்கும். கட்சிப் பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்க்கட்சி மீது குற்றம் சாட்டி எழுதி, வன்மத்தை வளர்க்கும். இதனாலெல்லாம் தீ அணையாது. உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியவே செய்யும்.

வன்மத்தை வளர்ப்பதற்குப் பதில் தலைவர்கள், தொண்டர்கள் மத்தியில் விவேகத்தை வளர்க்க வேண்டும். இன்றைய நிலையில் தி.மு.க. தொண்டர்கள் சாதுக்களும் அல்ல; அ.தி.மு.க. தொண்டர்கள் வாயில் விரல் வைத்தால் கடிக்கத் தெரியாதவர்களும் அல்ல. பா. ம. க. தொண்டர்கள் மற்ற இருவருக்கும் சளைத்தவர்களும் அல்ல. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. கட்சித் தலைவர்கள் இது பற்றிச் சிந்திப்பதற்குப் பதில், ஒருவர் மேல் ஒருவர் பழி சுமத்திக் கொண்டும், ஒருவரை ஒருவர் தாக்கி அறிக்கை விட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

''தி.மு.க இனி ஊர்வலம் நடத்த வேண்டுமானால் வன்முறை இராது என்று அதன் தலைவர் எழுதித் தர வேண்டும்'' என்று முதல்வர் நிபந்தனை போடுவது நிச்சயம் சகஜ நிலை உருவாக உதவப் போவதில்லை. அதே போல், '''ஜெ' சர்வாதிகாரியாகச் செயல்படுகிறார்'' என்ற பண்ருட்டியாரின் அறிக்கையும், ''மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் காரை அ.தி.மு.க. தொண்டர்கள் தாக்கவில்லையா?'' என்று கருணாநிதி கேட்பதும் பரபரப்பு தேடும் பத்திரிகைகளுக்குத் தீனி போட்டதாக ஆகுமே தவிர, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்காது.


அந்த அந்தக் கட்சித் தலைவர்களும் தங்கள் தங்கள் வீட்டைச் சுத்தப்படுத்தட்டும். தேள்களையும் நட்டுவாக்காளிகளையும் வெளியேற்றட்டும். பாக்கி இருக்கும் தொண்டர்களிடம் ஜனநாயகப் பற்றையும் சகிப்புத் தன்மையையும் வளர்க்கட்டும்.

இப்படிச் செய்யும் போதுதான் தமிழகம் தலை நிமிரும்.



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்

# 'பெற்றோருடன் பேச என்ன இருக்கு!'




"எங்கே போறே...?" இரவு ஏழு மணியை நெருங்கும் கடிகாரத்தையும், கவிந்து சூழும் இருளையும் கவலையாகப் பார்த்தபடி அம்மா கேட்பாள்.

"வெளியே போறேன்!" அலட்சியப் பதிலுடன் வாசல் கதவை அறைந்து சார்த்தி விட்டுப் போவான் மகன்.

"சித்த டீ.வி.யை அணைச்சுட்டு ஏதாவது உருப்படியா பண்ணக் கூடாதா...? நாங்கள்லாம் சின்னவாளா இருக்கற போது..." இப்படியொரு அப்பாவோ அம்மாவோ பேச ஆரம்பித்தால்...

"சும்மா உன் பழைய கதையைப் பேசாதே!" என்ற கோபமான பதில்தான் வரும் மகனிடமிருந்து.



"நான் என்ன தப்பு செய்தேன்னே புரியலை" என்கிறார் ஒரு ஐம்பது வயதுத் தாய். "என் பிள்ளைக்காக நான் செய்யாததே எதுவுமில்லை... ஆனால் அவன் என்னை லட்சியமே பண்றது இடையாது. அவனுக்கு எதுலயுமே நிஜமான அக்கறை இல்லை..."

தாய் இப்படிப் புலம்ப, இருபது வயது மகன் சொல்வதைக் கேளுங்கள் :

"அம்மாவுக்கு என் மனசு புரிகிறதே இல்லை... எனக்கு எவ்வளவோ ஜோலி இருக்கு... நான் வீட்டில் உட்கார்ந்துக்கிட்டு அவ புலம்பறதையா கேட்டுக்கிட்டிருக்க முடியும்....!"



தலைமுறை இடைவெளி என்று இந்தப் பிரச்னைக்கு முத்திரை குத்தி; இது பாட்டன் முப்பாட்டன் காலத்திலயும் இருந்தது என்று ஒதுக்கி விட முடியாது. இன்றைக்கு இருக்கிற தலைமுறை இடைவெளியின் பரிமாணம் அச்சுறுத்துவதாக உள்ளது.

"இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன் பெற்றோரும் குழந்தைகளும் ஒரே மாதிரியான உலகத்தில் தான் வாழ்ந்தார்கள். தந்தையும் மகனும் அதிகம் பேசிக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் வளர வந்த சூழ்நிலை ஒன்றுதான்" என்கிறார் மனநல நிபுணர் டாக்டர். சி. ஆர். சந்திரசேகர். அவர் மேலும் கூறுகிறார் :



"பெற்றோரின் உலகமும் குழந்தைகளின் உலகமும் இன்று வெவ்வேறாகி விட்டன. குழந்தைகளின் உலகம் பெரியவர்களுக்கு அந்நியமாகத் தோன்றுகிறது. டீன் ஏஜில் ஆரம்பிக்கும் விலகல் வெகு சுலபத்தில் அளவு கடந்து போய் விடும் வாய்ப்புக்கள்



இன்று அதிகம். இதைத் தவிர்க்க, பெற்றோர் தங்கள் குழந்தைகளைச் சுய சிந்தனை உள்ள நபர்களாக மதித்துப் போற்ற வேண்டும். மிகச் சிறிய வயது முதல் கண்டனங்களையே கேட்டுக் கேட்டு வளரும் குழந்தை விவரம் தெரியும் வயதை எட்டும் போது பெற்றோரிடம் எதையும் சொல்லவே பிடிக்காமல் மறைத்து விடும் அபாயம் உண்டு. எதைச் சொன்னாலும், திட்டத்தானே போகிறார்கள் என்ற தீர்மானத்தில் இளைஞர்களும் யுவதிகளும் வீட்டில் சொல்லாமலே சில சமயம் தவறான செயல்களிலும் பல சமயம் சரியான செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். விலகல் நிரந்தரமாகி விடுகிறது...

''குழந்தைகளை வையாமல்... வேறு விதமாகவும் உங்களை விட்டு விலகச் செய்ய முடியும்'' என்கிறார் டாக்டர் சந்திரசேகர். ''உங்கள் ஆசைகளையும் குறிக்கோள்களையும் அவன் மீது திணித்து, 'அவன் ஒரு டாக்டராகவோ, விஞ்ஞானியாகவோ, டென்னிஸ் வீரனாகவோ வர வேண்டும்' என்று சிறு வயது முதலே அவனை முடுக்கி விடுகிறார்கள் பெற்றோர்கள். ஆனால் குழந்தைக்கு அதற்கான ஆர்வமோ தகுதியோ ஆளுமையோ இருக்கிறதா என்று சிறிதும் பார்ப்பதில்லை. அவன் ஒரு நல்ல மனிதனாக மலர வேண்டும், சிறந்த மதிப்பீடுகள் அவனுக்கு இருக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. பரீட்சை மார்க்குகளும் பந்தய வெற்றிகளும் மட்டுமே அளவுகோல்களாக, மனிதப் பண்புகளின் முக்கியத்துவம் மறக்கப்படுகிறது. விளைவு பெற்றோருடனே ஒட்டாமல் குழந்தைகளுக்கு மனத்தளவில் விலகல் உண்டாகிறது.''

குழந்தைகளுக்குச் சிறந்த மதிப்பீடுகள் (values) இருக்க வேண்டுமெனில் பெற்றோருக்கும் அவை இருக்க வேண்டுமல்லவா...? ஆனால் இன்றைய வாழ்க்கையில் வியாபாரத் தன்மையே மலிந்து மேலோங்குகிறது. பெற்றோர்கள் பலர் லஞ்சம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகிறார்கள். வாழ்க்கையின் சௌகரியங்களைப் பெருக்கிக் கொள்வதை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குழந்தைகள் இவர்களிடம் பொய் சொல்வதையும் உண்மைகளை மறைப்பதையும் மட்டும் இவர்களால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

★ கவேதா கூறுவதைப் பாருங்கள் :

''என் அப்பா எனக்கொரு நியாயமும் மற்றவர்களுக்கு ஒரு நியாயமும் வைத்திருக்கிறார். என் உறவுக்காரப் பெண் ஜாதி விட்டு மணந்ததை அவர் ஆட்சேபிக்கவில்லை; ஆனால் நான் அப்படியொரு திருமணத்தை விரும்பினால் எதிர்க்கிறார்.''



''என் அப்பா தன் பிஸினஸைக் கவனித்

★ இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள பெயர்கள் யாவும் (டாக்டர் சந்திரசேகர் தவிர) கற்பனையே. சம்பவங்கள் உண்மை.



துக் கொள்ள நான் முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆனால் எனக்கு அதில் ஆர்வமில்லையே...'' என்கிறார் ஆனந்த். இவர் கிரிக்கெட் ஆடி மாதம் சுமார் மூவாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார். பிஸினஸில் இன்னும் அதிகமாகச் சம்பாதிக்கலாம் என்று அப்பா வற்புறுத்துகிறார்.

பிள்ளைகளின் உணர்வுகள் மதிக்கப் படாததால் அவர்களும் பெற்றோரின் உணர்வுகளை மதிப்பதில்லை.

''என் அப்பா அம்மாவிடம் என் 'சொந்த விஷயங்களையெல்லாம்' நான் சொல்லிக் கொண்டிருக்க முடியாது'' என்கிறார் பட்டப்படிப்பின் இறுதியாண்டில் உள்ள அல்கா. ''ஆண்கள் எனக்கு நண்பர்களாக இருப்பதையே அவர்களால், ஏற்றுக் கொள்ள முடிவதில்லை...''

''ஆண் நண்பர்கள் இருப்பதிலும் டிஸ்கோவுக்குப் போவதிலும் தவறு என்ன...?'' என்று கேட்கும் அல்காவின் தோழி ஆர்த்தி, ''பெற்றோர்கள் சில விஷயங்களை இயல்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. ஆனால் அவர்கள் இந்த விஷயங்களைப் பற்றி எங்களுடன் பேசவோ விவாதிக்கவோ முன் வருவதேயில்லை...'' என்று சாடுகிறார். இதன் விளைவு என்ன? மாதம் ஒருமுறை தன் பாய்ஃபிரண்டுடன் 'டிஸ்கோ'வுக்குச் செல்லும் ஷ்ரத்தா, ''நான் வீட்டில் பொய் சொல்லி விட்டுத்தான் போகிறேன். இல்லாவிட்டால் இரு தரப்பினரும் நிம்மதியாக, சந்தோஷமாக இருக்க முடியாது...'' என்கிறார்.

இந்தப் பெண்கள் எல்லோருமே அம்மாக்களுடன் மட்டும் ஓரளவு உணர்வு பூர்வமான பந்தம் இருப்பதை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அதற்காக இவர்கள் அம்மாவுடன் மனம் விட்டுப் பேசி விடுவதில்லை!

''சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கறதுக்கு என்கிட்டே ஒரு ஐடியா இருக்கு!''

''என்ன அது?''

''இந்த மாதக் கடைசிக்குள்ளே பெங்களூரிலோ சென்னையிலோ திருவனந்தபுரத்திலோ உயர்நீதி மன்றத்துக்கு வீரப்பன் வந்து ஆஜராக வேண்டும்னு உத்தரவு போட்டுட்டாப் போச்சு!''

- ப. விஜயபாலன்




மேற்கத்திய கலாசார பாதிப்புகளைச் சமுதாயம் அழுத்தமாக உணர்ந்து வருகிறது. இந்த பாதிப்புகளால் இளைய தலைமுறை கலபமாக மாறி வர, பெற்றோர்கள் அதை ஏற்க மறுக்கிறார்களா...? அல்லது இளைஞர்கள் கண்மூடித்தனமாக அமெரிக்க வாழ்க்கை முறையைப் பின்பற்றத் துணிகிறார்களா...? தவறு யார் பேரில்...? மீண்டும் டாக்டர் சந்திரசேகர் விளக்குகிறார் :

''பெற்றோர்கள்தான் குழந்தைகளைக் குழப்புகிறார்கள். வீட்டில் ஒரே அறையில் குழந்தைகளுடன் அமர்ந்து ஸ்டார் டீ.வி.யில் மேற்கத்திய இசையை, நடனத்தை இவர்கள் ரசிக்கிறார்கள். அதில் தரக்குறைவாக, பண்பாட்டுக்கு ஒவ்வாததாக எதுவும் இருப்பதாகக் குழந்தைக்கு உணர்த்தப் படுவதில்லை... ஆனால் குழந்தைகள் அதே டிஸ்கோவுக்குப் போகும் போது பிரச்னை வெடிக்கிறது!... இதுவரை தங்கள் மகனோ மகளோ வாழ்க்கையில் 'வெற்றி பெற' வேண்டும் என்று மட்டுமே எண்ணிய பெற்றோர்கள் அவர்கள் பண்பாளர்களாகவும் இருக்க வேண்டும் என்று திடீர் விழிப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் பிள்ளைகள் அவர்களை விட்டு விலகி வெகு காலம் ஆகியிருக்கும்...

''இந்த விலகல் ஏற்பட்டு விட்டால் குழந்தைகள் தங்கள் மதிப்பீடுகளை நண்பர்கள் வட்டத்தின் சிந்தனையையொட்டியே வளர்த்துக் கொள்கிறார்கள். இந்தக் காலத்தில் நண்பர்கள் வட்டம் என்பது பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டதாக இருக்கிறது. சில விரும்பத்தகாத பாதிப்புகளைத் தவிர்க்க வேண்டுமெனில் குழந்தைகளின் வேர்கள் குடும்பத்தில் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் பெற்றோரின் பொறுப்பு குழந்தைகளின் பால பருவத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். பதினெட்டு வயதைக் குழந்தைகள் எட்டும் போது பெற்றோர் விழித்துக் கொண்டு பயனில்லை.''

சிறு வயதில் பாரதி பாடல்களும் ராமாயணமும், பாரதமும் புராணக் கதைகளும் கேட்டு வளர்ந்த கீதா கூறுகிறார்: ''இன்றைக்குப் பெற்றோர்களுக்குக் கதை சொல்லிக் குழந்தைகளை வளர்க்க நேரம் இல்லை. புராணக் கதைகள் இவர்களை 'காமிக் புத்தக' வடிவில் எட்டுகின்றன. தருமர் காத்த சத்தியத்தின் உன்னதத்தை, சீதையுடைய கற்பின் வலிமையை அச்சடித்த எழுத்துக்களில் - அதுவும் காமிக் புத்தகங்களில் - தெரிந்து கொள்வது எப்படி? அதையே உணர்ச்சிபூர்வமாக அப்பாவோ அம்மாவோ சொல்லக் கேட்பது எப்படி? அவ்வாறு கதை சொல்லப்படும்போதே

# தனச் சக்ரா உங்கள் குடும்பத்தினரை அணைத்து பாதுகாப்பு அளிக்கிறது...



## லக்ஷ்மி விலாஸ் வங்கி

## தனச் சக்ரா டெபாசிட்

### 65 மாதங்களில் உங்களது முதலீடு இரு மடங்காகிறது.

உங்கள், உங்கள் குடும்பத்தினர் வளமைக்கு தனச் சக்ரா டெபாசிட் ஒரு வழி வகுக்கிறது. உங்களுக்கு சேவை செய்வதே எங்கள் முதல் குறிக்கோள். லக்ஷ்மி விலாஸ் வங்கி, உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு தனச் சக்ரா டெபாசிட் திட்டத்தின் கீழ் வளரும் உங்கள் டெபாசிட்டை மீண்டும் முதலீடு செய்து மேலும், மேலும் வட்டியும் முதலுமாய் வளரச் செய்கிறது.

10 வருடங்களில் வளர்ந்த உங்கள் முதலீட்டுத் தொகை உங்கள் குழந்தைகளின் மேற்படிப்போ, திருமணமோ அல்லது உங்கள் தொழிலில் முதலீடு செய்வதோ போன்ற பெரிய தேவைகளைப் பூர்த்தி செய்யும். உங்கள் திட்டமிட்ட இன்றைய தனச் சக்ரா சேமிப்பு, நாளை உங்கள் குழந்தைகளின் எதிர்கால லட்சிய கனவுகளை நனவாக்கும்.

**LVB** — ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகாட்டி.

தனச் சக்ரா டெபாசிட்
திட்ட கால அட்டவணை

| டெபாசிட் தொகை | திட்ட கால முடிவில் நீங்கள் பெறும் தொகை. | | |
|---|---|---|---|
| | 24 மாதங்கள் | 72 மாதங்கள் | 120 மாதங்கள் |
| 100 | 127 | 215 | 359 |
| 1,000 | 1,267 | 2,155 | 3,594 |
| 10,000 | 12,668 | 21,546 | 35,942 |

- 13% வட்டி
- கனிவான சேவை

**லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்**
பதிவு அலுவலகம்: கரூர்.

ADWAVE/LVB/4289 TAM A

**LVB — உங்கள் தேவைகளை உணர்ந்த வங்கி.**

பண்புகள் திணிக்காமல் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பகிர்தலுக்கும் வளர்ச்சிக்கும் பெரிய எதிரி டீ.வி. பெரும்பாலான பெற்றோர்கள் பாகுபாடு இன்றி எல்லா டீ.வி. நிகழ்ச்சிகளையும் பார்க்க உட்கார்ந்து விடுகிறார்கள். வீட்டின் நிகழ்வுகள் எல்லாம் டீ.வி. நிகழ்ச்சிகளின் நேரத்தைப் பொறுத்தே திட்டமிடப்படுகின்றன...''

கல்லூரிப் பேராசிரியையும் ஆங்கிலத்தில் புராண, இதிகாச விரிவுரைகள் நிகழ்த்துபவருமான பிரேமா பாண்டுரங்கன் ஒரு முறை சொன்னார் :

''நமது விலைமதிப்பில்லாத செல்வம் ஆன்மிகச் செல்வமே... அதை இளைய தலைமுறைக்கு வழங்காமல் ஒரு தலைமுறையினர் அனைவருமே தவறு செய்து விட்டனர். அதனால்தான் நம் இளைஞர்கள் மத்தியில் இவ்வளவு குழப்பங்கள்....''

அந்தத் தலைமுறையின் தவறு தொடர்கிறது என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. கலாசார வேர்களின்றி இளைஞர்களும் யுவதிகளும் குழப்பத்தில் உலா வருகிறார்கள். அமெரிக்க சுதந்திரத்தை விழையும் இவர்கள் பொருளாதார ரீதியில் அதை அனுஷ்டிப்பதில்லை. அமெரிக்காவில் பதினெட்டு வயதுப் பையன் அப்பாவின் சம்பாத்தியத்தில் 'கேர்ள் ஃப்ரெண்டை' டிஸ்கோவுக்கு அழைத்துப் போக முடியாது. ஆனால் இங்கே என்ன நடக்கிறது...?

பெற்றோருடன் மனம் விட்டுப் பேசும் பிள்ளைகளும் இருக்கவே செய்கிறார்கள். ''என் குழந்தைகள் பேசும் போது நான் மிகக் கவனமாகக் கேட்டுக் கொள்வேன். ஆனால் எந்தவித அறிவுரையும் வழங்குவதில்லை'' என்கிறார் ஒரு தாய். ''நீ இந்த மாதிரியும் யோசித்துப் பார்க்கலாமே' என்று மட்டுமே சொல்வேன். முடிவை அவர்களிடமே விட்டு விடுவேன். பெரும்பாலும் இருதரப்புக்கும் ஏற்ற முடிவே கிடைக்கிறது.'' இவரின் பத்தொன்பது வயது மகள் கூறுகிறார் : ''நான் அம்மாவிடம் மனம் விட்டுப் பேசும் போது, அவருக்குப் பிடிக்காத சில விஷயங்களையும் சொல்ல நேரிடுகிறது. அப்போது அவர் தம் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் இருக்கப் போராடுவதை நான் உணர்கிறேன்...''

இத்தகைய உறவில் குழந்தைகளின் உணர்வுகள் மதிக்கப்பட, குழந்தைகளுக்கும் பெற்றோரிடம் மதிப்பு உண்டாகிறது; பொறுப்புணர்ச்சி பெருகுகிறது.

ஆனால் பெரும்பாலான குழந்தைகள் மனக்கசப்புடன் இருக்கிறார்கள் :

தன் தோழிகளைப் போன்ற உடைகள் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்துப் புதிதாய் வாங்கிக் கொண்டாள் ஆஷா. ''பணத்தின் அருமை தெரியலையே'' என்று குறைப்படுகிறார் ஆஷாவின் அம்மா.

''நாம் எப்படி உடை உடுத்துகிறோம் என்பது ரொம்ப முக்கியம்'' என்று கூறும் அஹமத்தின் எல்லா விருப்பங்களையும் பெற்றோர் நிறைவேற்றி வைக்கிறார்கள். செலவுக்குக் கேட்ட போதெல்லாம் பணம் தருகிறார்கள். ''இருந்தாலும் என்னால் அவர்களுடன் பேச முடிவதில்லை; அவர்கள் ஏதேனும் கேள்வி கேட்டால் எனக்குக் கோபம் கோபமாக வருகிறது; ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்வேன்'' என்கிறார் அஹமத்.

''உதாரணமாகத் திகழாத பெற்றோர்கள் எங்களைக் குற்றம் சொல்லக் கூடாது'' என்கிறார் வித்யா.

''நண்பர்களுடன் பொழுது கழிப்பது வீண் என்று நினைக்கிறார்கள் அப்பாவும் அம்மாவும்'' என்று கேலியாகச் சிரித்தபடியே சொல்கிறார் ஆனந்த்.

மொத்தத்தில் பிளவு அகண்டு வருகிறது. ''இன்னும் பத்து வருஷம் ஆன பிறகு இதை ஒரு மனநலப் பிரச்னையாக அடையாளம் கண்டு எங்களைப் போன்ற மருத்துவர்களின் உதவியை நாடி நிறைய பேர் வர ஆரம்பிப்பார்கள்'' என்று கூறுகிறார் டாக்டர் சந்திரசேகர்!

- சந்தியா ராமன்

ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் வடிவம் : எஸ்.ஆர்.

அட்டை வண்ணப்படங்கள் : யோகா

படத்துக்காக நடித்துள்ளவர்கள் : வேத் வியாஸ், சுவாமிநாதன் மற்றும் ராதா சுவாமிநாதன்



## அடுத்த இதழில்...

●● நடுத்தர மக்களைக் கவரும் கலைப்பொருள்கள்
- சிறப்புக் கட்டுரை



# மன்னன்

**சா**தாரண மன்னனில்லை 'சவாலே சமாளிக்கிற' மன்னன் : தொழிலாளி ரஜினிக்கும், முதலாளி விஜயசாந்திக்கும் மோதல் வந்து, வலுத்து, வளர்ந்து, கல்யாணமென்கிற திருப்பத்தை அடைந்து, உருமாறி ஆணுக்குப் பெண் அடங்கி வாழ்தலே சுகம் என்கிற பத்தாம்பசலி அறிவுரையுடன் சுபம்.

டியர் மிஸ்டர் வாசு,

நேரம் கேட்டதும் முதுகைத் திருப்பி கடிகாரம், சொடக்கு போட்டதும் மாஜிக் ரீதி மாற்றங்கள், ஆங்கில வசனம், சண்டையிடுமுன் ஹாஸ்யம் என வழக்கமான ரஜினி ஸ்பெஷல் அவியலை விமரிசையாக வாரி வழங்கி இருக்கிறீர்கள். ஆனால் பாருங்கள், இந்த ரகப் படங்கள் திகட்டத் துவங்கும் விளிம்பில், உங்கள் 'மன்னன்'. இழையோடி இருக்கும் 'அம்மா பாசம்' - காட்சிகள்தான் கொஞ்சம் மாறுதல்.

வரவர இளையராஜாவின் நல்ல பாடல்கள் அமைவது ஜாக்பாட் மாதிரி ஆகி விட்டது. ஓரிரண்டு பின்னணிக் காட்சிகள் விதிவிலக்காய், வித்தியாசமாய் அமைந்திருக்கின்றன!

வசனங்கள் : கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் இன்றைய 'நாட்டு நடப்புக்கு' எதிர்ச் சவாலாய் அமைந்திருப்பது போல... எதற்கு வம்பு? விமர்சனத்தில் சிண்டு முடிக்கிறார் சுந்தர்ஜி எனக் கடித மழை வரும்.

படம் நெடுக நியமித்த விறுவிறுப்பு இருப்பதை ஒப்புக் கொள்ளலாம்.

குஷ்பு ஒரு கேக் கட்டிடம்.

கவுண்டமணி - ரஜினி ஜோடி, 'மாமாவின் மரணம்' என்று ஆகாசப் பொய் சொல்லி, தியேட்டருக்குப் போவதும், ஏறிக் குதித்து முதல் இரண்டு டிக்கெட் வாங்கி, பரிசு கிடைக்கிற உற்சாகத்தில் துள்ளுவதும், பரிசளிக்க இருப்பவர் முதலாளியம்மா எனத் தெரிந்து அசடு வழிவதும் சுவாரஸ்யமான கற்பனை.

எல்லாம் சரி.

கதையும், காட்சிகளும் ஆம்பிளை சூப்பர் ஸ்டாருக்குப் பழுதில்லை. ஆனால் விஜயசாந்தியின் அவசியமற்ற அத்தனை முரட்டுத்தனம், தோதில்லாமல், அவரை இறக்கி விட்ட மாதிரியல்லவா தோன்றுகிறது!

– சுந்தர்ஜி

## 6

சிந்துஜாவின் அலறலுக்குக் காரணம் விளங்காமல் விழித்தான் பிரகாஷ். ''ஒரு ஸ்டார் ஹோட்டல்ல மலர்க் கொத்தும், வாழ்த்து அட்டையும் வழக்கந்தான் சிந்து. இதுல பயப்பட என்ன இருக்கு?''

''நல்லாப் பாருங்க பிரகாஷ். அந்த சம் ஹோட்டல் ஸ்டாஃப்!'' என்றான் சமாதானப்படுத்தும் குரலில்.

''இருக்காதுப்பா. நேத்து நம்மை யாரோ ஃபாலோ செய்தான். இப்ப இங்கே டானின் சிங்கம். சம்திங் சினிஸ்டர். எனக்குப் பயமாயிருக்கு பிரகாஷ்.''

நடுங்கிய மனைவியை இறுக்கமாக அணைத்துக் கொண்டான். ''வீணாப் பயப் படாதே டியர். டானோ அல்லது வேறு யாரோ கொடைக்கானல் வரை நம்மைத்



சிங்கத் தலை! அப்புறம் சிம்பாலிக்கா சிவப்புப் பூ. அபாயம் அறிவுறுத்தற மாதிரி...''

''சில்லி!'' என்று சிரித்தான். ''சும்மா சீரியஸாகாதே சிந்து.''

''நீங்க பேப்பர்ல பார்க்கலையா? டான்கவிலியோ எம்பளம் சிங்கம் பிரகாஷ். இந்த ஹோட்டலின் சின்னம் சக்கரம். ரிசப் ஷன்ல பார்த்தேன். வரவேற்பு அட்டைக்குச் சிங்கம் தேர்ந்தெடுக்க அவசியமில்லை.''

''தென் இட் மஸ்ட் பி ஏ ஜோக் பை துரத்தக் காரணம் ஏதுமில்லை. தவிரவும் நான்தான் எப்பவும் பக்கத்துல பாதுகாப்பா இருப்பேனே... அதனால கண்டதையும் கற்பனை செய்து ஹனிமூனை ஸ்பாயில் பண்ணிக்காதே.''

அட்டைக்கு விபரீத அர்த்தம் ஏதும் இருப்பதாக அவனுக்குப் படவில்லை. இருந்தாலும் சிந்துஜா கிடைத்தற்கரிய பொக்கிஷம். எச்சரிக்கையுடன் அவளைப்

பாதுகாப்பது என்று உறுதி செய்து கொண் டான். எஸ்.டி.டி. தொலைபேசித் தொடர்பு கொண்ட அப்பா ராஜசேகரிடம் தாங்கள் உற்சாகமாக இருப்பதாக அறிவித்தான்.

மதிய உணவு முடிந்த போது நேரம் 2.00. ''கம்மான் சிந்து. லெட்டஸ் என்ஜாய் நேச்சர்!''

சிந்துஜா சிரித்தது வசீகரமாயிருந்தது. மஞ்சள் சேலையும், சிவப்பு ஜாக்கெட்டும் அணிந்து, மெரூன் ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கையில் ஒற்றைத் தங்க வளையல் துலங்க... எளிமையான அலங்காரம்தான். அப்படியும் அவள் அழகு அசத்திற்று. அவ ளுடைய தாழம்பூ நிறத்திற்கு, ஆதர்ச உடலமைப்பிற்கு எதுவும் எடுக்கும் என்று அவனுக்குத் தோன்றிற்று.

''என்ன பார்வை அலையுது? ஜொள்ளுப லாமா அன்பரே...'' என்றாள் இண்டலாக.

''வந்து... ஊர் சுத்தறதை ஒரு மணி நேரம் ஒத்தி வைச்சா என்ன டார்லிங்?''

''சும்மா இரு மேன்!'' என்றாள் கண் களில் காதல் சுடர்விட.

''உங்களுக்கு ரோயிங் தெரியுமா?''

''தெரியு-மாவா? நான் படிச்சு வளர்ந் தது ஊட்டிம்மா. மறந்துட்டியா?''

வாடகைக்கு அமர்த்திக் கொண்ட படகு மெதுவாக அசைந்தவாறு முன்னேறி யது. பிரகாஷ் அனாயாசமாகவும் நிதான மாகவும் துடுப்புப் போட்டான்.

சிந்துஜா ஒரு கையால் தண்ணீரை அளைந்தாள். ஏரி சில்லென்றிருந்தது. சுற்றி லும் மரகதப் பச்சை. கம்மென்று ஒருவித மணம் நுகர முடிந்தது. உரைக்காத வெயில். காற்றில் இதமான குளிர். ஆங்காங்கே தென்படும் உல்லாச முகங்கள். தாலாட்டும் படகு. அன்பான கணவனின் அண்மை. மனத்தில் மகிழ்ச்சி மிக, சொர்க்கச் சூழலில் லயித்தாள்.

''என்ன ஒரு ரம்யமான சூழ் நிலைப்பா!''

''ஆமா சிந்து. கடவுள் நல்ல 'இரசனை யான மூடுல' இருக்கிறப்போ படைச்ச கவிதைப் பிரதேசம் இது! தூரிகை தூக்கக் கை துறுதுறுக்குது.''

# டான் கனிவியோ

**பத்மா ரவிசங்கர்**

வழியில் காரை நிறுத்தி ''வுல் பிளாசா'' என்ற கடையில் முழுக்கை ஸ்வெட்டர் வாங்கி அணிந்து கொண் டார்கள். அவனுக்கு வார்னிஷ் வர்ணம் தேர்ந்தெடுத்திருந்தாள். மயில் கழுத்து வண்ண ஸ்வெட்டர் அவளுக்கு மேலும் மிடுக்கு சேர்த்தது.

கொடைக்கானல் ஏரி அடைந்தனர். சாலை ஓரமாகக் காரை நிறுத்தி விட்டு இயற்கையை இரசித்தவாறு சற்று தூரம் நடந்து திரும்பலாம் என்று முடிவெடுத் தனர்.

கையில் பாட்டில்களுடன் அவசரமாக அணுகிய ஒரு பரட்டைத் தலை ''சாரு சுத்த மான தேன் வேணுமா?'' என்றான்.

''வேணாம்பா. ஐம்பது கிலோ தேன் கூடவே வருதுப்பா!'' என்று சிரித்தான்.

''ஏய்!'' என்று அவன் புஜத்தில் இடித் தாள் சிந்துஜா. ''லேக் அழகா இருக் குப்பா'' என்றாள்.

''போட்டிங் போகலாமா?''

''உங்களுக்கு எப்படி பிரகாஷ் டிராயிங்ல இன்ட்ரஸ்ட் வந்துச்சு?''

''அம்மாதான் காரணம். சின்னஞ்சிறு வயசுலேயே சுதந்திரமாக் கிறுக்க வைச்சு என்கரேஜ் செய்வாங்க. அம்மாவுக்குத் தின முமே மார்கழித் திங்கள்தான். விஸ்தார மான வாசல். மனம் லயிக்க மணிக்கணக்கா கோலம் போடுவாங்க. பக்கத்துல இருந்து பார்த்துக்கிட்டிருப்பேன். அம்மாவோட கோல நோட் புக் இன்னமும் பத்திரமா வெச்சிருக்கேன். என் ஓவியம் கோலத் துலதான் ஆரம்பம்!''

காரில் ஏறிப் போய் அந்த இடத்தை அடைந்ததும், ''வஷ் ப்யூட்டி!'' என்று கூவி னாள் சிந்துஜா.

''கோல்ஃப் மைதானம்.''

கண்ணுக்கெட்டிய தூரம் பசும்புல் கார்ப்பெட். கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டி யது.

''இந்த மாதிரி மெத் மெத் புல் தரை யில் கால் பதிய நடக்கறது பிடிக்கும்.''



**''பெண்ணோட அப்பா, ரொம்ப முன்ஜாக்கிரதைப் பேர்வழியா இருப்பார்னு தோணுது.''**

**''எப்படி....?''**

**''அழைப்பிதழுக்குக் கீழே பின்குறிப்புல, 'தங்கள் செருப்புக்குத் தாங்களே பொறுப்பு'ன்னு எழுதியிருக்காரே!''**

**- சீர்காழி வி. ரேவதி**

---

''சிந்துவுக்கு வேறு என்ன பிடிக்கும்?''

''என் பிரகாஷை!'' என்று அவனுடன் கைகோத்துக் கொண்டாள்.

அடுத்த மூன்று நாட்கள் சுதந்திரமாகச் சுற்றினர். கம்பீரமான பில்லர் ராக்ஸ். வெண்பட்டாய் இறங்கிய சில்வர் கேஸ்கேடு. அதல பாதாள தற்கொலை முனை. குறிஞ்சி ஆண்டவர் கோயில். ஒரு காமிரா வாங்கி கிளிக்கித் தள்ளினர். இன்பத்தில் திளைத்தனர்.

நான்காம் நாள் முன்னிரவு :

''ஒரு சின்ன வாக் போவோமா டியர்?''

ஹோட்டலை விட்டு இரவு வெளியில் செல்லச் சிந்துஜாவுக்கு விருப்பமில்லை. ஆயினும், அன்பானவனின் ஆசை அழைப்பைத் தட்ட முடியவில்லை அவளால்.

தோள்கள் உரசியவாறு மெல்ல நடந்தனர். பால் நிலவு அலம்பி விட்ட பசுமை. இந்த உலகமே அவர்களுக்குச் சொந்தம் போன்றதொரு தனிமை.

''ஸோ ப்யூட்டி ஃபுல்! அனுபவிக்க ஒருத்தன் கண்ல படறானாப் பாரு! பிட்டி. இந்த மாதிரி சூழ்நிலையை ஃபாரினர் விட்டு வைப்பானா?''

அவளால் இரசிக்க இயலவில்லை. ''போதும் பிரகாஷ். திரும்பிப் போகலாமே'' என்றாள் சுஸ்வரத்தில். சங்கடமாக உணர்ந்தான். அவள் உள்ளுணர்வு சடாரென்று விழித்துக் கொள்ளக் காரணமாயிருந்த -

'அவன்' சற்று இடைவெளி விட்டு இருவரையும் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். அவன் கையில் முக்காலடி நீளக் கத்தி. அதன் கூர்மை பௌர்ணமி நிலா ஒளியில் பளபளத்தது.....

இரவு; ஜீப் தவிர்த்து ஆட்டோ பயணம்; போலீஸ் உடுப்பு விடுத்து மஃப்டி உடை; தற்போது மட்டமான இந்த அரைவிருள் ரெஸ்டாரெண்ட்; அதில் குறுகலான மூன்றாவது கேபின்; நேரம் 8:25; எல்லாம்... எல்லாம் இம்மி பிசகாது அவன் சொல்படித்தான். ஆனால், போனில் பேசியபடி போட்டோவுடன் அவன் வருவானா? ஏசிபி தேவதேவன் பரபரப்பாக உணர்ந்தார்.

ஐந்தாவது நிமிடம் திடுதிப்பென்று அவன் பிரவேசித்தான்.

''வணக்கங்க'' என்றான் பவ்யமாக. ''ஒரு முன்னெச்சரிக்கைக்காக பாவம் உங்களைச் சிரமப்படுத்திட்டேன். விஷயம் தெரிஞ்சதுன்னா என் தலையை டான் கும்பல் சீவிடும்!'' என்றான் நடுக்கமுடன்.

வந்தவன் தொள தொள பேண்ட், சட்டையில் இருந்தான். அவன் கண்களின் கீழ் கருவளையம். முகத்தில் ஓர் ஆயாசம் - வாழ்க்கையில் நிரம்ப அடிபட்டாற் போல. வயது 40 + இருக்கலாம். அமரச் சொன்னார். அசைவம் ஆர்டர் செய்தார். ''சொல்லுப்பா'' என்றார்.

''பதினைந்து வருஷம் முந்தி டானுக்கு வேலை செய்திருக்கேங்க...''

''அட! அவனைப் பார்த்திருக்கியாப்பா?''

''இல்லைங்கய்யா! ஒரு வருஷம் போல வேலை செய்திருப்பேன். திறமை பத்தலைன்னு விரட்டி விட்டுட்டாங்க. இல்லாடிக்கணக்கானவங்க முன்னேறப் பல படிகள் உண்டுங்க. நான் ரொம்பக் கீழ் மட்டங்க. கேள்வி கேட்காமச் சொன்னதைச் செய்வோம். யார் யாரோ வந்து வேலை வாங்குவாங்க. சிங்க இலச்சினைதான் எல்லாருக்கும் பொது; அதைத் தாங்கி வந்தா டானின் உத்தரவுங்க...''

''சரி. போட்டோ எப்படி கிடைச்சது?''

''டானுக்குப் பல மறைவிடங்க. அதுல ஒரு வீட்டுப் பரண்லருந்து ஒரு சமயம் பொட்டி எடுத்துக்கிட்டு வரச் சொன்னாங்க.... போதை மருந்து கடத்த...''

''பெட்டி இருந்ததா?''

''ஊம். பரண்ல நிறைய தஸ்தாவேஜுங்களும் இறைஞ்சு கிடந்துச்சுங்க. ஏகமாகத் தூசு. நாலு நோட்டு புக்கு எடுத்தப்போ - இந்தப் போட்டோ கிடைச்சது! டான்தானோன்னு குறுகுறுன்னுச்சு. எடுத்து மறைச்சுக்கிட்டேன். இதுநாள்வரை என் பொட்டிக்குள்ள சும்மாத்தான் கிடந்துச்சு. நேத்து என் தம்பியை செயில்லப் பார்த்தப்போ விவரம் தெரிஞ்சதுங்க. டானைப் பத்தி முந்தாநாள் அவன்கிட்டத் துருவினீங்களாமே.''

''யாரு உன் தம்பி?''

தம்பியின் பெயர் மற்றும் புரிந்த குற்றம் பற்றிச் சொல்லி விட்டு, ''சேர்மா

ணம் சரியில்லாம வயித்துப் பிளைப்புக்குத் தொழிலைத் தொட்டதுக்குத் தம்பி வருந் தாத நாளில்லைங்க. ஐயாதான் அவனுக்கு நல்ல வழி காட்டணுமுங்க'' என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

''பார்க்கறேன்பா. போட்டோ எங்கே?''

''கொணாந்திருக்கேங்க. ஆனா டான் தானான்னு உறுதியாச் சொல்ல முடியாது.''

ஆவலுடன் போட்டோவை வாங்கிப் பார்த்ததும் ஏசிபி ஏமாற்றமடைந்தார். போஸ்ட் கார்டு சைஸ் கலர் போட்டோவில் - லாங் ஷாட்டில் - சற்று மழுப்பலான அவுட் ஆஃப் ஃபோகசில் ஒருவன் இடுப்பில் கை வைத்தபடி நின்று கொண்டிருந்தான். சவுக்கு மரப் பின்னணியில் எதையோ எதிர்பார்த்தபடி. யாரோ எதற்கோ படம் எடுத்திருக்கிறார்கள்...

ஒரு வினாடி வெறுப்புத் தட்டினாலும் இந்தத் துரும்பாவது கிடைத்ததே என்று ஆறுதலடைந்தார்.

**வீ**ட்டுக்குத் திரும்பிய பின்னும் உறக்கம் கொள்ளாமல் குழம்பிக் கொண்டிருந்தார் தேவதேவன். குழல் விளக்கு வெளிச்சத்தில் பூதக் கண்ணாடி தயவில் உன்னிப்பாகப் போட்டோவை ஆராய்ந்தார். ஹிப்பி போல் பரட்டையான செம்பட்டைத் தலைமுடியும், நீலநிற ஜீன்ஸும், சிவப்புச் சட்டையும் டான் வெளிநாட்டுக்காரனோ என்று எண்ண வைத்தது. அல்லது விக் சமாச்சாரமா? 15 வருடங்களுக்கு முந்தைய டான் உருவம் தற்போது எப்படி இருக்குமோ?

அது சரி. போட்டோ ஆசாமி டான் தானா?

அப்புறம், அது என்ன கலிலியோ? இப்படி இருக்குமோ... கலிலியோ இத்தாலியப் பெயர். இத்தாலியிலிருந்து குடி பெயர்ந்த ஐந்து குடும்பங்கள்தான் அமெரிக்க மாஃபியா என்பர். அந்த மாஃபியாவுடன் தொடர்பு கொண்டவனா இந்த டான்? அல்லது... சிற்சிலரை டான் டெலஸ்கோப்பிக் ரைஃபிளால் தீர்த்திருக்கிறான். டெலஸ்கோப்பைக் கண்டுபிடித்தவர் கலிலியோ. நன்றியறிதலாக... சே, அபத்தம்!

அல்லது டான் என்பவனே இல்லையோ? மித்! கலிலியோ என்று உருவாக்கிய மாயையில் ஒரு குற்றக் கும்பல் குளிர் காய்கிறதோ? குழப்பம்டா சாமி.

மறுநாள் காலை. கைதிகள் அளித்த விவரங்களைப் பொறுமையாகக் கம்ப்யூட்டரில் புகட்டியதில், ஓரிரண்டு ஒற்றுமைகள் தென்பட்டன. டானுக்குச் சிவப்புத் தலைமுடி என்று இரு கைதிகள் ஒத்துப் போயிருந்தனர். கிடைத்துள்ள போட்டோவும் அதை உறுதி செய்கிறது. உதிர்த்த பல பெயர்களில் சோமையா என்ற பெயர் மூன்று முறை தட்டுப்பட்டது. போலீஸ் தலைமை ஒரு முடிவுக்கு வந்தது.

ஒரு ஆர்ட்டிஸ்டின் கற்பனையில் போட்டோவின் மழுப்பலான முகத்தைத் திருத்தி மார்பளவு க்ளோசப் கொண்டு வந்தார்கள். கிடைத்த உருவம் டான்தானா என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

'படத்திலிருப்பவன் பெயர் சோமையா. இவன் பிரபல.... இவனைப் பற்றித் துப்புக் கொடுப்பவர்களுக்கு....' என ஒரு பெரிய தொகை ரிவார்டு அறிவித்துப் பேப்பர்களில் தொடர் விளம்பரம் கொடுத்துப் பார்த்தார்கள். உருப்படியாய் ஒன்றும் இதுவரை பெயரவில்லை.

டான்கலிலியோவின் அடுத்த குற்றம் என்ன? இதிலாவது தடயம் தவற விடுவானா? தேவதேவன் எதிர்பாராத இடத்தில் குற்றம் நிகழ்ந்தது -

கொடைக்கானலில்.....!

(தொடரும்)

### லாரி டிரைவர்கள் உஷார்!

☐ பெருகி வரும் லாரி விபத்துக்களைத் தடுக்க அமெரிக்கா
வில் புதிய கருவியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்
கருவி மூலம் டிரைவர் வேகக் கட்டுப்பாட்டை மீறினாலோ, தூங்கி
வழிந்தாலோ, எஞ்சின் கோளாறு ஏற்பட்டாலோ டிரைவரின்
தோளுக்கு மேலாக அமைந்துள்ள டீவி கேமரா அதனைப் படம்
பிடிக்க, பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் அந்த வண்டி
யின் நிறுவனத்தின் கண்ட்ரோல் அறையிலுள்ள டீவி. திரையில்
அக்காட்சி தெரியும். அங்கிருந்து ரேடியோ தொடர்பு கொண்டு,
கட்டளை அனுப்பி உடனே தவறுகளைத் திருத்திவிட முடியும்.

- ஆதாரம் : பிஸினஸ் இந்தியா

தகவல் : வசந்தா சாரி




வியப்பிற்குரியது என்னவெனில், பசியுள்ள உங்கள் குழந்தை உலகில் சிறந்த குழந்தை உணவு அபரிமிதமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது : அதுவே தாய்ப்பால்.

உங்கள் குழந்தையின் தேவைக்கேற்ப உங்கள் மார்பகம் ஈடு கொடுக்கிறது. உண்மையில், உங்கள் குழந்தையின் பசிப்புலம்பல்கள் சில வேளைகளில் பால் சுரக்கும் சுரப்பிகளைச் சுற்றியுள்ள தசை நார்களை சுருங்கச் செய்து பால் சுரப்பதை துவக்குகிறது. உங்கள் குழந்தை அதிகமாகப் பால் குடிப்பதினால் பால் சுரப்பதும் அதிகமாகிறது. மேலும் எவ்வளவு முறை உங்கள் குழந்தை பால் குடிக்கிறதோ, அவ்வளவு விரைவாக மீண்டும் சுரக்கச் செய்கிறது. ஆகையால் உங்கள் குழந்தை பசியினால் வாடினால், கவலைப்பட வேண்டாம். உங்களிடம் நிறைய பால் இருக்கிறது.

நீங்கள் இதைவிடச் சிறந்ததை விரும்ப முடியாது. ஏனெனில், தாய்ப்பாலில் உங்கள் குழந்தையின் உடல் நலத்திற்கு தேவையான ஒவ்வொரு பொருளும், மறுமுறை, ஒவ்வொரு பொருளும் உள்ளது. மற்ற ஒரு மாற்று உணவும் இதன் இயற்கை புரதங்கள், தாதுக்கள் அல்லது சர்க்கரைக்கு ஈடாகாது. மற்றும் தாய்ப்பால் கொடுப்பதால் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இடையே மிக நெருக்கமான பிணைப்பு உண்டாகிறது. ஒரு உணர்ச்சி மயமான பிணைப்பு.

இவ்விணைப்பினால், உலகில் சிறந்த குழந்தை உணவிற்கு ஒருபோதும் குறைவு ஏற்படாது.



உண்மையில்
உலகில் சிறந்த
குழந்தை உணவு
உங்கள்
குழந்தையாலேயே
தயாரிக்கப்படுகிறது

அமுல் இந்த அறிவுரையை ஒவ்வொரு இந்திய அன்னை மற்றும் அவள் குழந்தைக்கு அர்ப்பணிக்கிறார்கள்.



குஜராத் கோ-ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிட்., ஆனந்த் 388 001.

ASP-AMUL-104/91 TAM

# உமாவா இப்படி...?

**அரவிந்தன்**

"இந்து - இங்கே பாரேன்!"

கடற்கரைச் சாலை சந்திப்பில் நின்று கொண்டிருந்தது அந்த டவுன் பஸ். மாலை நேரத்துக் கூட்டம் நிரம்பி வழிய, கண்டக்டர் 'ரைட்' கொடுக்காமல்; எல்லோருக்கும் டிக்கட்டைப் பரபரப்பாகக் கிழித்துக் கொண்டிருக்க.....

ஜன்னல் ஓரமாய் உட்கார்ந்து சாவகாசமாய் வாரப்பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த இந்து - மௌனமாகத் திரும்பி, பக்கத்தில் இருந்த தன் ஆபீஸ் தோழி தேவகியைப் பார்த்தாள்.

"அங்கே பார்."

தேவகி சுட்டிக்காட்டிய திசையில் திரும்பிப்பார்த்த இந்துவுக்குத் திடீரென்று ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் தாக்கிய அதிர்ச்சி!


எதிர்பாராமல் சூடுபட்டது போல உடம்பும் மனசும் பதறியது!

"இது.... இது... உன் தங்கை உமா இல்லை?"

தேவகியின் கேள்விக்கு மௌனமாகத் தலையசைத்து ஆமோதித்தாள்! முகம் ஒரு கணத்தில் வெட்கத்திலும், வேதனையிலுமாய் இறுகிப் போயிற்று!

அவள் தர்மசங்கடம் உணர்ந்த தேவகி, 'சட்'டென்று அவள் கைகளை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு "டேக்கிட் ஈஸி இந்து.... டோன்ட் கெட் அப்செட்!" என்றாள்!

பஸ் கிளம்புமுன், இந்து மீண்டும் வெளியே பார்த்தாள்.. சந்தேகமே இல்லை! தங்கை உமாதான்! பாதை ஓரத்து 'கூல்டிரிங்ஸ்டால்' முன் - யாரோ ஒருவனுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் உமா! கையில் கோல்ட் ஸ்பாட் பாட்டில். நல்லவேளை இருவரும் தனித்தனி பாட்டில்கள் தனித்தனி ஸ்ட்ராக்கள். இன்னும் ஒரே பாட்டிலில் ரெண்டு ஸ்ட்ராக்களைப் போட்டுத் தலையை இடித்துக் கொண்டு சாப்பிடும் அளவுக்கு



நெருக்கம் வரவில்லையோ!'' என்று நினைத்துக் கொண்டாள் இந்து! மனத்துக்குள் கசப்பான உணர்வுகள்.

முப்பது வயதைத் தொட்டுவிட்ட பிறகும் தனக்கென்று கல்யாணம், கார்த்தி - குடும்பம் - குழந்தை - என்று எந்த சிந்தனையும் இல்லாமல் அந்தக் குடும்பத்துக்காகத் தானும் ஓர் இயந்திரமாக உழைத்துக் கொண்டிருக்கும் தன்னுடைய இவ்வளவு நாளின் கனவுகளும், தியாகங்களும் அந்த ஒரு நொடியில் அனாவசியங்களாய், அர்த்தமற்றவைகளாய் விழுந்து நொறுங்கிப் போக, இந்து உடைந்து போனாள்!

அவளுக்குப் பதினெட்டு வயதாகும் போதே அவளையும் அவளோடு சேர்த்து இரண்டு தங்கைகள் - ஒரு தம்பியையும் - நோயாளியான தன் மனைவியையும் விட்டுவிட்டுக் கண்ணை மூடி விட்டார் அவள் அப்பா!

அப்போது அந்தக் குடும்பத்தில் ஓரளவு விவரம் தெரிந்தவர்கள் என்ற நிலையில் இந்துவும் அவள் அம்மாவும்தான்! மற்றவர்கள் எல்லோரும் இரண்டும் கெட்டான் வயதில்....!

இந்துவுக்குள் எங்கிருந்துதான் அப்படி ஒரு தைரியமும் மன உறுதியும் வந்ததோ தெரியாது! அவள்தான் முதன் முதலில் எழுந்து நின்றாள்! அந்தக் குடும்பத்தைத் தன் மென்மையான தோள்களில் தாங்கிக் கொண்டாள்.

அவள் அப்பா வேலை பார்த்த ஆபீஸிலேயே அவளுக்கு ஒரு வேலை கிடைத்தது. காலேஜ் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, கையில் டிபன் பாக்ஸுடன் வேலைக்குக் கிளம்பினாள் இந்து!


அன்றைக்குக் கிளம்பியவள்தான். இன்றைக்கு முப்பது வயதாகப் போகிறது. அவள் நடையும் தளரவில்லை. அவள் மனமும் தளரவில்லை.

தனக்கென்று ஒரு புடைவை வேண்டும், நகை வேண்டும் என்றெல்லாம் அவள் ஆசைப்பட்டதே இல்லை. கிடைத்த பணம் எல்லாமே அவள் குடும்பத்துக்கே செலவாயிற்று!

இரண்டு தங்கைகள் - தம்பி - எல்லோரும் நன்றாகப் படித்தார்கள். தன்னால் காலேஜ் படிப்பை முடிக்க முடியாமல் போன ஏக்கம் அவளுக்குள் நிறையவே இருந்தது. ஆகவே தங்கைகள் எவ்வளவு படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்வளவும் படிக்கட்டும் என்று படிக்க வைத்தாள்.

அவர்களுக்கு ஒரு சின்ன விஷயத்தில் கூட ஏக்கமோ, மனக் குறையோ வரக்கூடாது என்பதற்காகத் தனக்கு எவ்வளவு சிரமம் இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவர்கள் தேவையை எல்லாம் நிறைவேற்றினாள்!

தன் ஆபீஸ் தோழிகள் காலேஜ் சிநேகிதிகள், கூடப்படித்த பெண்கள் அவர்கள் தங்கைகள் - என்று ஒவ்வொருத்தருக்காய்க் கல்யாணம் ஆனபோது அபூர்வமாகச் சில சமயங்களில் அவள் மனமும் ஒரு கணம் அந்தக் கல்யாணச் சடங்குகளைப் பார்த்து - ''நமக்கும் இப்படி ஒன்று....'' என்று இலேசாக ஏக்கப்படும். ஆனால் நாளடைவில் அதுவும் போய், சலனமற்றவளாகிவிட்டாள்.



தங்கை உமாவுக்கு ரொம்ப அதிர்ஷ்டம்!

அவள் காலேஜ் படிப்பை முடிக்கும் முன்பே அவளுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் வரத்துவங்கிவிட்டன!

''வேலை கிடைக்குமா? என்ற நிலை போய், கிடைத்த வேலையில் எதைத் தேர்ந்தெடுப்பது?'' - என்ற அளவுக்கு அவளுக்கு நல்ல நல்ல வேலையாகவே வந்து அமைந்தது.

அவள் வேலைக்குப் போக ஆரம்பித்த பிறகுதான் இந்துவுக்குச் சற்று நிம்மதியாக மூச்சு விட முடிந்தது!

ஆயிற்று - இவள் ஒரு நாலைந்து வருஷம் இந்தக் குடும்பப் பாரத்தைச் சுமக்கத் தனக்கு உதவி செய்தால் அதற்குள் அடுத்தவள் படிப்பை முடித்து - அவளும் வேலைக்கு வந்து விடுவாள். அந்த சமயத்தில் உமாவுக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டால் பிறகு சின்னவளும், தம்பியும் தான்; தம்பியை எப்படியும் பி.ஈ. படிக்க வைக்க வேண்டும்! அவனும் படித்து ஒரு நல்ல நிலைமைக்கு வந்து விட்டால் சின்னவளுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணி அனுப்பி விடலாம்! அதன் பிறகு.... தம்பிக்கும் ஒரு கல்யாணம் - அப்புறம் அம்மாவும் நானும்.... ரெண்டுபேர் மாத்திரம்.... போதும், இந்தச் சம்பளம் போதும். அதற்குள் எனக்கும் வயதாகிவிடும். ரிடையர்மென்ட் கூட

கடைசி வாரம் பிறந்தாச்சு
கோகுலம் கடைக்கு வந்தாச்சு!

மார்ச் இதழில்...

* அக்பரை வென்ற துளசிதாசர்
  - வண்ணப்படக்கதை
* பொன்னாடை
  - படக்கதை
* முட்டை
  - அறிவியல் சித்திர மடல்
* கிளி பேசுமா?
  - அறிவியல் கதை
* கழுதை விழா!
* பூனைக்குச் சிறை



* விட்டுப் போனவை எவை?
  - போட்டி
* 5வது உலகக் கோப்பையை யார் வெல்வார்கள்?

+ ஏராளமான கதைகள்
96 வண்ணப் பக்கங்கள்
மூன்றே ரூபாய்க்கு!

பெற்றோரே கோகுலம் வாங்குங்கள்!
பிள்ளைகள் மகிழ்வதைக் காணுங்கள்!

கோகுலம்

வந்துவிடும். நானும் தலையெல்லாம் நரைத்து, தங்கைகள் - தம்பி குழந்தைகளை எல்லாம் எடுத்துக் கொஞ்சியபடியே என் காலத்தைப் போக்கிவிடுவேன்....''

தனக்குள்ளாகவே அடுக்கடுக்காகக் கற்பனைக் கோட்டைகளை, அடுக்கிக் கொண்டிருந்தாள் இந்து.

இன்று உமாவைக் கடற்கரையில் பார்த்த பிறகு கோட்டைகள் நொறுங்கி விட்டன! உமா... உமா-வா இப்படி? - எவ்வளவு நல்ல பெண்? எவ்வளவு குடும்பப் பொறுப்போடு பேசுவாள்!

வேலைக்குப் போகத் துவங்கி இன்னும் ஆறுமாசம் கூட ஆகவில்லை. அதற்குள் - அதற்குள்....

ஆயிற்று -

இன்னும் இரண்டு மாசத்தில் தைரியமாக எதிரே வந்து நின்று - ''நான் இவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்'' என்பாளோ?

''குடும்பத்தைப் பற்றியும்; அதன் நிலைமை பற்றியும் அதற்காகத் தான் இவ்வளவு நாளும் செய்திருக்கும் தியாகங்களையும் பற்றிச் சொன்னால்....''

''அது உன் தலைவிதி - நீ இருக்கிற மாதிரியே நானும் இருக்க வேண்டுமா?'' - என்பாளோ?

சொல்வாள். நிச்சயம் சொல்வாள்! ஒரு ஆணோடு பழக்கம் வந்துவிட்டால் எல்லாமும் சொல்கிற தைரியமும் கூடவே வந்துவிடும்!

இந்து தன்னை எவ்வளவுதான் கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவளையும் மீறி அழுகை வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

வீட்டை நெருங்கும் வரை அவள் மனம் அலைபாய்ந்து கொண்டேதான் இருந்தது. வாசல்படியை மிதித்த அந்த கணத்தில் மனம் உறுதிப்பட்டது.

மௌனமாக உள்ளே சென்றாள். மௌனமாகவே பையை மேஜை மீது வீசிவிட்டுப் பின்பக்கம் போய், கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

ஸ்வாமி விளக்கை ஏற்றி வைத்து எதிரில் கண்களை மூடி நின்ற போது - மனம் சலனங்களை உதிர்த்துவிட்டு, உன்னால் முடியும், உன்னால் முடியும்!'' என்று திரும்பத்திரும்ப மந்திரம் போல உச்சரித்தது!

மாலையில் இருந்த படபடப்பும், அதிர்ச்சியும் கொஞ்சம் குறைந்தமாதிரி இருந்தது!

''அக்கா'' - உமாதான் கூப்பிட்டாள்.

''அக்கா - நீ சாப்பிட்டு விட்டு மாடிக்கு வா!''

நாம்தான் சரியாகப் படிக்க முடியலை நம்ம குழந்தைகளாவது நன்றாகப் படிக்கட்டுமே என்று எனது குழந்தை களை கான்வெண்டில் சேர்த்தேன்.





கொஞ்சநாள் வரைக்கும் என் கணவர், குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து அவர்கள் ஹோம் ஒர்க் செய்ய மிகவும் உதவியாக இருந் தார். ஆனால் அவருக்கு, ஆபீஸ் வேலை அதிகமாக இருந்ததால் அவரால் குழந்தைகளுக்கு ஹெல்ப் பண்ண முடிய வில்லை.

குழந்தைகள் ஹோம் ஒர்க் செய்ய எனது உதவியை நாடும் போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். அதுவும் இங்கிலீஷ்கிராமர் சம்மந்தமாக அவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் திண்டாடி னேன்.

எனக்கு இங்கிலீஷ் தெரியாது என்பதை குழந்தைகளிடம் சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை.

வாரப் பத்திரிக்கை ஒன்றைப் புரட்டும் போது "வீட்டிலிருந்தபடியே இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்" என்ற விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

ட்ரை பண்ணிப் பார்க்கலாமே என்று, அவரது சம்மதத்துடன் விவேகானந்தா கல்வி நிலையத்தில் சேர்ந்தேன்.

முதல் மூன்று மாதங்களில் வாக்கியங் களை அமைக்கப் பழகி, ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டேன்.

அடுத்த மூன்று மாதங்களில் அவர்கள் சொல்லியிருந்தபடி பயிற்சி களைச் செய்து பழகி "ஸ்போக்கன் இங்கிலீஷைக்" கற்றுக்கொண்டேன்.

இப்பொழுது குழந்தைகளுக்கு, என்னால் இங்கிலீஷ் கிராமரை அவர் களுக்குப் புரியும் வகையில் சொல்லிக் கொடுக்க முடிகிறது.

குழந்தைகளோட சேர்ந்து நானும் இங்கிலீஷில சரளமாகப் பேசும் போது எனக்கே ரொம்ப பெருமையா இருக்கு!

— Mrs. ஜானகி சுந்தர்

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில், தபால் மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

கீழ்க்கண்ட முகவரியில் இன்றே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

**விவேகானந்தா கல்வி நிலையம்**
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

NAGA

இந்து அவளை அர்த்தபுஷ்ட்டியுடன் பார்த்தாள்.

''ஆமாம் - சாப்பிட்டு விட்டு மாடிக்கு வா... உன்கிட்டே கொஞ்சம் தனியாகப் பேசணும்!''

'நாளைக்கோ, எப்போதோ நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்த அந்த விபரீதம் இன்றைக்கே நடக்கப்போகிறது!' என்று அவள் உள் மனம் எச்சரித்தது!

அவள் என்ன சொன்னாலும் அதை எதிர்கொள்கிற மன உறுதியுடன் இந்து அப்போதே எழுந்து மொட்டை மாடிக்குப் போனாள்.

உமா - பின்னாலேயே வந்தவள், ''அக்கா - நான் ஒண்ணு சொல்வேன். கோபப்படாம கேக்கணும்!'' என்றாள்.

இந்துவின் இதயத்தில் குதிரை யோட்டம்!

''அக்கா. என் ஆபீஸிலே விக விகன்னு ஒருத்தர். ஆள் நல்ல வாட்ட சாட்டமா சிவப்பா இருப்பார். சிரிச்சா கன்னத்திலே குழி விழும். உன்னைவிட ஒருவயசோ ரெண்டு வயசோ அதிகம் இருக்கும். ரொம்ப நல்லவர். அவரை அவரை....''

இந்து அருகில் இருந்த கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டாள். உமா சொல்லப் போவதைத் தாங்கிக் கொள்கிற மனோதைர்யம் இல்லாதவளாய் அவளைப் பார்த்தாள்.

''அவரை - நீ கல்யாணம் பண்ணிக்கணும் அக்கா!''


''உமா!'' - இந்து கூவினாள்.

''ஆமாம் அக்கா. இவ்வளவு நாளும் நீ இந்தக் குடும்பத்துக்காக ஓடி ஓடி உழைச்சாச்சு! போதும் அக்கா! இனிமே இந்தக் குடும்பத்தை நான் பார்த்துக்கறேன். ....அவர் ரொம்ப நல்லவர் அக்கா. நான் உன்னைப் பத்தி அவர்கிட்டே நிறைய சொல்லி இருக்கிறேன். அவருக்கும் தங்கைகள் ரெண்டுபேர். அவங்களுக்குக் கல்யாணம் பண்ணிவிட்டுத்தான் தான் பண்ணிக்கணும்னு காத்திருந்ததாலேதான் இவ்வளவு லேட் ஆயிடுச்சு. இன்னிக்குத்தான் பிச்சுலே தனியா பேசிச் சம்மதம் கேட்டேன். அவர் ஓகே சொல்லி விட்டார். நீயும் ஓகே என்றால்....!''

உமா பேசிக் கொண்டே இருந்தாள்.

இந்துவுக்கு ஒரு கணத்தில் எண்சாண் உடம்பும் ஒரு ஜாணாய்க் குறுகிவிட்டதைப் போலாயிற்று!


'சட்'டென்று உமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்! அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் உமாவின் முதுகை நனைத்துக் கொண்டிருந்தது! - அந்த அழுகைக்கு உண்மை காரணம் அறியாத உமா, அக்காவை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தாள்.



''கவலைப்படாதீங்கப்பா! எம்.பி.பி.எஸ். சீட் கிடைக்கலேன்னா என்ன? எப்படியாவது இந்த மாநிலத்தின் முதல்வர் ஆகி, 'டாக்டர்' பட்டம் வாங்கி உங்க ஆசையை நிறைவேத்தறேன்!''

- என். பாலகிருஷ்ணன்

## ஏவுகணை சோதனைக்கு வளமான பூமி எதற்கு?



☐ ஒரிஸ்ஸா, பாலஸ்ஸோர் மாவட்டத்தில், பாலிபால் அருகே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் National Test Range என்ற ராணுவத்தின் ஏவுகணைத் திட்டம் நிறுவப்பட இருக்கிறது. இந்த இடம் ஒரிஸ்ஸாவிலேயே மிகவும் செழிப்பான விளைச்சல் நிலமும் காடுகளும் நிறைந்தது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் விவசாயம், வாழ்வு இவைகளை இழந்து இந்த இடங்களிலிருந்து கட்டாயமாகத் துரத்தப்பட இருக்கிறார்கள். இதற்காக இவர்கள் மத்திய மாநில அரசுகளை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். நமது நாட்டிற்குத் தேவையான வெற்றிலையில் எழுபது சதவீதம் பாலிபாலில்தான் உற்பத்தியாகிறது. ராணுவத்தின் ஏவுகணை பரிசோதனைக் களன் நிறுவுவதற்கு வேறு வறண்ட பிரதேசமாகத் தேர்ந்தெடுக்கக் கூடாதோ?

ஆதாரம் நசிந்து

தகவல் எஸ். அனந்தராமன்

**ஃபாஷன் பக்கம் :**

# கியூலாட்ஸ்

கியூலாட்ஸ் (culottes) : கத்திரிப்பூ நிறத்தில் சிவகிருபா அணிந்துள்ள 'ஸ்கர்ட்' போன்ற ஆடை முழுங்காலுக்குச் சற்று கீழ்வரை தழையும் இதில் பாண்ட் போல் இரு கால்களையும் தனித்தனியே நுழைத்துக் கொள்ள வேண்டும். ''கியூலாட்ஸ் இருபது நாட்களுக்கு முன் அவுட் ஆஃப் ஃபாஷன் ஆகிவிட்டன'' என்கிறார் சிவகிருபா!

ஸ்னேஹாவைப் போல் ஹாஃப் ஜீன்ஸாம் குட்டையான டீ ஷர்ட்டும் அணிவது மற்றொரு ஃபாஷன்.

டைட்ஸ் : கால்களோடு ஒட்டிய ஜீன்ஸ் பாணி உடை. பளிச் வண்ண டைட்ஸ் என்றால் கறுப்பு ஷர்ட்; வெளிர் நிறத்தில் டைட்ஸ் எனில் பூப்போட்ட சட்டை அணியலாம். மழைக் காலச் சென்னைச் சாலைகளுக்கு ஏற்ற ஆடைகள்!

படங்கள் : யோகா



## நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

# பிக்ஷுவின் காதல்

புலிகேசியின் உள்ளத்தில் அசூயையென்னும் பாம்பு படமெடுத்து ஆடுவதை அறியாதவராய் நாகநந்தி பிக்ஷு தமது இருதயத்தைத் திறந்து சொல்லத் தொடங்கினார்:

''தம்பி! குழந்தைப் பிராயம் முதற்கொண்டு, - எனக்கு அறிவு தெளிந்த நாளிலிருந்து, - நான் அஜந்தா மலைக் குகைகளில் வளர்ந்து வந்தேன். அஜந்தா சங்கிராமத்தில் பிக்ஷுக்களும் அவர்களுடைய சிஷ்யர்களும் இருந்தார்கள். என் இருபதாவது பிராயம் வரையில் உயிருள்ள பெண்ணை நான் பார்த்ததில்லை. அதாவது, சதை, இரத்தம், எலும்பு, நகம் ஆகியவற்றால் ஆன மானிடப் பெண்ணைப் பார்த்ததில்லை. ஆனால், ஜீவனுள்ள பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஒருவனுடைய இருதய அந்தரங்கம் வரைக்கும் சென்று ஊடுருவிப் பார்க்கும் சக்தி வாய்ந்த விசால நயனங்களுடைய பெண்களைப் பார்த்திருக்கிறேன். மானிடக் குலத்துக்கு எட்டாத தெய்வீக சௌந்தரியம் வாய்ந்த மடமங்கையர்களைப் பார்த்திருக்கிறேன். அழகுக்கு அழகு செய்யும் திவ்விய ஆபரணங்களை அணிந்த அணங்குகளைப் பார்த்திருக்கிறேன். தங்கள் கூந்தலில் மலர் அணிந்ததனால் அம் மலருக்கு அழகைத் தந்த பெண்களைப் பார்த்திருக்கிறேன். சாந்தம் குடிகொண்ட பெண்களையும், கருணை வடிவான பெண்களையும், மினுக்கி மயக்கும் மோகினி ரூபங்கொண்ட மாயப் பெண்களையும் பார்த்திருக்கிறேன். இவர்களையெல்லாம் அஜந்தா விஹாரங்களில் உள்ள சுவர்களிலே பார்த்தேன். மகா சைத்திரிகர்களான பிக்ஷுக்கள் தீட்டிய அற்புத சித்திர வடிவங்களிலே பார்த்தேன். அந்த சித்திர வடிவங்கள் எல்லாம் என்னைப் பொறுத்தவரையில் உயிர் உள்ள ஸ்திரீ புருஷர்கள்தான். நான் அவர்கள் அருகில் சென்றதும் என்னை அவர்கள் வரவேற்பார்கள்; முகமன் கூறுவார்கள்; க்ஷேமம் விசாரிப்பார்கள். அவர்களுடன் நானும் மனம் விட்டுப் பேசுவேன்; அவர்களுடைய க்ஷேம லாபங்களை விசாரிப்பேன்; வெளி உலகத்து விஷயங்களைப் பற்றியெல்லாம் அவர்களிடம் கேட்பேன். மௌன பாஷையில் அவர்கள் மறுமொழி சொல்வார்கள்.

''இப்படி நான் தினந்தோறும் பார்த்துப் பேசிப் பழகிய சித்திர வடிவங்களுக்குள்ளே முக்கியமாக ஒரு பெண்ணின் வடிவம் என் சிந்தையைக் கவர்ந்திருந்தது. அவளுடைய பொன்னிற மேனியின் சோபையை அவள் இடையில் உடுத்தியிருந்த நீல நிறப் பட்டாடையும், மாந்தளிர் நிறத்து உத்தரீயமும் அதிகமாக்கிக் காட்டின. புன்னகை பூத்த அவளுடைய இதழ்களின் செந்நிறமும், அவளுடைய கருங்கூந்தலில் குடியிருந்த செவ்வாம்பல் மலரின் சிவப்பு நிறமும் ஒன்றையொன்று தூக்கியடித்தன. தாமரை இதழ் போல வடிவம் அமைந்த அவளுடைய கண்களின் கருவிழிகள் என் இருதயத்தை ஊடுருவி நோக்கிய போது என் இருதயத்தில் நான் அதுகாறும் அறிந்திராத வேதனையும் இன்பமும் உண்டாயின. அந்தச் சித்திர உருவம் தீட்டப்பட்டிருந்த விஹாரத்தில் எந்தப் பக்கத்தில், எந்த மூலையில் நின்று பார்த்தாலும், அந்தப் பத்மலோசனியின் கண்கள் என்னையே நோக்குவது போல் இருந்தன. அவ்வளவு அற்புத வேலைத் திறமை

யுடன் யாரோ ஒரு சைத்திரிகப் பிரம்மா அவ்வுருவத்தைத் தீட்டியிருந்தார். அந்தச் சித்திரத்தை வரைந்து முந்நூறு வருஷங்களுக்கு மேல் ஆகியிருந்த போதிலும் வர்ணங்கள் சிறிதும் மங்காமல் நேற்று எழுதியவை போல் விளங்கின.

''அந்தச் சித்திரப் பெண்ணின் உருவத்தில் இன்னொரு விசேஷம் இருந்தது; அவள் இடை வளைந்து நின்ற நிலையும், அவளுடைய கரங்களும் கழுத்தும் அமைந்திருந்த தோற்றத்தில் காணப்பட்ட நெளிவும், அவள் ஏதோ ஒரு விசித்திரமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் -என்பதைப் புலப்படுத்தின. ஆனால், அவள் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்பது எனக்குப் புலப்படவில்லை. என் மனத்திற்குள் எவ்வளவோ யோசனை செய்தும் அதை என்னால் அறிய முடியவில்லை. கடைசியில் சைத்திரிக பிக்ஷு ஒருவரைக் கேட்டேன். அவர் 'அந்தப் பெண் பரதநாட்டியம் ஆடுகிறாள்' என்று சொன்னார். பிறகு பரதநாட்டியம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்பினேன். பரத சாஸ்திரம் என்னும் ஒரு நூல் இருப்பதாகத் தெரிந்து கொண்டு அந்த நூலைச் சம்பாதித்துப் படித்தேன். பரதநாட்டியக் கலையின் பல அம்சங்களையும் நன்கு தெரிந்து கொண்டேன்.

''இதற்குப் பிறகு, அந்த ஓவியக் கன்னி என் உள்ளக் காட்சியில் பரத நாட்டியம் ஆடத் தொடங்கினாள். பரதநாட்டியக் கலைக்குரிய பலவிதத் தோற்றங்களிலும் அவள் காட்சியளித்தாள். பற்பல முத்திரைகள், ஹஸ்தங்கள், பலவித அபிநயத் தோற்றங்கள் - என் அகக் கற்பனையில் தோன்றிக் கொண்டேயிருந்தன. பகலிலும் இரவிலும் சதா சர்வகாலமும் அந்தக் கற்பனைப் பெண் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தாள். அப்போது தான் எனக்கு முதன் முதலில் வெளி உலகத்துக்குப் போக வேண்டும், நாடு நகரங்களில் வாழும் ஸ்திரீ புருஷர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ஒரு வேளை அந்த மாதிரி உண்மையாகவே ஒரு பெண் எங்கேனும் இருக்கலாமல்லவா என்ற சபலம் ஏற்பட்டது. இந்த ஆசை காரணமாகவே அஜந்தா நதி வழியைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்து மலையடிவாரத்துக் கானகங்களிலே நான் சுற்ற ஆரம்பித்தேன். அப்போதுதான் தம்பி, ஒரு நாள் உன்னைப் பார்த்தேன். பேச்சு மூச்சற்றுக் கிடந்த உன் உடம்பில் பிராணனை ஊட்டினேன். அது முதல் என் மனப்போக்கில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. சித்திரத்தில் பார்த்துக் கற்பனையில் நான் வளர்த்து வந்த பெண் சிறிது சிறிதாக என் உள்ளத்திலிருந்து மறையலானாள். அவள் இருந்த



இடத்தில் நீ வந்து சேர்ந்தாய். நீ என் சொந்த உடன்பிறந்த சகோதரன், என்னுடன் இரத்தத் தொடர்புடையவன்; என்பதை அறிந்த பிறகு என் இருதயத்தில் அந்தச் சித்திர நாட்டியக்காரிக்குச் சிறிதும் இடமில்லாமற் போய் விட்டது.

''தம்பி! சிறிது காலத்துக்கெல்லாம் நீயும் நானும் அஜந்தா மலைக் குகையை விட்டு வெளியேறினோம். நீ வாதாபிச் சிம்மாசனம் ஏறினாய். நீயும் நானுமாக எத்தனையோ யுத்தங்கள் நடத்தி ஜயித்தோம். எத்தனையோ இராஜ தந்திரங்களையும் இராணுவ தந்திரங்களையும் கையாண்டு வெற்றி பெற்றோம். துங்கபத்திரையிலிருந்து நர்மதை நதி வரையில் சளுக்க சாம்ராஜ்யம் படர்ந்து தழைத்தது. உத்தராபத ஹர்ஷவர்த்தன சக்கரவர்த்தியும் வராகக் கொடியைக் கண்டு அஞ்சலானார்.

''இந்த நாட்களில் நான் ஏற்றுக் கொண்டிருந்த பிக்ஷு விரதத்தை நிறைவேற்றுவது எனக்குக் கொஞ்சமும் கஷ்டமாயில்லை. வாதாபி நகரத்திலும், மற்றும் நான் யாத்திரை செய்த பட்டணங்களிலும் கிராமங்களிலும் எத்தனையோ ஸ்திரீகளை நான் பார்த்தேன். அஜந்தா குகைச் சுவர்களில் நான் பார்த்த சித்திரப் பெண் வடிவங்களோடு ஒப்பிடும் போது, இந்த மானிடப் பெண்கள் அழகற்ற அவலட்சண வடிவங்களாகத் தோன்றினார்கள். அந்தச் சித்திரப் பெண்களைப் பார்த்து அவர்களுடைய அழகை வியந்த கண்களினால் இந்தச் சாதாரண மானிட ஸ்திரீகளைப் பார்க்கவே முடியவில்லை.

''உலகத்திலே மனிதர்கள் என்னத்திற்காக ஸ்திரீகள் மீது மோகங்கொண்டு பைத்தியம் பிடித்து அலைகிறார்கள் என்று வியந்தேன். தம்பி! ஒருவர் பின் ஒருவராக நீ ஆறு பெண்களை மணந்த போது உன்னுடைய பரிதாப நிலையைக் குறித்து இரங்கினேன்!''

இத்தனை நேரம் மௌனமாயிருந்து கேட்டுக் கொண்டிருந்த புலிகேசி இப்போது குறுக்கிட்டுக் கூறினார் :

''ஆம், அண்ணா! அதையெல்லாம் நினைத்தால் ஏன் அந்தப் பைத்தியக்காரத் தனங்களில் இறங்கினோம் என்று எனக்கும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. என்ன செய்யலாம்? எங்களுக்கெல்லாம் அநுபவித்த பிறகுதான் புத்தி வருகிறது. நீயோ

பெண் மோகம் என்பது எவ்வளவு அசட்டுத் தனம் என்பதை முன்னதாகவே கண்டு கொண்டு விட்டாய்!''


புலிகேசிச் சக்கரவர்த்தி இவ்விதம் கூறிய போது அவருடைய தொனியில் சிறிது பரிகாசம் கலந்திருப்பதாகத் தோன்றியது. ஆனால், அறிவுக் கூர்மை மிகப் படைத்த பிக்ஷுவுக்கு அச் சமயம் அது தெரியவில்லை. அவர் மேலும் கூறினார் :

''இல்லை, தம்பி, இல்லை! உன்னுடைய புகழ்ச்சிக்கு நான் அருகனல்ல. நீங்கள் எல்லாரும் பட்டு அநுபவித்த பிறகு, உண்மையைக் கண்டுகொண்டீர்கள். ஆனால், நானோ எத்தனையோ காலம் துறவறத்தை அநுஷ்டித்த பிறகு, யௌவனப் பிராயத்தையெல்லாம் இழந்து விட்ட பிறகு, ஒரு பெண்ணின் காதலுக்கு வயமானேன். ஆனால், என்னுடைய காதல் மற்ற உலக மாந்தரின் காதலை ஒத்ததன்று.



அதைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் நான் காதல் வயப்பட்ட வரலாற்றைச் சொல்லி விட வேண்டும் :

''வடக்கே ஹர்ஷ மகா சக்கரவர்த்தியுடன் நாம் ஓர் உடன்படிக்கைக்கு வந்து நர்மதைக்குத் தெற்கே அவருடைய சைனியங்கள் வருவதில்லையென்று வாக்குறுதி பெற்ற பிறகு, தென்னாட்டுப் படையெடுப்புக்கு முன் ஆயத்தம் செய்வதற்காகச் சென்றேன். தென்னாடெங்கும் பௌத்த மடங்களும் ஜைன மடங்களும் ஏராளமாக இருந்தபடியால் என்னுடைய வேலை மிகவும் சுலபமாயிருந்தது. காஞ்சி இராஜ விஹாரத்திலே



கூட நமக்காக வேலை செய்யும் பிக்ஷுக்கள் கிடைத்தார்கள். பிறகுதான், உனக்குச் சைனியத்துடன் கிளம்பும்படி ஓலை அனுப்பினேன். அனுப்பி விட்டு நான் மதுரைக்குப் பிரயாணப்படுவதற்கு முன்னால் என் வாழ்க்கையிலேயே முக்கியமான சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

''தம்பி! சளுக்க சாம்ராஜ்யத்தின் விஸ்தரிப்புக்கான வேலைகளில் நான் பூரணமாய் ஈடுபட்டிருந்தபோதிலும், இடையிடையே சிற்ப சித்திரக் கலைகளில் என் மனம் செல்லாமல் தடுக்க முடியவில்லை. காஞ்சியில் சில அற்புதமான சிற்பங்களைப் பார்த்தேன்; மாமல்லபுரம் என்று புதிதாகப் பெயர் பெற்ற துறைமுகத்துக்கருகில் சில அதிசயமான சிற்ப வேலைகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். மதுரைக்குப் போகுமுன் அவற்றைப் பார்க்க வேண்டும் என்று சென்றேன். மாமல்லபுரத்துச் சிற்பங்கள் உண்மையில் அதிசயமாகவே இருந்தன. அந்த வேலைகளை நடத்தி வைக்கும் பெரிய சிற்பி ஒருவர் அரண்யத்தின் நடுவில் வீடு கட்டிக் கொண்டு வசிப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி அவருடைய சிற்ப வீட்டைத் தேடிக் கொண்டு போனேன்.

''அந்த மகா சிற்பியின் வீட்டில் பல அற்புதங்களைக் கண்டேன். முக்கியமாக, ஆயனர் அப்போது செய்வதில் ஈடுபட்டிருந்த நடனச் சிலைகள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அஜந்தாவின் புத்த விஹாரத்தின் சுவரில் நான் பார்த்த நடனப் பெண்ணின் உருவத்தை அவை எனக்கு நினைவூட்டின. அந்த நடனச் சிலைகளைப் பார்த்து வியந்து கொண்டிருந்த போது ஒரு மகா அற்புதம் நிகழ்ந்தது. வீட்டின் பின்கட்டிலிருந்து ஒரு பெண் உருவம் நாங்கள் இருந்த சிற்ப மண்டபத்துக்கு வந்தது. ஊனும் உடலும் உயிரும் உள்ள உருவந்தான். ஆனால், அஜந்தா சுவரில் நான் பார்த்த சித்திரத்துக்கும் இந்த உருவத்துக்கும் அணுவளவும் வேற்றுமை இல்லை. அதே பூரண சந்திரனையொத்த முகம்; பொன்னிற மேனி; அதே வர்ணமுள்ள உடைகள்; நெஞ்சை ஊடுருவிப் பார்க்கும் நீண்ட நயனங்கள்; கூந்தலை எடுத்துக் கட்டியிருந்த விதமும் அப்படியே. சற்று நேரம் நான் காண்பது உண்மையான தோற்றமா, அல்லது சித்தப் பிரமையா என்று பிரமித்திருந்தேன். அந்த உருவம் அதன் செவ்விதழ்களைச் சிறிது விரித்து, 'அப்பா! இந்தச் சுவாமிகள் யார்?' என்று கேட்ட பிறகுதான், இதெல்லாம் உண்மை என்று உணர்ந்தேன். ஆயனச் சிற்பி என்னைப் பார்த்து, 'இவள் என்னுடைய மகள் சிவகாமி; இவளுடைய நடனத் தோற்றங்களைத்தான் நான் சிலை வடிவங்களாக அமைக்கிறேன்' என்றார். சற்று நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனம் ஆடினாள்.

''தம்பி! அந்த நேரம் முதல் இந்த உலகமே எனக்குப் புதிய உலகமாக மாறிவிட்டது. இவ்வுலகில் யுத்தத்தையும் இராஜ தந்திரத்தையும், இராஜ்ய பாரத்தையும் விட முக்கியமான காரியங்களும் இருக்கின்றன என்பதை உணர்ந்தேன். அஜந்தா அடிவாரத்தில் உன்னைச் சந்திப்பதற்கு முன்னால் சில காலம் அங்கே நான் கண்ட நடனச் சித்திரம் எப்படி என் உள்ளத்தைக் கவர்ந்ததோ, அல்லும் பகலும் அதே நினைவாக இருக்கச் செய்ததோ, அதே மாதிரி இப்போது சிவகாமியின் உருவம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. உள்ளத்தை மட்டுமா? ஊனையும் உயிரையும் உயிரின் ஒவ்வோர் அணுவையும் கவர்ந்து விட்டது.

''ஆம், தம்பி! சிவகாமியிடம் நான் காதல் கொண்டேன்; பிரேமை கொண்டேன்; மோகம் கொண்டேன். இன்னும் உலகத்துப் பாஷைகளில் என்னென்ன வார்த்தைகள் அன்பையும், ஆசையையும் குறிப்பதற்கு இருக்கின்றனவோ அவ்வளவு வார்த்தைகளையும் குறிப்பிட்டபோதிலும் காணாது என்று சொல்லக்கூடிய வண்ணம் அவள் மீது பிரியங்கொண்டேன். காதல், பிரேமை, மோகம் என்னும் வார்த்தைகளை இந்த உலகம் தோன்றிய நாள் முதல், கோடானு கோடி மக்கள் எத்தனையோ கோடி தடவை உபயோகித்திருக்கிறார்கள். ஆனால், அந்த வார்த்தைகளின் மூலம் நான் குறிப்பிடும் உணர்ச்சியை அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். என்னுடைய காதலில் தேக தத்துவம் என்பது சிறிதும் கிடையாது.

''சிவகாமியின் உருவத்தைக் கண்டு நான் மோகித்து விடவில்லை. அவளுடைய உருவத்தைக் காட்டிலும் அழகிய சித்திர சிற்ப வடிவங்களை நான் கண்டிருக்கிறேன்.

''சிவகாமியின் பசும்பொன் மேனி நிறத்துக்காக அவள் மீது நான் காதல் கொள்ளவில்லை. அந்த மேனி நிறத்தைக் காட்டிலும் பிரகாசமான பொன்னிறத்தை இதோ இந்தச் சந்திரனிடம் காணலாம்.

''சிவகாமியின் கண்ணழகைக் கண்டு நான் மயங்கி விடவில்லை. அவள் வளர்த்த ரதி என்னும் மான் குட்டியின் மருண்ட கண்கள் சிவகாமியின் கண்களைக் காட்டிலும் அழகானவை.

''சிவகாமியின் உடம்பின் மென்மைக்காக அவள் மீது நான் ஆசை கொள்ளவில்லை. அவளுடைய உடம்பைக் காட்டிலும் அதிக மென்மை பொருந்திய எத்த

னையோ புஷ்பங்கள் உலகில் இருக்கின்றன.

''ஆம், தம்பி, சிவகாமியிடம் நான் கொண்டிருக்கும் காதலில் தேக தத்துவம் என்பதே கிடையாது.

''ஆகையால் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உனக்காக நான் ஏற்றுக் கொண்ட பிக்ஷு விரதத்துக்குச் சிவகாமியினால் யாதொரு பங்கமும் நேரவில்லை...''

இவ்விதம் நாகநந்தி சொல்லி வந்தபோது அவருடைய முகத்தில் அசாதாரணமான ஒரு கிளர்ச்சி காணப்பட்டது. புலிகேசி தம் மனத்தில், 'இதென்ன' ஒருவகை விசித்திரமான பைத்தியம் போல இருக்கிறதே? மகேந்திரனுடைய சிறையில் வெகு காலம் கிடந்ததனால் புத்தி மாறாட்டமாகி விட்டதா?' என்று எண்ணமிட்டார்.

புலிகேசியின் முகபாவத்தைக் கொண்டு இதை ஊகித்து உணர்ந்த நாகநந்தி கூறினார் : ''இல்லை தம்பி, இல்லை! எனக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லை. இவ்வளவு தெளிவாக என்னுடைய அறிவு இதற்கு முன் எப்போதும் இருந்ததில்லை. எனக்கு உண்மையில் சிவகாமியின் மீது ஆசையே கிடையாது; அவளை ஆட்கொண்டிருக்கும் கலைத் தெய்வத்தினிடந்தான் மோகம். சிவகாமி சுயப்பிரக்ஞையை இழந்து தன்னை மறந்து ஆனந்த வெளியில் மிதந்து நடனமாடும் போது, நானும் தன் வசமிழந்து விடுகிறேன். அப்போது எனக்கு உண்டாகும் ஆனந்தம் . இந்த உலகில் வேறெந்தக் காரியத்திலும் ஏற்பட்டதில்லை. தம்பி! மகேந்திர பல்லவனை நான் எவ்வளவோ பகைக்கிறேன்; துவேஷிக்கிறேன்; ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மகேந்திரனும் நானும் ஒரே அபிப்பிராயம் கொண்டவர்கள். சிவகாமி கேவலம் மனிதர்களுக்கு மனைவியாகப் பிறந்தவள் அல்லவென்றும் அவளுடைய அற்புதக் கலை தெய்வத்துக்கே அர்ப்பணமாக வேண்டிய கலையென்றும் ஒருநாள் ஆயனரிடம் மகேந்திர பல்லவன் சொன்னான். புத்தர் சிலையின் பின்னாலிருந்து அதை நான் கேட்டேன்; அவனுடைய கூற்றை மனத்திற்குள் பூரணமாக ஆமோதித்தேன். தம்பி! நீ நிச்சயமாக நம்பலாம். சிவகாமியிடம் நான் கொண்ட காதலினால் என்னுடைய பிக்ஷு விரதத்துக்கு யாதொரு பங்கமும் நேராது'' என்று முடித்தார் நாகநந்தியடிகள்.

(தொடரும்)

## அருள்வாக்கு



தர்மம் என்றால் என்ன?

மனிதராகப் பிறந்த எல்லாருக்கும் பசி, தாகம் இருக்கிறது. அவர்கள் வசிக்க ஓரிடம் வேண்டியிருக்கிறது. குளிர், வெய்யிலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், மானத்தை ரட்சித்துக் கொள்ளவும் ஆடை அணிய வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் மனிதன் வசதி செய்து கொள்ள வேண்டும். ஏதோ ஒரு தொழிலைச் செய்தே இதற்கு வசதி செய்து கொள்கிறான். அத்தியாவசியமான சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதோடு ஒவ்வொரு மனிதனும் பிறர் விஷயமாகச் சில கடமைகளை நிறைவேற்றவும் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனும் ஏதோ ஒரு குடும்பத்தில் பிறப்பதால் அந்தக் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், பிற்பாடு கல்யாணமானதும் மனைவி மக்களுக்கும் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. தன்னுடைய சமுதாயம், தேசம் இவற்றுக்கெல்லாம் மனிதன் கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது. பலவிதத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். பலவிதத்தில் வீடு, நாடு, இவற்றுக்கான கடமைகளைச் செய்யலாம். ஆனால் மனத்துக்குத் தோன்றியபடியெல்லாம் இவற்றைச் செய்யாமல் எவருக்கும் தீங்கு விளைவிக்காத விதத்தில் அதீதமான காமமும் குரோதமும் கலக்காமல் செய்ய வேண்டும். தன்னையும் மேம்படுத்திக் கொண்டு, அனைவரையும் உயர்த்துகிற விதத்தில் தொழிலையும், கடமையையும் செய்ய முடியும். இவ்வாறு இக உலகக் காரியங்களை, சம்பந்தப்பட்ட அனைவரது ஆத்ம அபிவிருத்திக்கும் அநுசரணையாகச் செய்வதற்குத்தான் 'தர்மம்' என்று பெயர்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



# பாலம்

(இந்தப் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகள் அல்லது இதர பிரச்னைகளுக்குக் 'கல்கி' பொறுப் பேற்க இயலாது.)

●● ஏற்றுமதித் துறையில் பயிற்சி பெற்றுள்ளேன். சவுத் இந்தியன் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அளிக்கும் பயிற்சி. ஆனால் அனுபவம் இன்றி நடைமுறையில் இறங்கத் தயக்கம். எனவே அனுபவமுள்ள வர்கள் தொடர்பை விரும்புகிறேன். ஓய்வு பெற்றவராயினும் சரி, எனக்கு வழிகாட்ட முன் வருவோருக்கு நன்றியுடன் இருந்து என்னால் ஆன உதவிகளைச் செய்வதைக் கடமையாகக் கருதுவேன்.

கே.எஸ். கோவிந்தன்
சக்தி ஸ்டோர் பஸ் நிலையம்
பொன்னை - 632 514.
வ. ஆ. அ. (மாவ)

●● கதை, கவிதை, கட்டுரை எழு தும் ஆற்றல் பெற்ற மாணவர்கள், இளை ஞர்களை, இணைந்து பணியாற்ற 'இதய முரசு' இலக்கிய மாதமிருமுறை இனிதே அழைக்கிறது.

டி.என். பன்னீர் செல்வன்
20, பழநி ரத்னவேலு தெரு
சாயிநாதபுரம்,
வேலூர் - 1
வ. ஆ. (மாவ)

●● நான் சீர்காழியில் ஒரு கட் டணப் படிப்பகம் (லெண்டிங் லைப்ரரி) தொடங்கியுள்ளேன். குறைந்த கட்டணம் வாங்குகிறேன். எனக்கு மேன்மேலும் பலதரப்பட்ட புத்தகங்கள் தேவைப்படு கின்றன. படித்து முடித்த புத்தகங்களைக் கொடுக்க விரும்பினால் அல்லது சிறு தொகைக்கு விற்க விரும்பினால் நன்றி யுடன் பெற்றுக் கொள்வேன்.

ஆர். நெடுஞ்செழியன்
சூர்யா புக்ஸ்
ஜே. ஜே. காம்ப்ளெக்ஸ்
கச்சேரி ரோடு, சீர்காழி - 609 110
தஞ்சை (மாவ)

●● பி. எஸ்ஸி கணிதம் முதல் (85.6%) வகுப்பில் தேறி, இப்போது சார் டர்ட் அகௌண்டன்ட் கோர்ஸ் சேர்ந்துள் ளேன். கடினமான படிப்பு. மதுரையில் டியூஷன் எடுப்பவர் உண்டா? கைடன்ஸ் தேவை. ஆலோசனை வழங்கக் கூடியவர், புத்தகங்கள் உதவக்கூடிய நபர், அல்லது டியூஷன் எடுக்கக் கூடியவர் இருந்து தெரியப்படுத்தினால் சாதனை புரியக் காத் திருக்கிறேன்!

ஜி.எம். ஜனார்த்தனன்,
3, பாலரெங்காபுரம் மெயின்
ரோடு (பின்புறம்),
மதுரை - 625 009.

●● வயது 52. எவர்சில்வர் பாத் திரங்களுக்கு ஆர்டர் சேகரிக்கும் தொழிலில் 29 வருட அனுபவம். இதில் நல்ல லாபம் உண்டு. இன்று ஒரு சேட் என் உழைப் பினால் பயன் அடைகிறார். பார்ட்னர் வாய்த்தால் சொந்தத்தில் செய்யலாம். என்னிடமுள்ள 120 பார்ட்டிகளும் ஒத்து ழைப்பார்கள்.

ஆர். கல்யாணசுந்தரம்
7, நடுத் தெரு,
அனுப்பானடி,
மதுரை - 625 009

●● பி. எஸ்ஸி (விலங்கியல்) பட்டம் பெற்ற நான், ஆராய்ச்சிப் படிப் பினை மேற்கொண்ட மாணவர்களின் பேனா நட்பினைப் பெரிதும் விரும்பு கிறேன். அதிலும் திரைப்பட ஆர்வமுள்ள வர்கள், பழங்காலத் திரைப்படங்களை ஆய்வு செய்பவர்கள் எனக்குப் பேனா நண்பர்கள் ஆவார்கள் என எதிர்பார்க் கிறேன்.

கிருஷ்ணமூர்த்தி,
புதுச்சூரங்குடி (அஞ்சல்)
சாத்தூர் வட்டம்,
காமராஜர் (மாவ)

டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ்.

# பெட்ரோல் மிச்சப்பட...பேச்சு பயன்தர...

## வாகனங்களின் சீரான ஓட்டத்துக்கு...

1. வாகனங்களை நல்ல நிலையில் பராமரிப்பது சீரான ஓட்டத்துக்கு மட்டுமின்றி எரிபொருள் சிக்கனத்துக்கும் உதவும்.

2. சுத்தமான எரிபொருள், தரமான மசகு எண்ணெய் (Lubrication) பயன்படுத்த வேண்டும்.

3. Spark Plug, carburator அடிக்கடி சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவும்.

4. வாகன தயாரிப்பாளர்கள் பரிந்துரைக்கும் வேகத்தில் வாகனத்தைச் செலுத்துவது நல்லது.

5. டயர்களில் காற்றழுத்தத்தைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

6. Brake, clutch சரியான முறையில் பராமரிப்பது அவசியம்.

7. சரியான கியர்களைப் பயன்படுத்துவதும் பரிந்துரைத்த அளவுக்கு மேல் சுமைகளை (pay load) ஏற்றாமல் இருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

8. அளவுக்கு அதிகமான வேகம் ஆபத்தானது மட்டுமல்ல, எரிபொருள் விரயத்துக்கும் காரணமாகும்.

- பாண்டிச்சேரி, ஆர். குமார்.



## மேடைப் பேச்சாளர்களுக்கு

1. நம்மை என்ன தலைப்பில் பேசச் சொல்கிறார்கள் என்றும், எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்றும் தெரிந்து கொள்ளுங்கள்.

2. பேச வேண்டியதைச் சிறிய குறிப்பு எடுத்துச் செல்வது அவசியம். குறிப்புகள் கையடக்க காகிதத்தில் இருக்க வேண்டுமே ஒழிய, பார்த்துப் படிக்குமளவில் இருக்கக் கூடாது.

3. நாம் யாருக்கு எதிரில் பேசப் போகிறோம் என்பது முக்கியம். பாமர மக்களிடம் பேசும் போது அவர்கள் பாஷையில்தான் பேச வேண்டும். படித்தவர் மத்தியில் உரையாற்றும் போது விஷயங்கள் ஆழமாக இருத்தல் அவசியம்.

4. குட்டிக் குட்டிக் கதைகளைச் சுவையாகச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே நன்கு பிரபலமான கதைகளைச் சொல்வது, கேட்பவர்களைச் சலிப்படையச் செய்யும்.


5. நமது கருத்துக்களை மொத்தமாகத் திணிக்கக் கூடாது. பேச்சின் ஊடே அவைகளைத் தெளிக்க வேண்டும். கேட்பவர்களைக் கவர உதாரணங்களை எடுத்துக் காட்ட வேண்டும்.

6. மிகவும் முக்கியம்... குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும். மைக் கிடைத்து விட்டதே என 'வளவள'வென்று அறுக்கக் கூடாது.

- மதுரை - 1, ப. வெங்கடேஷ்.

கல்லாப் பெட்டிக்கு முன் ஈக்களாக மொய்த்துக் கொண்டு நின்றிருந்த மனிதத் தலைகளைச் 'சட்'டென்று அவன் நிமிர்ந்து பார்த்ததும் சுண்டி விடப்பட்ட வீணையின் தந்தியாய் அதிர்ந்து போனான்.

அதே நடுவகிடுத் தலைக்கேசம். ஆயினும் முன்னைவிடப் பரவலாக நரை சிதறியிருந்தது இப்போது. அதே நெட்டை நெடு தேகம். அதே வாதாம் இலைக் காதுமடல்கள். அதே குண்டு மாங்காய் மூக்கு. அதே பூனைப் பார்வை. அதே போல மணிக்கட்டு வரை



# பிழைத் திருத்தம்

போர்த்தியிருக்கும் துப்பாக்கிக் குழல் சட்டை. அதே போல தும்பபைப் பூ வேட்டி அதே -

''சார் நீங்க....?''

அவருக்கும் அதே அதிர்ச்சிதான். ஆயினும் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டார் அவனை.

''நீ வரதராஜனில்லை?''

''ஆமாம் சார்.... நீங்க என்ன சார் இங்க....?''

''பையனுக்கு இங்கதாம்பா ட்ரான்ஸ்ஃபர் ஆகியிருக்கு.... ஒரு மாசமாகுது.''

''சுகமாயிருக்கிங்கல்ல சார்?''

''நல்ல சுகம்... நீ எப்படி?''

''இருக்கேன் சார் - இந்தக் கடையைக் கவனிச்சிக்கிட்டு.''

பார்வையால் கடையை அலசினார் அவர். அத்துவானக் குகைபோல் உள்ளே இருள் கவிந்து நீண்டிருந்தது. அடுக்கி வைக்கப்பட்டிருந்த சாக்கு மூட்டைகள் உள்ளே தென்பட்டன. தரையில் வாய் மடக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளி லிருந்து அரிசி பருப்பு வகைகள் பற்கள் காட்டிச் சிரித்தன. நாலைந்து இள வட்டங்கள் சரக்குகளை அவிழ்ப்பதும் அள்ளு



வதும் நிறுத்து வாடிக்கையாளர்களிடம் கொட்டுவதுமாய்ச் சுழன்று கொண்டிருந் தனர். மூக்கைச் சுரண்டலாய் அழுத்திய மசாலா சாமான்களின் நெடி.

வரதராஜன் கூட முன்னைப் போல வற்றலாயில்லாமல் இப்போது நல்ல உப்பலாயிருந்ததைக் கணித்துக் கொண்டார் அவர். 'எத்தனை வருஷங்களாகிறது இவனைப் பிரிந்து?' அவருக்கு யோசிக்கத் தோன்றியது. 'ஐந்து வருஷங்கள் ஆகியிருக்குமா? காலச் சக்கரத்தின் நிலை கொள்ளாத சுழற்சியில் எல்லாமே விதம் விதமாகத்தான் பரிணமித்துப் போகின்றன.'

''சீட்டைக் குடுங்க சார்.... பில் போடுறேன்.''

சட்டைப் பைக்குள் கிடந்த தாளை எடுத்துத் தந்தார் அவனிடம்.

''வீட்டுல வேற யாரும் இல்லியா சார்? நீங்க கடைக்கு வந்திருக்கிறீங்க?''

''எல்லோரும் அவசரச் சோலியாய் இருக்காங்க... பேரன் சின்னப் பையன்.... அதுதான் நான் வரவேண்டியது ஆயிடுச்சு.... அதுக்கென்ன..... சும்மாத்தானே வீட்டுல அடஞ்சு கெடக்கிறேன்....''

''எப்போ சார் ரிடையர் ஆனீங்க?''

''ரெண்டு வருஷமாச்சுப்பா...''

அவர் தந்த சீட்டுக்கே பில் போட்டுக் கொண்டிருந்தான் அவன். ஆயினும் அவரின் கோரமான கடந்தகால நினைவலைகள் குமிழியிட்டுக் கொந்தளித்துக் கொண்டிருந்தன. மாணவப் பருவத்திற்கேயுரிய மமதையுடன் செயல்பட்ட காலம் அது.....

ஒன்பதாம் வகுப்பு என்பது கயிற்றின் மேல் நடக்கும் அபாய சர்க்கஸ் என்பது வரதராஜனுக்குத் தெரிந்திருந்தது. சமநிலைத் தவறினால் குப்புறத் தள்ளி விடும். அடுத்த வகுப்பு அரசாங்கப் பரீட்சை ஆனதால் ஒன்பதிலிருந்து அலசிப் பொறுக்கியே நபர்களைக் கடத்துவார்கள். கண்டிப்பு கொடிகட்டிப் பறக்கும் ஒன்பதிலே.

சதாசிவம் சார் கொஞ்சம் தாராளம் தான் என்றாலும் மாணவர்களுக்குச் சுதந்திரம் இருக்கிற அளவில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் தேவை என்பார். சிரிப்பும் கும்மாளமுமான சந்தோஷ சம்பாஷணைக் கிடையே கழுத்தில் செருகியதுபோல சீரியஸாகக் கேள்விகள் கேட்பார். பதில் தந்தால் பங்கமில்லை...

பதில் சொல்லாதவர்கள் பையன்களாய் இருந்தால், ''வாடா மாங்கொட்டை மூதி....'' என்று நிஷ்டூரமாய்த் தலையில் குட்டுக்கள் இறங்கும். மனிதருக்கு இருப்பதென்ன கையா அல்லது இரும்பு உலக்கையா என்பது மாதிரி தேகம் பதறிப் போகும்.

''நீங்கள்லாம் ஏன்டா பள்ளிக் கூடத்துக்கு வர்றீங்க? நாலு மாடுகளைப் பத்திக்கிட்டுப் போனாலாவது வீட்டுக்குப் பிர

அபிமானி

யோஜனப்படும். வந்திட்டாளுவ... டவுச ரும் சட்டையும் போட்டுக்கிட்டு. தலை களைப் பாரேன் - குருவி கூடு கட்டின மாதிரி.... தலையில மட்டும் இப்படி ஸ்டைல் பண்ணத் தெரியுதுல... படிப் பிலயும் பண்ண வேண்டியதுதானடா ஸ்டைலு.... மாங்கொட்ட மூதிகளா...''

சிமெண்டுத் தரையில் கண்ணாடி கோலியை உருட்டி விட்டதுபோல பெண்கள் பகுதியிலிருந்து சிரிப்பு உதிரும்.

''நீ சொல்லும்மா.... 144ன் வர்க்க மூலம் என்ன?''

பதிலைத் தேடி மனசுக்குள் துழாவும் பெண்ணின் கண்கள், விடை கிடைக்காத தோல்வியில் வெட்கப்பட்டுத் தாழும்.

''சிரிச்சயில்ல? சொல்லு.''

மீண்டும் தலை குனிவு.

''உனக்கே தெரியாது... நீ அவனைப் பார்த்துச் சிரிக்கிற? நீயெல்லாம் எதுக்குத் தான் பள்ளிக்கூடத்துக்கு வரியோ? வீட்டுல இருந்தா அம்மாவோட சுமையாவது குறையுமில்ல?''

அவமானத்தால் பெண்வர்க்கம் முழு தும் உதடுகள் அழுத்த, ஆண்வர்க்கம் டெஸ்க் தட்டி ஆரவாரிக்கும். பேச்சோடு பேச்சாக வாசற்பக்கம் நகர்ந்து போய் தன் சட்டைப் பைக்குள் கைவிட்டுப் பொடி டப்பி எடுத்து ஒரு சிட்டிகை 'சிர்ர்'ரென்று மூக்கிற்குள் உறிஞ்சிக் கொண்டு வருவார் சதாசிவம் சார். மாணவ மாணவியர் ஒருவ ரோடு ஒருவர் காதுகளில் ரகசியம் துப்பு வார்கள்.

''என்னல மாங்கொட்ட மூதி? அவன் காதுல எதை ஊதுற?''

பிடிபட்ட மாணவன் தயக்கத்தோடு எழுந்து நிற்பான். அஷ்ட கோணலாய்த் தேகம் நெளிப்பான். சொல்லலாமா வேண்டாமா என்று உதடுவரை வார்த் தைகளை இழுத்து மீண்டும் உள்ளுக்குள் தள்ளி விடுவான். சில சமயங்களில் சடக் கென்று உதடு தாண்டி வெளிவந்து விழும் பதில் : ''ஒரு 'பொடி' விஷயம் சார்....''

அவன் 'பொடி'யில் அழுத்தம் வைத்துச் சொன்ன வஞ்சம் அவருக்குப் புரிந்திருக்காது. புரிந்து கொண்ட மாணவக் கூட்டம் கெக்கலிப்பு விட்டுச் சிரிக்கும். அவரோ எதுவோ 'சின்ன விஷயம்' என்றே நினைத்துச் சமாதானம் ஆகிப் போவார்.

அன்று ஏனோ சமாதானமாகிப் போகாமல் வரதராஜன் சொன்ன 'பொடி' விஷயத்தில் உஷாராகிக் கொண்டார் அவர்.

''என்னடா பொடி விஷயம்? படுவா ராஸ்கல்... நான் பொடி உறிஞ்சிறதத் தானடா அப்படிச் சொன்ன? கிண்டலா பண்ணுறே?''

ரௌத்திரம் பொங்கிற்று வாத்தியாரின்



விழிகளில். அக்கினி தாண்டவம் ஆடிற்று. மூடி முழிப்பதற்குள் வரதராஜனைப் புரட்டி எடுத்து விட்டார் குச்சியால்.

வகுப்பறையே ஸ்தம்பித்து நின்று விட்டது. அடுத்த வகுப்பு மாணவர்களெல் லாம் வெளிவந்து வேடிக்கைப் பார்க்கத் துவங்கி விட்டனர். வரதராஜனுக்கோ நிமி ஷங்கள் நெருப்பில் தகித்தன.

''என்னய்யா பெரிய வாத்தியாரு நீ? எங்களுக்கு அட்வைஸ் சொல்ல வேண்டிய நீயே எங்க முன்னால நின்னு பொடி உறிஞ்சினா சிரிப்பு வருமா, வராதா?'' எதிர்த்துப் பேசி விட்டான்.

தலைமையாசிரியர் விடுப்பில் போயி ருந்ததால் சீனியரான சதாசிவம் சார்தான் அப்போது தற்காலிகத் தலைமை ஆசிரிய ராகப் பொறுப்பிலிருந்தார்.

எந்திரகதியாய் ஆபீஸ் அறைக்குள் ஓடிப் போனார் அவர். சற்றைக்கெல்லாம் கையில் வரதராஜனின் டி.ஸி.யோடு வெளியே வந்து கோபமாய் அவன் முன்னே நின்று விசிறியெறிந்தார்.

''போடா, ராஸ்கல்... ஒனக்கு இங்கே சீட் கிடையாது... கெட் அவுட்.'' சிங்க மாய்க் கர்ஜித்தார்.

வரதராஜனுக்குள்ளும் ஆவேசம் கொழுந்துவிட்டது. புத்தகக் கட்டுக்களைக் கூட எடுத்துக் கொள்ளாமல் விறைப்பாய் வெளியேறிப் போனான். அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிக் கொள்ளாமல் மதுரைக்கு வண்டியேறினான். வீட்டுப் பீரோவுக்குள் ஒளிந்திருந்த பணத்தில் நூறு ரூபாய் மதுரையில் சித்தப்பாவின் வீடு வரை வர வகை செய்தது.

ஆரம்பத்தில் அவனைத் தன் ஸ்டோரில் கையாளாகத்தான் போட்டுக் கொண்டார் சித்தப்பா. நம்பிக்கை உறுதியானதும் அந்த ஸ்டோரின் கணக்குப் பிள்ளை ஆனான்.

இருநூற்றிப் பத்து குடுங்க சார்!''

பில் போட்டு முடித்திருந்தான் வரத ராஜன். அவனிடம் எடுத்துத் தந்தார் அவர்.




மூன்று முழு நூறு ரூபாய் நோட்டுக்கள்.

பணத்தை எண்ணிக் கல்லாப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு மீதிப் பணத்தை அவரிடம் தந்தான். அதே வேகத்தில் உள் நோக்கித் திரும்பி அழைப்பு விடுத்தான்.

''டேய் சுந்தரம்... சாருக்கு இந்த பில்லுக்குப் போட்டுக் குடுத்துட்டு சாமான்களை எல்லாம் வீட்டுல கொண்டு எறக்கிட்டு வந்திருடா.''

சுந்தரம் ஓடிவந்தான். பில்லை வாங்கிக் கொண்டு, ''சரிங்க....'' என்றவாறே உள் நோக்கித் திரும்பிப் போனான்.

''எதுக்குப்பா சிரமம்? நானே ரிக்ஷா, பிடிச்சிப் போறேன்.'' அவர் சங்கடப்பட்டார்.

''பரவாயில்ல சார்..... கடைவண்டி சும்மாத்தான் நிக்குது.''

கூட்டத்தை விலக்கிக் கொண்டு சாவதானமாய் வெளிவந்தார் அவர். கவனமெல்லாம் கையில் வைத்திருந்த மீதிப் பணத்தை எண்ணுவதிலே திரும்பியிருந்தது.

சகஜமாய் அடுத்தவரிடம் 'சிட்டு' வாங்கிப் பில் போடத் துவங்கினான் வரதராஜன். அவ்வப்போது வாசலருகே நின்றிருந்த ஆசிரியரின் மேலேயும் கடைக் கண்ணால் மேய்ந்து கொண்டான். மனிதர் பழையதை இதற்குள் மறந்து போயிருப்பாரா? அல்லது மறந்து போனதுபோல பாசாங்கு செய்கிறாரா?

திடீரெனத் தன்முன்னே சார் வந்து நின்றதும் ஏறிட்டான். ''என்ன சார்?''

''இந்தா.... இந்தப் பணத்தை எண்ணு...''

கையில் வைத்திருந்த மீதிப் பணத்தை அவனிடம் தந்தார் அவசரமாக. பில் போடுவதை நிறுத்திவிட்டுப் பணத்தை வாங்கி எண்ணினான் அவன். ஐந்தும் பத்துமாய்த் தொண்ணூற்றைந்து இருந்தது. மீண்டும் எண்ணினான். அதே தொண்ணூற்றைந்து தான்.

''ஆமா சார்... அஞ்சு ரூபாய் அதிகமாய் இருக்கு....'' அசடு வழிந்தான் அவரை நோக்கி. அவசரத்தில் நின்றிருந்த வாடிக்கையாளர்கள் அவனைப் பார்த்து அடி உதட்டில் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அஞ்சு ரூபாயை எடுத்துக் கொண்டு மீதியை அவரின் கையில் தந்தான். ''உங்களைத் திடீர்னு பார்த்த பதற்றத்துல கணக்குல கோட்டை விட்டுட்டேன் சார்.'' வழியில்லாமல் பல் விரித்துக் கொண்டான்.

''எந்த நேரத்திலும் கணக்குல கரெக்டா இருக்கணும்பா.... இப்படி அஞ்சு அஞ்சு ரூபாயாய் விட்டுட்டேனா கடை எப்படி நடக்கும்? கணக்குல நீ இன்னும் ஜீரோதான் போலிருக்கு?''

கலகலவெனச் சிரிப்புப் பொங்கிற்று அவரிடம். 'இவ்வளவுதானா நீ' என்கிற மாதிரியான ஏளனச் சிரிப்பு.

''அதெல்லாம் இல்ல சார்.'' மீண்டும் பற்களைக் காட்டிக் கொண்டான்.

''ஆமாம்பா.... கணக்குல கரெக்டா இரு... இல்லைன்னா என்னைத்தான் எல்லோரும் ஏசிக் கொட்டுவானுங்க - 'யாருடா இவருக்குக் கணக்குச் சொல்லித் தந்த வாத்தியாரு'ன்னு.'' மீண்டும் கலகலத்துக் கொண்டார்.

அவரின் பெருந்தன்மையை நினைத்த போது அவனுக்குள் சிலாகிப்பாயிருந்தது. ஐம்பது காசு அதிகமாகக் கிடைத்தாலே அமைதியாகச் சுருட்டிக் கொண்டு நழுவுகிற மனிதர்களிடையே ஐந்து ரூபாயை அதிகமென்று தருகிற அவரின் நேர்மை அவனுக்குள் சிலிர்ப்பைத் தந்தது. 'கணக்கில் நீ இன்னும் ஜீரோதான் போலிருக்கு?' என்று அவர் விசாரமாய்க் கேட்டதை மனசுக்குள் இழுத்துப் பார்த்தான். பழையதை அவர் இன்னும் மறக்காதிருந்த மகாத்மியம் புரிந்தது அவனுக்கு.

''பழையதை இன்னும் மறக்கலைன்னு நெனைக்கிறேன்... என்ன சார்?'' இதழ் கடையில் புன்னகை உதிர்த்துக் கொண்டே கேட்டான். மனசுக்குள் நெருடல் இருந்தது அவனிடம்.

''அதெப்படிப்பா மறக்க முடியும்? அதை மறந்திருந்தா பொடியையில்ல நினைக்க வேண்டி வரும்?''

''புரியலை சார்?''

''இப்போ நான் பொடி உறிஞ்சிறது இல்ல.... தெரியுமா உனக்கு? உன்னைப் பள்ளிக்கூடத்திலயிருந்து துரத்திப்புட்டேன். ஆனால், நீ சொன்னது சரிதான்... வாத்தியார் சுத்தமாயிருந்தால்ல பையன்களோட அழுக்கைத் துடைக்க முடியும்..''

வரதராஜனின் விழி விளிம்புகளில் நீர் கட்டி நின்றிருந்தது. சதாசிவம் சாரின் கண்களிலும்தான்.

## 16

"குருட்டுப் பையன், குருட்டுப் பையன்னு ஏன் எப்பவும் சொல்றே?'' என்றாள் மீரா எரிச்சலுடன். ''குருடாயிருக்கிறது அவன் தப்பா?''

அம்மா திகைப்புடன் அவளைப் பார்த்தாள். ''உனக்கு ஏன்டி இப்படிக் கோபம் வருது? நா வேற எப்படி அவனை அடையாளம் சொல்ல முடியும்?''

''ஏன்? மைதிலி மேம்முடைய பையன்னு சொல்ல முடியாதா?''

அம்மா ஆற்றாமையுடன் அப்பாவைப் பார்த்தாள், நியாயம் கேட்கும் பாவனையில். அப்பா மீராவின் முதுகைத் தட்டினார்.

''ரிலாக்ஸ் மீரா'' என்றார் மென்மையாக. ''மீரா சொல்றது சரிதான் சுஜாதா'' என்றார் மெல்லிய கண்டிப்புடன். ''ஊனத்தை அடையாளம் காட்டறது தப்புதான்.''

''ஸாரி'' என்றாள் அம்மா உடனடியாக, பிரச்னையைத் தீர்க்கும் அவசரத்துடன். ''என்ன ஆச்சு சொல்லு இன்னிக்கு? பார்ட்டியிலே என்ன நடந்தது?''

அம்மாவுக்குச் சூட்சுமம் அதிகம் என்று அந்த நிலையிலும் மீராவுக்கு மெல்லிய சந்தோஷம் ஏற்பட்டது. அப்பாவிடமிருந்து மெல்ல விலகி அவள் சோர்வுடன் கட்டிலில் அமர்ந்து தலையைக் குனிந்தபடி ''வெறும் அசிங்கம்!'' என்றாள் ஆங்கிலத்தில். ''இத்தனை அசிங்கமா இங்கே இருக்கும்னு நா நினைக்கல்லே!''

அப்பா ஏதும் பேசாமல் அவளைத் தீவிர யோசனையுடன் பார்த்தபடி நின்றார்.

''ஏன் என்ன விஷயம்? அந்த மீனாட்சிதானே அழைச்சிண்டு போனா?'' என்றாள் அம்மா நிதானம் இழக்காமல்.

''ஆமாம். நா போயிருக்கக் கூடாது. காலையிலே எழுந்திருக்கும்போதே தெரியும் என்னவோ இன்னிக்குக் கெட்ட அனுபவம் ஏற்படப் போறதுன்னு.''

அப்பாவைப் போலவே அம்மாவும் பேசாமல் யோசனையுடன் அவளைப் பார்த்தாள்.

''கெட்ட சொப்பனம் வந்தது'' என்று மீரா தீவிரமான முகத்தோடு சொல்லும் போது அப்பாவின் முகத்தில் மிக லேசாகப் புன்னகைக் கோடு தோன்றி மறைந்தது.

''என்ன நடந்தது சொல்லும்மா'' என்றார் அனுதாபத்துடன்.

அங்கு நடந்ததையெல்லாம் மீண்டும் நினைவுகூர்ந்து விவரிக்கும் போது மீண்டும் அவமானம் ஏற்பட்டது. கண்களில் நீர் தளும்பிற்று. அவள் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அம்மா அப்பா இருவருமே அவள் தோளை அணைப்பதை அவள் உணர்ந்த போது ஆறுதலாக இருந்தும் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

''யார் அந்த ராஸ்கல்? எந்த இடம் அது? அட்ரெஸ் சொல்லு விசாரிக்கிறேன்'' என்றார் அப்பா படபடப்புடன்.

''இந்த ஊர்லேயெல்லாம் இப்படி நடக்கிறது என்கிற விஷயம் நம்பும்படியா இருக்கோ?'' என்றாள் அம்மா துயரமும் கோபமுமாக.

''அதனாலதான் வீட்டுக்குத் தெரியாம நடக்கிறது!'' என்றாள் மீரா. ''அந்த மீனாட்சி அத்தனை பொய் சொல்றதுக்கு இதுதான் காரணம்.''

''அந்த மிஸஸ் செல்லப்பன்கிட்ட விவரமாச் சொல்லணும்!''

''ஒண்ணும் பிரயோஜனமிருக்காது'' என்றாள் மீரா அலுப்புடன். ''அந்த ஆன்ட்டிக்கு இதைப் பத்தியெல்லாம் தெரியாம இருக்காதுன்னு நினைக்கிறேன். மீனாட்சியே சொல்றா. எங்கம்மா என்னைக் கேட்க பயப்படுவாங்க. ஏன்னா நா அவங்க நடத்தையைப் பத்தித் திருப்பிக் கேட்பேன்ங்கறா.''

''என்ன இது ஒரே அசிங்கமாயிருக்கும் போலேயிருக்கே?'' என்றார் அப்பா அப்பாவியாக.

''நீ ஏன் அந்த மாதிரி பெண்களோட போறே?'' என்றார் மெல்லிய கோபத்துடன்.

''அவ எனக்கு நெருக்கமான சிநேகிதி இல்லே. அவ ஒரு முட்டாள்னு ஒதுங்கியே இருப்பேன். இன்னிக்குப் பார்ட்டிக்கு வான்னு ரொம்பக் கட்டாயப்படுத்தினான்னு போனேன். பரீட்சை முடிஞ்சு போச்சு. கொஞ்சம் ஜாலியா இருக்க

# காதலெனும் வானவில்

வாஸந்தி


லாம்னு. அப்பா, எனக்கு இங்க கொஞ்சமும் பிடிக்கல்லே. திரும்பி அமெரிக்காவுக்குப் போயிடலாம் போல இருக்கு.''

''இந்த ஒரு சம்பவத்தினாலே உனக்கு இந்தியா வெறுத்துப் போச்சா?'' என்றார் அப்பா உத்வேகத்துடன். ''இதைவிட பயங்கர விஷயங்கள் அமெரிக்காவிலே நடக்கிறது. நீ பதினைஞ்சு வயசு வரை பார்த்த அமெரிக்காதான் நிஜம்னு நினைக்காதே மீரா. அதோடு இந்த இரண்டு வருஷ அனுபவத்தை வெச்சு இந்தியாவை எடை போடாதே.''

அப்பாவின் குரலில் மெல்லிய கோபத்துடன் ஆதங்கம் இழையோடிற்று. நீ எப்பொழுது புரிந்து கொள்வாய் என்கிற மாதிரி.

''இங்கே எல்லாத்தையும் மூடி மூடி வைக்கிறது எனக்குப் பிடிக்கல்லே'' என்றாள் அவள் ஆத்திரத்துடன். ''எத்தனையோ விஷயங்கள் பிடிக்கல்லே. எனக்குப் புரியல்லே டாட்! பாதி விஷயங்கள் புரியல்லே. இன்னிக்கு லலிதாங்கி மேம் சொன்ன மாதிரி ஏகப்பட்ட 'லெவெல்ஸ்' இருக்கு இங்கே. ஒண்ணோடு ஒண்ணு சேர மாட்டேங்குது. கறுப்பு வெள்ளை விரோதம் எனக்குப் புரியறது. இங்கே இருக்கிற விரோதங்கள் புரியல்லே. யாருமே நார்மலா இல்லேன்னு ஆத்திரம் வருது. இந்தக் கூட்டத்திலே நார்மலா இருக்கிற ஒரே ஒரு சிநேகிதன் ஹரிதான். அதனாலேதான்





''ஏன்தான் தனிக் கட்சி ஆரம்பிச் சோமோன்னு இருக்கு!''
''ஏங்க?''
''கட்சியில் தனியா இருக்கப் பயமா இருக்குதே!''
- ஞா. ஞானமுத்து

அவன் வீட்டுக்கு அடிக்கடி போறேன். நீங்க அவனைப் பார்க்கணும் டாட்.''

அப்பா அவளை ஏதோ தீவிர யோசனையுடன் பார்த்தார். அம்மா மௌனமாகத் தன்னுள் ஆழ்ந்த யோசனையுடன் நின்றிருந்தாள். சட்டென்று சுயப்பிரக்ஞை அடைந்தவர் போல் அப்பா அவளைப் பார்த்துச் சிரித்தார்.

''கண்டிப்பாப் பார்க்க வரேம்மா'' என்றார் கனிவுடன். ''சின்னப் பையனா?''

''இல்லே. என்னை விட நாலைஞ்சு வயசுப் பெரியவன். எம்.ஏ. ஃபிலாஸஃபி படிக்கிறான். ரொம்ப உற்சாகமா இருப்பான். கண்ணாலே பார்க்காமயே எல்லா விஷயத்தையும் கிரகிச்சுப்பான். அவன் தான் எனக்கு இப்ப ஃப்ரெண்ட், ஃபிலாஸபர் அண்டு கைடு.''

அப்பாவும் அம்மாவும் சில வினாடிகள் ஒரு வினோதமான மௌனத்தில் இருந்தார்கள். அவள் அதைச் சட்டை செய்யாமல் பேசிக் கொண்டு போனாள்.

''வேடிக்கை தெரியுமோ? அவனோடு பேசும் போது அவனுக்குப் பார்வையில்லேங்கற எண்ணமே எனக்கு ஏற்படறதில்லே. இன்னிக்குப் பாவம் அவனுக்கு ஜுரம். என்னைப் பார்க்கணும்னு அவனுக்கு ரொம்ப ஆசையா இருந்ததாம். நா அவன் வீட்டுக்குப் போகிறதாவே இருக்கல்லே. நம்ம வீட்டுக்கு வரணும்னு பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். ஆழ்வார் பேட்டை பஸ் வந்தது. நேர அவன் வீட்டுக்குப் போனேன். அவனோடு பேசின பிறகுதான் மனசிலே இருந்த கோபமும் துக்கமும் சமாதானமாச்சு. இத்தனைக்கும் பார்ட்டியைப் பத்தி அவன்கிட்டப் பேசவேயில்லே.''

''உம் குட்'' என்றார் அப்பா நிதானமாக. ''அவனுடைய அப்பா என்ன செய்யறார்?''

''அவனுக்கு அப்பா இல்லே. அதாவது அவங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் விவாகரத்து ஆயிட்டது.''

''ஓ!''

அந்த 'ஓ'வில் ஏதேதோ அர்த்தங்கள் இருப்பது போல் மீராவுக்குத் தோன்றிற்று. காரணம் புரியாமல் எரிச்சல் ஏற்பட்டது. அம்மாவும் பேசாமல் நின்றது விசித்திரமாக இருந்தது. அவள் அழுததன் காரணத்தையே மறந்து இவர்கள் வேறு ஏதோ திசையில் போகிறார்கள். காட், எப்படி மாறி விட்டார்கள்!

''வேற யாருமே ஃப்ரெண்ட்ஸ் இல்லையா உனக்கு?'' என்றார் அப்பா.

''இல்லே'' என்று அவள் பலமாகத் தலையசைத்தாள். ''அமெரிக்காவிலே எரிக் இருந்தான். இங்கே ஹரி.''

அம்மா சிரிப்பதைப் பார்த்து மீராவும் சிரித்தாள். ''என்னை ராங்கிக்காரின்னு என் வகுப்புப் பெண்கள் சில பேர் சொல்லுவாங்க. எனக்கு அதைப் பத்திக் கவலையில்லே. என்னை விட வயசானவங்களோடதான் இங்கே என்னாலே பேச முடியறது. யசோதாவும் நானும் எத்தனை நெருக்கமாப் போனோம்! லலிதாங்கி மேம் கூட இன்னிக்கு என்கிட்ட தன் கதையைச் சொல்ல ஆரம்பிச்சா! அம்மா, இனிமே டான்ஸ் கிளாஸ் கிடையாது.''

''ஏன்?''

''மேமுக்குக் கல்யாணம்!''

''யாரு?'' என்றாள் அம்மா கண்களை மலர்த்தி.

''அந்த நாகராஜனுக்கும் அவளுக்குமா?''

''ஆமாம்'' என்று மீரா சிரித்தாள். ''அந்த மாதிரியான ஒரு காதல் கதையை நீ கேட்டிருக்க மாட்டே.''

லலிதாங்கியின் கதையைச் சொன்னதும் அங்கிருந்த இறுக்கம் சற்று குறைந்தது போல் இருந்தது. அப்பாவின் முகத்திலும் புன்னகை படர்ந்திருந்தது.

''நாகராஜனுக்கு இப்படி ஒரு பழைய சரித்திரம் இருந்ததே யாருக்கும் தெரியாது. அவனுக்கு டான்ஸ்லே இன்டரெஸ்ட் உண்டுன்னும் தெரியாது.''

''டான்ஸ் ஆடறவ மேல காதல்னா டான்ஸ்லே இன்ட்ரெஸ்ட் இருக்கும்னு யார் சொன்னது?'' என்று அம்மா சிரித்த போது லலிதாங்கியை நினைத்து மீராவுக்குப் பாவமாக இருந்தது.

''இந்த ரெண்டு வருஷத்திலே இந்தியாவைப் பத்தி நா எடை போட்டது சரியோ தப்போ தெரியாது, ஒன்று மட்டும் நிச்சயமாத் தெரியறது. இங்கே காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கறது அத்தனை சுலபமில்லே. இது எனக்கு ரொம்பப் பெரிய ஆச்சரியமாயிருக்கு.''

''சிக்கல்கள் இருக்கத்தான் இருக்கும்'' என்றார் அப்பா நிதானமாக. ''குடும்பம்



# நான் பணி ஓய்வு பெறும்போது ஒரு போதும் என் மகனுக்கு பாரமாக இருக்கமாட்டேன்.

## எல்ஐசி'யின் ஜீவன் தாரா

### வாழ்நாள் முழுதும் ஓய்வு-ஊதியம்பெற உத்தரவாதம் எனக்கு.

எல்ஐசியின் ஜீவன்தாரா ஓய்வு-ஊதிய (பென்ஷன்) திட்டம் — முதுமைக் காலத்தில் அதிகம் தேவைப்படும் பாதுகாப்பு. உத்தியோக ஓய்வு பெறுவதற்கு நெடுநாள் முன்பே ஜீவன்தாரா தொடங்கிவிடுகிறது. பிரகாச வாழ்நாள் முழுதும் மாதவருமானம் தரும் திட்டம். அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை பாருங்கள்:

நீங்கள் 35 வயதில் தொடங்கி, உங்கள் 59 வயது வரையிலும் மாதாமாதம் 500 ரூபாய் பிரீமியம் செலுத்தி வந்தீர்களானால், உங்கள் 60 வயது முதல் ஆயுட்காலம் முழுதும் மாதாமாதம் ஓய்வு ஊதியமாக குறைந்தபட்சம் 5595 ரூபாய் பெறுவீர்கள்.

ஜீவன்தாரா தரும் நற்பலன்களைப் பாரீர்:

- பின் தேதியிட்ட 12 செக்குகள் (ஒவ்வொரு மாதத்திற்கு உரியது) ஒவ்வோர் ஆண்டின் துவக்கத்திலும் கிடைக்கும்.
- ஆண்டுக்கு 40,000 ரூபாய் வரை கட்டப்படும் பிரீமியங்கள் வருமான வரிச் சட்டத்தின் 80 சிசிசி — பிரிவின் கீழ் வருமான வரி விதிப்புக்கு உட்பட்ட வருமானத்திலிருந்து 100 சதவீதம் வரிவிலக்கு உரிமை பெறும்.
- அசல் தொகை சட்டப்பூர்வமான வாரிசு தாரர்களுக்கு வழங்கப்படும்.
- 31.3.89-ல் அல்லது அதற்கு முன்பாக ஒழுங்கில் துவங்கிய பாலிசிகளில் ஒவ்வொரு 1000 ரூபாய்க்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் 1.4.91லிருந்து 31.12.92 வரையிலான காலத்தில் இறப்புரிமைத் தொகையுடன் ரூ. 4/- இறுதி போனஸாக வழங்கப்படும். 1.4.91லிருந்து 31.12.92 வரையிலான காலத்தில் ஒழுங்கில் துவங்கும் பாலிசிகளுக்கு ஒவ்வொரு 1000 ரூபாய்க்கும் ரூ. 3/- போனஸாக வழங்கப்படும்.

இலவசப் பிரசுரம் மற்றும் விபரங்கள் பெற அருகிலுள்ள எல்ஐசி அலுவலகத்தோடு அல்லது எந்த ஒரு எல்ஐசி ஏஜெண்டோடு அல்லது டெவலப்மெண்ட் ஆபீஸரோடு தொடர்பு கொள்க. இனிதே உதவி கிடைத்திடும்.

**லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா**

CLARION C-LIC-11R-TML

என்கிறது இங்கே தனி மனுஷனை விட முக்கியமானது.

''எனக்கு இதையெல்லாம் புரிஞ்சுக்க முடியல்லே'' என்றாள் அவள் ஆயாசத்துடன். ''எனக்கு நீங்களும் அம்மாவும் முக்கியம்தான். ஆனா என்னுடைய வாழ்க்கை எனக்குச் சொந்தமானது. நா இஷ்டப் பட்டவனை நா கல்யாணம் செய்துக்க எனக்குச் சுதந்திரம் வேணும். பெரியவங்க தடுத்ததாலே இருபது வருஷம் காத்திருந்து வாலிபம் எல்லாம் போய் ஒருத்தனைக் கல்யாணம் செய்துக்கறது எத்தனை அநியாயம்? யசோதா வெங்கடேஷ் கதையையே எடுத்துக்குங்க. அவங்க ஏதோ குற்றம் பண்ண மாதிரி பாட்டியும் தாத்தாவும் ஒதுக்கி வெச்சது எந்தவிதத்திலே நியாயம்?''

''இதப் பார், அவர்களுக்கும் உனக்கும் சம்பந்தமில்லே. நீயேன் இதைப் பத்தியெல்லாம் நினைச்சுக் கவலைப்படறே?''

''எனக்குக் குழப்பமா இருக்கு. கவலைப்படாம இருக்க முடியல்லே.''

''அது அசட்டுத்தனம்'' என்றார் அப்பா பொறுமையில்லாமல். ''உனக்கு இன்னும் சின்ன வயசு. வேண்டாத விஷயங்களைப் பத்தி வீணா மனசைக் குழப்பிக்காதே. பரீட்சை நெருங்கிண்டிருக்கு. நன்றாய்ப் படி. அமெரிக்கா போய்ப் படிக்கணும்னா படி. இப்ப படிப்பு முக்கியம்.''

அதாவது காதல் கத்தரிக்காய் விவகாரத்தில் இப்பொழுது சிக்கிக் கொள்ளாதே என்கிறார்.

அவள் பதில் ஏதும் சொல்லாமல் அமர்ந்திருந்தாள். தன்னுடைய மனக் குழப்பங்களை இவர் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. அம்மாவுக்குப் புரிந்த அளவு கூட இவருக்குப் புரியாது என்று தோன்றிற்று.

அவர் அவளுடைய முதுகைச் சிநேகிதமாக அணைத்தார்.

''நீ இன்னும் இங்கே முழுக்க செட்டில் ஆகல்லேன்னு எனக்குத் தெரியும். போகப் போக உனக்குத் தெளிவு ஏற்படும். எல்லா இடத்திலேயும் நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு. இங்கே தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் எத்தனையோ இன்னும் இருக்கு. இன்னிக்கு உனக்கு ஏற்பட்ட அனுபவம் மோசமானதுதான். எச்சரிக்கையா இருன்னுதான் நான் சொல்ல முடியும். அந்தப் பசங்களைப் பத்தி நான் விசாரிக்கறேன். குட், தப்பிச்சு வந்தியே! ஆண்டவனுடைய அருள்தான்.''

''ரப்பிஷ்! என்னுடைய சொந்த சாமர்த்தியம்னு உங்களுக்குத் தோணல்லே?''

''ஓ.கே. உன் சாமர்த்தியம்'' என்று அப்பா சிரித்தார். ''இனிமே அதைப் பத்தியே நினைச்சிண்டிருக்காதே. அது ஒரு மைனாரிட்டி க்ரூப்.''

வாசலில் யாரோ வந்திருக்கும் அரவம் கேட்டு அம்மா கீழே சென்றிருந்தாள். ''அப்புறம் இன்னொரு விஷயம் மீரா'' என்றார் அவர் மெல்லிய தயக்கத்துடன்.

''அந்த ஹரியைத் தவிர வேற நல்ல சிநேகிதங்களை நீ ஏற்படுத்திக்கணும்.''

''ஏன்?''

''அவன் ரொம்ப நல்ல பையனா, கெட்டிக்காரப் பையனா இருக்கலாம். ஆனா அங்கஹீனமானவன். அப்படிப் பட்டவனோட மட்டுமே நெருக்கமான சிநேகிதம் நாளடைவிலே பாரமாப் போகலாம்.''

''போகாது'' என்றாள் அவள் வேகத்துடன். தனக்கு ஏன் கோபம் வருகிறது என்று புரியாமல். ''என்னைப் பொறுத்த வரை அவன் அங்கஹீனமானவன் இல்லே. ஹி இஸ் நார்மல். உண்மையிலே நமக்கெல்லாம் இல்லாத ஒரு பார்வை அவனுக்கு இருக்கு.''

அப்பா சில விநாடிகள் அவளை ஆழ்ந்து பார்த்தார். பிறகு லேசாகப் பெருமூச்சு விட்டபடி எழுந்தார்.

''இருக்கலாம். ஒரு நாளைக்கு அவனைப் பார்க்க நானும் வரேன். இப்ப உனக்குப் படிப்பு முக்கியம். அதிலே கவனம் செலுத்து.''

''அப்பாவின் பெருமூச்சும் பார்வையும் வெகு நேரத்துக்கு அன்று மனத்தை அலைக்கழித்தன. இரவு படுக்கப் போகு முன் திடீரென்று, தோன்றிற்று. யசோதாவைப் பார்க்காமலே அத்தைப் பாட்டிக்குப் பிடிக்காமல் போனது போல ஹரியைப் பார்க்காமலே அப்பாவுக்கு அவனைப் பிடிக்காமல் போய் விட்டது.

(தொடரும்)



❑ ''நாடு திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறதா, அல்லது திசை தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறதா?'' என்பது பற்றிப் பட்டிமன்றத்தில் விவாதம் நடந்தது. நடுவர் திரு. சிச்சபேசன் வழங்கிய தீர்ப்பு :

''நாடு திட்டமிட்டு, திசை தெரியாமல் போய்க் கொண்டு இருக்கிறது!''

- அ. ஷண்முகசுந்தரம்



# 'டீ.வி.பட்டிமன்றத்துக்கு ஒரு தலைப்பு!'

இந்த வருடம் பொங்கலன்று என்ன பட்டிமன்றம் வைத்துக் கொள்ளலாம் என்று சென்னைத் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகள் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தனர்.

ஓர் அதிகாரி, 'பெண்களுக்கு அழகு நீண்ட முடியா அல்லது சுருண்ட முடியா?' எப்படி என் தலைப்பு' என்றார்.

அடுத்த அதிகாரி அவரை முறைத்தார். ''யோ! உமக்கு எப்போதுமே முடியைப் பத்திதான் கவலை. உமக்கு ஆண்டவன் தலையில மூளையும் வைக்கல, முடியும் வைக்கல'' என்றார்.

முடியைப் பற்றிச் சொன்ன அதிகாரி கப்பென வாயை மூடிக் கொண்டார்! பள பளவென்றிருந்த தன் மொளைக் தலையை வருடிக் கொண்டார்!

''நான் ஒரு ஐடியா சொல்றேன்'' என்றார் வேறு ஒரு அதிகாரி. அவர் முகத்தில் 'சே! என்னமா தலைப்பு நம்ம மண்டையில உதிக்குது' என்ற பிரகாசம் தெரிந்தது.


மற்ற அதிகாரிகள் அவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

''சொல்லுங்க... சொல்லுங்க'' என்று சந்தோஷமாகக் கத்தினர்.

''நடையில் சிறந்தவள் கண்ணகியா, மாதவியா?'' என்றார் பெருமை பொங்க.

உடனே முதுகில் தாக்கப்பட்டார். ''டேய்! தலைப்பா சொல்ற...! கண்ணகியின் நடையையும் மாதவியின் நடையை

அருண்



"நம்ம படத்தில் வரும் வில்லன் காரெக்டருக்கு ஒரு பயங்கரமான பேர் வைக்கணும். என்ன பேர் வைக்கலாம்?"
"இதென்ன லார் பிரமாதம்?"
"பங்காரப்பா"ன்னு வைச்சுட்டாப் போச்சு!"

- தேவேந்திரன்

யும் யார் பார்த்தது... தலைப்பு சொல்ல வந்திட்டான்" என்றவர் "நான் ஒரு தலைப்பு சொல்றேன்" என்றார்.

முதுகில் அடிபட்டவர் முதுகைத் தடவிக் கொண்டே அடித்தவரைப் பார்த்தார். (முறைத்தார்) இவன் மட்டும் நல்ல தலைப்பு சொல்லிக் கி ழி ச் சி ட ப் போறான்...' என்று மனத்தில் கறுவினார்.

முதுகில் தட்டிய அதிகாரி யோசித்தார். சிறிது நேரம் அண்ணாந்து கூரையைப் பார்த்தார். கைகளையும் வலிப்பு வந்தவர் போல ஆட்டிக் கொண்டார்.

அதைப் பார்த்த மற்ற அதிகாரிகள் பயந்து விட்டனர். 'ஐயோ! தலைப்பை யோசித்து யோசித்து இவருக்கு மூளை கலங்கி விட்டதா' என்று பயந்தனர்.

ஆனால் அந்த அதிகாரி பேச ஆரம்பித்தார். "...பொங்கல் நிகழ்ச்சி மிகவும் சிறப்பா இருக்கணும். பார்க்கிற வன் பயங் கரமா பாராட்டணும்... அப்படிப் பட்ட தலைப்பா இருக்கணும். அதனால... தலைப்பு ரொம்ப கவர்ச்சியா இருக்கணும். எனவே... 'ஆண்களை வதைப்பது சின்ன வீடா அல்லது பெரிய வீடா...' எப்படி நம்ம தலைப்பு?" என்றார்.

அத்தனை அதிகாரிகளும் சிவபெருமானாக மாறி தங்கள் நெற்றிக் கண்களைத் திறக்க, அதிர்ந்து போன அந்த அதிகாரி.... "ம்... எனக்கு வயத்தைக் கொஞ்சம் கலக்குது..." என்று நைசாக நழுவினார்.

ஒவ்வொருவரும் தலைப்புக்காகத் தங்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க...

அப்போதுதான் அந்த அறைக்குள் நுழைந்தார் அவர்களின் உயர் அதிகாரி.

"என்ன இங்கே கலாட்டா? என்ன எல்லாம் கூடி கூடிப் பேசிட்டிருக்கீங்க... போங்க... போய் 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' சிலைடை எடுத்துத் தயாரா வையுங்க. போங்க...." என்றார்.

கூடியிருந்த அதிகாரிகள் தங்கள் மேல் அதிகாரியைத் தயக்கத்துடன் பார்த்தனர்.

"....சார்! 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' சிலைடு எப்பவுமே நம்ம ஸ்டுடியோவில தயாரா இருக்கும்... ஆனா..." என்று இழுத்தார் ஒரு அதிகாரி.

"என்ன மேன் ஆனா...?" என்றார் உயர் அதிகாரி அதிகாரத்துடன்.

"...இந்த பொங்கல் நிகழ்ச்சியைப் பத்தி அலசிட்டிருந்தோம்... இந்த வருஷம் புதுமையா நிகழ்ச்சியை அமைக்கணும்னு இருக்கோம்..."

"வெரி குட்!" மகிழ்ந்து போனார் உயர் அதிகாரி. "என்ன செய்யப் போறீங்க?" என்றார்.

"ஒரு பட்டிமன்றம் நடத்தலாம்னு..." என்று இழுத்தார் ஒரு குட்டி அதிகாரி.

உயர் அதிகாரியின் முகம் மலர்ந்தது. "ஆகா! மிகவும் புதுமையான நிகழ்ச்சி. இது ஒரு நல்ல கருத்தாகத் தோன்றுகிறது... ஆனால்' பாருங்கள்... நிகழ்ச்சியை நீட்ட முடியாது... ஏன் என்றால் நேரம் பற்றாக் குறை..." என்றார் அதிகாரி எதிரொலி நினைப்பில்.

"சார்! நாம இப்ப எதிரொலி நிகழ்ச்சில இல்லை" என்று நினைப்பூட்டினார் மற்றொரு அதிகாரி.

"ஓ! ஆமாம்" என்ற அந்த உயர் அதிகாரி, "பொங்கலுக்குப் பட்டிமன்றமே வைச்சிடலாம்" என்றார்.

"அதற்குத்தான் ஒரு நல்ல தலைப்பைத் தேடிட்டிருக்கிறோம்" என்றனர் அதிகாரிகள்.

"சே! இதுக்கா இவ்வளவு கஷ்டப் படுறீங்க... நான் ஒரு நல்ல தலைப்பா சொல்றேன்... பொங்கல் என்பது விவசாயத்தைப் பற்றியது. அதுவும் மாட்டுப் பொங்கல் என்பது மிகவும் முக்கியமானது. அதனால மாடு, எருமை, இப்படி - இவைகளைச் சம்பந்தப்படுத்தித் தலைப்பு வைச்சா நல்லா இருக்கும்..."

உடனே குட்டி அதிகாரிகள் பலமாகக் கைதட்டினர். "அபாரமான ஐடியா" என்றனர்.

அந்த உயர் அதிகாரி தன்னைச் சுற்றிலும் இருந்த குட்டி அதிகாரிகளைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டார். "நான் தலைப்பைச் சொல்றேன்... எழுதிக்கங்க" என்றவர் மிக உற்சாகத்துடன் சொன்னார் :

"கருப்பில் சிறந்தது டெல்லி எருமையா அல்லது சென்னை எருமையா?" எப்படி தலைப்பு என்றார்.

"தூள் சார்! கொன்னுட்டீங்க!" என்றனர் குட்டி அதிகாரிகள். அவர்களின் உற்சாகக் கை தட்டு வானைப் பிளந்தது.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

## பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

(நிறுவியது 1985)

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி) சென்னை - 3

தொலைபேசி : 582676

உங்கள் வசதிக்கேற்றவாறு பயனடைய பற்பலச் சிறந்த திட்டங்களை அளிக்கும் மேற்கண்ட நிறுவனத்தில் உறுப்பினராகுங்கள்.
பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 20% வரை வட்டி
சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி
உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது

### KAMADHENU SUPER PAY BACK SCHEME

Deposit Rs. 100/- per month for 15 years.

a) Get back Rs. 6,000/- at the end of 5th year

b) Get back another Rs. 6,000/- at the end of 10th year.

c) And then Rs. 50,000/- on maturity.

### பென்ஷனர் பாரடைஸ் திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் முச்சலுகைத் திட்டம்.
சேமிப்பு ரூ. 13,000/-
வட்டி வீதம் - 19%
கால வரம்பு - 12 மாதங்கள் மட்டுமே
முன்னதாகவே பெறும் காசோலைகள்.
விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும் இதில் சேரலாம்.

### பொற்குவியல் திட்டம்

ரூ. 100/- மட்டுமே பிரதி மாதம் செலுத்தி 25 வருட முடிவில் ரூ. 3 லட்சம் (Rs. 3,00,000/-) பெற்றுப் பயனடைவீர்.
ஒரே ஒரு தடவை ரூ. 6666/- ஐச் செலுத்தி 25 வருட முடிவில் ரூ. 3 லட்சத்தோடு நீங்கள் செலுத்திய பணத்தையும் சேர்த்துப் பெறலாம்.

### குபேர டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,20,000 பெறலாம்.
ரூ. 9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,44,000 பெறலாம்.
கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக் கடன் பவுனுக்கு ரூ. 2400/- வட்டி 22.2%
கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D. கட்ட வேண்டியதில்லை.

கௌரவ ஆலோசகர்
P. பாலசுப்ரமணியம் B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை - 3

இயக்குநர் குழுத்தலைவர்
R. விவேகாநந்தன் B.Com

குழு உறுப்பினர்கள் :

திரு P. ஏகாம்பரம்
திருமதி B. விசாலாட்சி
திரு P.K. சந்திரசேகரன்
திரு P.K. சிவகுமார்

திரு G. ஏகாம்பரம் செட்டியார்
திரு K.T. ஷண்முகம்
திரு C.T. ஷண்முகம் Ex. J.P.
திரு P.T. ஷண்முகம் B.E.

திரு V.A. ஞானப்பிரகாசம்
திருமதி கோமதி சுந்தரம் B.Sc.
திரு P.E. ராமச்சந்திரன் B.Com.

பங்குதாரர்களுக்கு மட்டும்.

**Business Hours :** Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon. Friday Weekly Holiday.

# கடைசி அத்தியாயம்



இந்தக் கவிதை
எழுதுகோல் வடிக்கும் இந்தியக் கண்ணீர்
இது கல்கியில் அவதாரம் எடுக்கும்
கவிதை மட்டுமல்ல -
கல்கி அவதாரம் பற்றிய கவிதையும்தான்...
பாரத அன்னைக்குத் தற்போது
பாகப் பிரிவினை நடக்கிறது
முன்பெல்லாம் ஐந்து வருடத்திற்கு ஒருமுறை
குழிதோண்டிப் புதைக்கப்பட்ட ஜனநாயகம்
இப்போதெல்லாம் அடிக்கடி
குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது...
எங்கள் ஜனநாயகத்தில்
செத்தவன் கூட வோட்டுப் போட முடிகிறது
ஆனால் வோட்டுப் போட்டவன்
செத்துக் கொண்டு இருக்கிறான்..
காந்தி கண்ட ராமராஜ்யத்தில்,
இன்று யுத்தகாண்டம்
ஆரம்பமாகி விட்டது..
இதனால் ராமனுக்குப் பட்டாபிஷேகத்துக்குப் பதில்
ரத்தாபிஷேகம் நடக்கிறது..
நல்ல புடைவையோடு வந்த சுதந்திரதேவி இன்று
வெள்ளைப் புடைவையோடு வீதி உலா வருகிறாள்..

●●●

பார்வையாளர்கள் இல்லாமலேயே
பணம் சம்பாதிக் கின்றனர்
எங்கள் பாராளுமன்ற நடிகர்கள்..
அரசு பேருந்துகளை எரித்துத்தான்
எங்கள் அரசியல் கட்சிகள் வளர்கின்றன..
கோஷம் போட்டே இவர்கள்
கொடியின் சாயத்தைப் போக்கி விட்டனர்..
அமைதி ஊர்வலத்தில்தான் இங்கு
அடிதடியே ஆரம்பமாகிறது..
இவர்கள் கண்ணாமூச்சி விளையாட
நீதியின் கண்களையா கட்ட வேண்டும்..?

●●●

இந்தியா சமயச் சார்பற்ற நாடு
ஆம். லஞ்சம் வாங்குவதில் மட்டும்.
எங்களைப் பொறுத்தவரை சட்டமும் ஒன்றுதான்
பட்டமும் ஒன்றுதான்
இரண்டும் அதிக விலைக்கே
அசைந்து கொடுக்கும்..

50

பொன் விழா கவிதைப் போட்டி

அறிமுக எழுத்தாளர்



மகாத்மா இன்று இருந்தால்
முதியோர் கல்வியில் கூட இடம் கிடைக்காமல்
முடங்கிக் கிடப்பார்..
பாரதியே! தாயின் மணிக்கொடி
பட்டொளி வீசிப் பறக்கிறது; ஆனால்
தாயின் வயிறு மட்டும்
பட்டினியாய்க் கிடக்கிறது..
அண்டார்டிகாவின் அடிக்கோட்டைக்
கடந்த பாரதம் இன்னும்
வறுமைக் கோட்டை மட்டும்
கடக்காமல் இருக்கிறது..
உழுபவனுக்கு நிலம் சொந்தம்
ஆம். உழும் போது அல்ல
அவன் உறங்கும் போது
ஆறடி நிலம் சொந்தம்..

●●●




கவலை வேண்டாம் இளைஞனே -
இங்கு காப்பிப் பொடி வாங்கினால்
கரண்டி இலவசம்
காய்கறி வாங்கினால்
கருவேப்பிலை இலவசம்
கல்யாணம் செய்து கொள்ளுங்கள்
குடும்பக் கட்டுப்பாடு இலவசம்..
மாற்று இருதயம் வைக்கத்
தெரிந்து கொண்ட நாம் அதில்
ஈரம் வைக்க மறந்து போனோம்..
கூடுகட்டி வாழத் தெரிந்து கொண்ட நாம்
கூடி வாழத் தெரியாமல் போனோம்..
நாங்கள் நாற்காலிகளுக்கு
ஆசைப்பட்டு நடப்பதையே
மறந்து போனோம்..
எங்கள் இளைய பாரதமோ
இருபது வயதிலேயே
இளைத்துப் போனது..

●●●



நாம் கைகளை உயர்த்திக்
காயப் பட்டுக் கொண்டது போதும்
இனியாவது தோள்களை உயர்த்தத்
தெரிந்து கொள்வோம்..
எங்கள் கண்ணீர்க் கதையை
ஆண்டவனிடம் கூடச் சொல்லி அழ முடியவில்லை
காரணம்
கடவுளைக் காண்பதற்குக் கூட இங்கு
கட்டணம் வசூலிக்கிறார்கள்..



**டி. ராமு**



பொன் விழா ஆ

# கல்யாண

## தப்ப வைத்த தப்பு!

விமானப் படையில் பணிபுரிந்து கொண்டிருந்த நான், இரண்டு மாத லீவில் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஊருக்கு வந்தேன். பட்டாளக்காரனுக்குப் பெண் கொடுக்கப் பலரும் பயந்தனர். லீவு கரைந்து கொண்டிருந்தது. இந்தச் சமயம் கல்யாணமும் நிச்சயமாகி முகூர்த்தம் குறிக்கப்பட்டது. லீவு முடிந்து நாலு நாள் சென்றே முகூர்த்த தினம். லீவு எக்ஸ்டென்ஷன் கோரி தந்தி கொடுத்தேன். இந்தியா பாக் போர் மூளும் போலிருந்த தருணம். 'லீவு கிடைக்குமோ?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரம் தந்தி வந்தது : ''எக்ஸ்டன்ஷன் கிராண்டட்!''

திருமணம் சிறப்பாக முடிந்தது. திரும்பவும் டியூட்டியில் சேர்ந்தேன். அப்போது தான் அதிர்ச்சி! ''உனக்கு லீவு நீட்டிக்கப்படாத போது எப்படி தாமதமாய் வரலாம்? தண்டனைக்குத் தயாராகு!'' என்றார் உயர் அதிகாரி. திகைத்தேன். நல்லவேளை, தந்தியைக் கிழித்துப் போடாமல் வைத்திருந்தேன். எடுத்துக் காட்டினேன்.

அதிகாரி அதைப் பார்த்து விட்டு, ''ஏன், உன் ஊர் போஸ்ட் மாஸ்டர் உன் சிநேகிதரா? 'எக்ஸ்டன்ஷன் நாட் கிராண்டட்' என்ற தந்தியில் 'நாட்' என்பதை மட்டும் நீக்கி விட்டுத் தந்தியை உன்னிடம் கொடுத்திருக்கிறாரே!'' என்றார்.

ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் போட்டியிட, திருமணம் நடக்க வழிசெய்து, தண்டனையிலிருந்தும் தப்ப வைத்த அந்தத் தவறு செய்த போஸ்ட் மாஸ்டரை மானசீகமாக வாழ்த்தினேன்.

- மதுரை, இளசை விஜயநரசிம்மன்.

## வாழ வைத்த தெய்வம்

எனக்குத் தொண்டையில் சிறு கோளாறு காரணமாகப் பேசும் ஒலி மாறுபடும். என்னுடன் பழகியவர்களுக்குத்தான் நான் பேசுவது புரியும். எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி, சத்திர அட்வான்ஸ் கொடுத்தாகி விட்டது. மாப்பிள்ளை வீட்டாரின் உறவினர் சிலர் வீட்டுக்கு வந்தார்கள். என்னை ஊமை என்பதாகத் தீர்மானித்து அவ்வாறே மாப்பிள்ளைக்கும் அவர் பெற்றோருக்கும் தகவல் கொடுத்து விட்டனர். மாப்பிள்ளை என்ன செய்தார் தெரியுமா?

தமது பெற்றோரிடம் சம்மதம் பெற்று, என் தகப்பனாரிடமும் கேட்டுக் கொண்டு என்னுடன் தனிமையில் பேசினார். நான் ஊமையல்ல என்பதையும், ஆனால் குறைபாடு இருப்பதையும் புரிந்து கொண்டு, ''கவலைப்படாதே'' என்று தைரியம் சொல்லிப் போனார். தமது தாய் தந்தையருக்கு நிலைமையை விளக்கி என்னையே திருமணம் செய்து கொள்ளச் சம்மதம் பெற்றார். என் கணவரையும் அவர் பெற்றோரையும் என்னை வாழ வைத்த தெய்வங்களாகவே நான் கருதுகிறேன்.

- கோவை, பத்மினி வேங்கடராமன்.



## கம்பி நீட்டிய மாப்பிள்ளை!

திருமண தினத்தன்று காலை ஒரே கூக்குரல், சத்தம். விசாரித்ததில் மாப்பிள்ளைப் பையன் இரவு நிச்சயதார்த்தம் முடிந்ததும் கிடைத்த 15,000 ரூபாயுடன் கம்பி நீட்டி விட்டான்! முகூர்த்த நேரம் நெருங்க, ''போலீஸ் ஸ்டேஷன்'', ''பிடி வாரண்டு'' என்று தலைக்குத் தலை யோசனை கூறியபடி இருக்க, திடும் மென்று ஒரு குரல் ஓங்கி ஒலித்தது. மாப்

க நகை பரிசு - 13

# னுபவம்



பிள்ளைப் பையனின் தம்பி! ''அந்தக் கழிசடையைத் தேட வேண்டாம். தாலி கட்ட நான் ரெடி. ஆக வேண்டியதைக் கவனியுங்கள்.'' முகூர்த்தம் தப்பாமல் மணப்பெண் கழுத்தில் தாலி ஏறியது. மணமகள் கண்களில் ஆனந்தக் கண்ணீர். மணமகனை வாழ்த்தாதவர் இல்லை. இன்றும் இருவரும் மனமொத்த தம்பதியாய் வாழ்வதைக் காண, அன்று ஓடிப்போன அண்ணன்காரனுக்கு நன்றி சொல்லவே தோன்றுகிறது!

- மதுரை, ஏ. தனலட்சுமி.

## மைனர் செய்ன் மாப்பிள்ளை

முதல் மாப்பிள்ளை கோபாவேசமாக இரைந்து கொண்டிருந்தார். ''இன்றைய மாப்பிள்ளைக்கு மட்டும் மூணு பவுன் மைனர் சங்கிலி போடறீங்களே, எனக்கு ஏன் போடலை? உறவிலே மாப்பிள்ளை என்றால் இளப்பமா?'' முகூர்த்த நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டம் கண்டு அலமருந்து போனார் மணப்பெண்ணின் தகப்பனார். அப்போதுதான் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது. புது மாப்பிள்ளை தமக்குப் போடப்பட்ட மூணு பவுன் மைனர் செயினைக் கழற்றி, முதல் மாப்பிள்ளை கழுத்தில் அணிவித்தார். ''இத பாருங்க, என் கிட்ட ஏற்கெனவே ஒரு மைனர் செயின் புலி நகத்தோட இருக்கு. இதை நீங்களே போட்டுக்குங்க. நமக்குள்ள யாருகிட்ட இருந்தா என்ன?'' என்றார்.

எல்லோருக்கும் மெய்சிலிர்ப்பு அடங்கிய பின் மாங்கல்யதாரணம்... ஆனந்தம்... ஆனந்தம்...!

- ஸ்ரீரங்கம், விஜயலக்ஷ்மி சந்தானம்.

## மணமகளின் துணிவு

காசி யாத்திரை புறப்படும் சமயம் கசமுசா! வரதக்ஷிணைப் பணத்தில் பாக்கி நிச்சயதார்த்தத்தின் போது தராததால் பையனின் தகப்பனாருக்குக் கோபம். பெண்ணைப் பெற்றவர் பயந்தும் நயந்தும் பொங்கல் சீரோடு தந்து விடுவதாகக் கூறியும் பயனில்லை. ''மீதிப் பணம் கையில் வந்தால் என் பிள்ளை தாலி கட்டுவான்; இல்லை, நாங்கள் மூட்டை கட்டறோம்'' என்றார் மாப்பிள்ளையின் அப்பா.

அந்தச் சமயம் மணமகளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு தைரியம் வந்ததோ. அப்பாவிடம் பாக்கி இருந்த பணத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாள். 'மாப்பிள்ளையிடம் தருவாள்' என்று எண்ணிய அப்பா, 'மற்ற செலவுகளுக்கு என்ன செய்ய' என்று பதறினார்.

மணமகளோ பந்தல்காரர், மேளக்காரர், சமையல்காரர் எல்லாருக்கும் பணம் தந்து செட்டில் பண்ணி விட்டு, ''நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்; எல்லாரும் வீட்டுக்குப் போகலாம்'' என்று பிள்ளை வீட்டாரிடம் கூறினாள்!

அன்று எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்திய அந்தப் பெண் சிவகாமி, என் அத்தை. பிற்காலத்தில் இந்தியாவிலேயே முதல் பெண்மணியாக சார்ட்டர்ட் அகௌண்டண்ட் பரீட்சை எழுதி தேறி, முதல் பெண் ஸி.ஏ.யாகத் திகழ்ந்தாள். கடைசிவரை கல்யாணமே செய்து கொள்ளவில்லை!

- புதுதில்லி, கோகிலம் நாராயணன்.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகை பரிசு பெறுபவர்:

கோகிலம் நாராயணன்,
B-5/126, சப்தர்ஜங் என்கிளேவ்,
புதுதில்லி - 110 029

50 கல்கி
பாலு ஜுவல்லர்ஸ்

# அலாவுதீன் விளக்கு வேண்டாம்!

◆ அமைச்சரையே தொகுதிக்கு அழைத்துச் சென்று, குறைகளைச் சுட்டி காட்டியது சூப்பர். ஆனால் அவர் 'என் கையில் அலாவுதீன் விளக்கு இல்லை' என்று கூறியிருப்பது சரியல்ல. மக்கள் அவரிடம் மாட மாளிகைகளையும் கோபுரங்களையும் கேட்கவில்லை சாதாரண அடிப்படை வசதிகளைத்தான் கேட்கிறார்கள். அதற்கு அரசு அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் ஒழுங்காகச் செயல் பட்டாலே போதும். அலாவுதீன் விளக்கு தேவையில்லை.

மருங்கூர், பி. கிருஷ்ணமூர்த்தி.

◆ அட்டையில், குடிசை வாழ் மக்களோடு மக்களாகக் கயிற்றுக்கட்டிலில் அமர்ந்து, காஷுவலாகக் குறை கேட்கும் அமைச்சர் மதுசூதனன் 'வட சென்னைச் சிறப்பிதழுக்கு'ப் ப்ளஸ் பாயிண்ட்!

முத்துப்பேட்டை, ரிஷி.

## இளமை ஸ்பெஷலிஸ்ட்!

◆ வாரா வாரம் தமது தொடரை இவ்வளவு சஸ்பென்ஸுடன் முடிக்கும் 'இளமை ஸ்பெஷலிஸ்ட்' இயக்குநர் ஸ்ரீதர், ஏன் தமிழ்த் திரை ரசிகர்களுக்கு நல்லதொரு விறுவிறுப்பான மர்மப் படம் வழங்கக் கூடாது என்ற எண்ணம் ஏற்படுகிறது.

சென்னை - 92, கிருஷ்ண ராஜகோபால்.

## உண்மைப் பிரதிநிதி

◆ பக்கத்திற்குப் பக்கம் வட சென்னை தொடர்பான விஷயங்களே நிறைந்திருந்த போதிலும், படிப்பதற்குக் கொஞ்சமும் சலிப்புத் தட்டாமல் இதழைத் தயாரித்திருந்த விதம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. உண்மையில் 'கல்கி' தான் 'மக்களின் பிரதிநிதி'.

கும்பகோணம், எஸ். மங்களம்.

## தமிழகம் தன்னிறைவு பெற....

◆ அரிசி விலையைக் குறைப்பது பற்றிய ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்ட திரு கே. ஆறுமுகசாமி அவர்களது நல்ல எண்ணங்களுக்கு நன்றி. அரசு அதிகாரிகளின் அடாவடித்தனத்திற்கு ஒரு எல்லை நிர்ணயித்துவிட்டு, இது போன்ற அனுபவம் வாய்த்தவர்களின் கருத்துக்களை நடைமுறைப்படுத்தினால் தமிழ்நாடு தன்னிறைவு பெறும்.

சிவகாசி, த. நாகராஜன்.

வட்டமேஜை

## சென்னையிலா இப்படி....?

◆ நாட்டின் தென்கோடியில் ஒரு மூலையிலிருக்கும் எங்களுக்குத்தான் திட்டங்களும், அதன் பயன்களும் வந்து சேர்வதில்லையென மருகிக் கொண்டிருந்தோம். தலைநகரில் ஒரு பகுதியான வடசென்னையே வாடுகிற நிலையைக் கல்கியில் படித்தபோது, மொத்தத் தமிழ் நாடே வாடுகிறது என்று தோன்றிவிட்டது சார்!

திருவட்டார், பைரவி.

## வித்தியாசமான அப்பா!

◆ 'பையனுக்கு வேலை' சிறுகதை படித்து முடித்ததும்... வரதனுக்கு மட்டும் அல்ல, எனக்கும் முகத்தில் ஈயாடவில்லை! இப்படி ஒரு வித்தியாசமான அப்பாவா !

புதுக்கோட்டை, எஸ். நூர் அஹமத்.

## கேலிக்கூத்து!

◆ அரசு ஆதரவுடன் தமிழகமெங்கும் மருத்துவ முகாம்கள் நடக்கப் போகின்ற செய்தியே உங்கள் மனத்தைப் பாதித்தது என்றால், இந்த இலவச முகாம்களை நேரடியாகப் பார்த்த எங்கள் மனது மிகவும் பாதிப்படைந்தது.

முதல் நாள் இரவே வீடியோப் படங்களை அரசு பள்ளிகளில் காட்டி, கிராமத்து ஆண்களைக் கண்முழிக்க வைத்து, காலை எட்டு மணிக்கு ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி, பதினொரு மணிக்கு ஆரம்பித்து, இடைப்பட்ட நேரத்தில் மேலும் இரண்டு படங்களைக் காட்டி, முகத்தில் கனிவே இல்லாத டாக்டர் குழாம் வெறும் மாத்திரைகளைக் கைகளில் திணித்து, ''மருத்துவ முகாம்'' என்ற திட்டத்தையே கேலிக்குரியதாக்கி விட்டனர்!

அரியநாயகிபுரம், ஏ. ஜப்பார் காதர்.

## ஆனந்த இசைவிழா!

◆ தியாகய்யருக்கு ராமபிரான் போல கோபால கிருஷ்ண பாரதியாருக்குத் தில்லை நடராஜப் பெருமான் இஷ்ட தெய்வமாக அமைந்தார். தமிழ் இசை வளர்த்த கோபாலகிருஷ்ண பாரதியார் தமது பக்திக்கு ஏற்ப ஒரு சிவராத்திரி நன்னாளில் சிவபதம் அடைந்தார்.

அன்னாருக்கு வணக்கம் செலுத்தும் முறையில் அவர் வாழ்ந்த ஊராகிய ஆனந்ததாண்டவபுரத்தில் ஒவ்வொரு வருஷமும் இசைவிழா நடக்கிறது. வருகிற மார்ச் 2ம் தேதி (சிவராத்திரி) முதல் 5 ம் தேதி முடிய நான்கு தினங்கள் இசையன்பர்களின் உதவியால் இசைவிழா நடைபெறுவதுடன் இவ்வருஷம் இசைவிழாக் கமிட்டி பாரதியாரின் கீர்த்தனைகள் சிலவற்றை ஸ்வரக் குறிப்புடன் புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. புத்தகம் வேண்டுவோர் இரண்டு ரூபாய் மணியார்டர் செய்து நூல் அஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

என். வெங்கட்ராமன், செயலாளர்,
கோபாலகிருஷ்ண பாரதி
இசைவிழாக் கமிட்டி,
ஆனந்ததாண்டவபுரம் - 609 103.



# நீலகிரியை நாசமாக்கும் சினிமா ஷூட்டிங்!

**சி**னிமா ஷூட்டிங்குக்கென்று ஒரு இரண்டு சக்கர வாகனம் வாடகைக்கு எடுத்தால், நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் கட்டணம்; ஒரு வீட்டை எடுத்துக் கொண்டால் பத்தாயிரக்கணக்கில் செலவு... ஆனால் ஊட்டியில் படப்பிடிப்புக்கு வசூலிக்கப்படும் கட்டணம் எவ்வளவு தெரியுமா...?

| | | |
|---|---|---|
| பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி : (ஒரு நாள்) | ரூ. | 200 |
| சரணாலயப் பகுதி : (ஒரு நாள்) | ரூ. | 200 |
| பொடானிகல் பூங்கா மற்றும் ஸிம்ஸ் பார்க் : (ஒரு நாள்) | ரூ. | 940 |
| தமிழகம் கெஸ்ட் ஹவுஸ் : (ஒரு நாள்) | ரூ. | 1500 |
| மற்ற இடங்கள் : (ஒரு நாள்) | ரூ. | 500 |

ஆக, ஊட்டியில் சினிமா எடுப்பதுதான் இப்போது மிக மிக 'சீப்'. இதனால்தான் ஹிந்தி படத் தயாரிப்பாளர்கள் கூட வடக்கேயிருந்து வரிந்து கட்டிக் கொண்டு இங்கே படமெடுக்க வருகிறார்கள். 'காஷ்மீரிலும், டார்ஜிலிங்கிலும் வன்முறை அதனால்தான் இங்கு வருகிறோம்' என்று சொல்லப்படுவது வெறும் சால்ஜாப்பு. வன்முறை இல்லாத வேறு மலைப் பிரதேசங்கள் வடக்கே இல்லவே இல்லையா என்ன..!

நீலகிரி வட்டாரத்தில் அதி அற்புதமான லொகேஷன்கள் மலிவாகக் கிடைக்கின்றன என்பதால்தான் சினிமாக்காரர்கள் வெறும் டூயட் காட்சிகளை இங்கே எடுப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் முழுப் படத்தையும் இங்கேயே எடுக்கிறார்கள்.

விளைவு : காட்டுப் பகுதி சர்வநாசமாக்கப்படுகிறது! செட்டிங்குகளை நிர்மாணித்தும் ரசாயன பொருட்களைப் பயன்படுத்தி, செயற்கைப் புகை இளப்பியும் சுற்றுச் சூழலைக் குலைக்கிறார்கள். ஷூட்டிங் முடிந்து செல்லும் போது தாங்கள் உபயோகித்த இடத்தைத் துப்புரவாக்காமல் அப்படியே குப்பையும் கூளமுமாக விட்டுச் செல்கிறார்கள். வென்லாக் டவுன்ஸ் போன்ற அழகான இடங்கள் நிரந்தரமான 'சினிமா குப்பை கூளங்களுடன்' காட்சியளிக்கின்றன.

**மு**ன்பெல்லாம் வருடத்தின் சில மாதங்களில் மட்டுமே ஷூட்டிங் நடக்கும். ஆனால் இப்போது எல்லா மாதங்களிலுமே ஷூட்டிங் இருப்பதால் நீலகிரி பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். டாக்ஸி டிரைவர்கள் உள்ளூர்வாசிகளிடமும் 'சினிமா ஸ்டார் ரேட்' வாங்குகிறார்கள். காய்கறிகள், இதர அத்தியாவசியப் பண்டங்கள் வருடம் முழுவதும் விலை குறைவதேயில்லை. சினிமா தொழிலாளர்களுக்கெனப் புதுப்புது ஹோட்டல்கள், லாட்ஜுகள் சகட்டுமேனிக்குக் கட்டப்படுகின்றன. இவை சுற்றுச் சூழலுடன் பொருந்தாமல் துருத்திக் கொண்டு நிற்பதோடு, சரிவர இயங்குவதற்கான அடிப்படைத் தேவைகள் (குடிநீர், வடிகால் இதர வசதிகள் போன்றவை) இல்லாததால் ஊரே குப்பை, கூளமாகி நாசமாகி வருகிறது.

**போ**தாக்குறைக்கு, முதுமலை சரணா லயத்துக்கு மிக அருகிலே சுமார் அறுபது ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பிரபல திரைப்பட நடிகரின் சினிமா ஸ்டுடியோ நிறுவப்பட இருப்பதாகச் செய்தி.

இந்த முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதோடு, சினிமா ஷூட்டிங்குகளினால் ஏற்பட்டு வரும் சர்வநாசத்திலிருந்து நீலகிரியைக் காப்பாற்ற வேண்டும்.

நன்றி : **Save Nilgiris Campaign.**

# WEB ASSOCIATION, KUMBAKONAM

## வேண்டுகோள்

க்ஷேத்ர மஹாத்மியமும், தீர்த்த மஹிமையும் மிக்க கும்பகோணத்தில் மஹாமகத்தை முன்னிட்டு ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் ஆக்ஞையின் படி, அவர்கள் முன்னிலையில் லோக க்ஷேமத்தின் பொருட்டு மஹா ருத்ர ஹோமமும், சண்டி ஹோமமும் ஸ்ரீமந் நாராயண மஹாயக்ஞமும் (சுதர்சன ஹோமம்) 12.2.92 முதல் 18.2.92 முடிய நடைபெறவுள்ளது. மேற்படி நாட்களில் அக்னி ஹோத்ரிகளை வைத்துக் கொண்டு காம்ய இஷ்டிகள் நடைபெறும். ரோஹிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், மகம் ஆகிய நக்ஷத்திரத்தில் ஜனித்தவர்கள் இஷ்டியில் கலந்து கொள்ளலாம். அன்னதானமும் வழங்கப் பட உள்ளது. ஆஸ்தீக பெருமக்கள், தங்களாலான பொருளுதவி செய்து மேற்படி அறப்பணிகளில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**எஸ். நாராயணசுவாமி, பி.ஏ.பி.எல்**
தலைவர்

*நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம் :*

**WEB ASSOCIATION,**
**23, BANADURAI SANNATHI STREET,**
**KUMBAKONAM.**


# BECOME SPEEDWRITING
## SHORTHAND
# PERSONAL SECRETARY

SPEEDWRITING SHORTHAND THROUGH CORRESPONDENCE REGULAR
FORGET old fashioned artificial symbols used in Shorthand. NOW scientifically developed SPEEDWRITING using only ENGLISH ALPHABETS.

See for yourself. You will be actually writing shorthand after only 15 minutes study.

See Examples :

1. Pay the bill. 2. Let me have a Cheque for the bill.
3. May I see the book? 4. The new book is big.
5. I can judge the value of the book if you fetch it.
6. The book is new and I can get it for you.



Ladies! Learn Speedwriting Shorthand in a New way!

*Rush for details. Send Re. 1/Stamp Limited Seats only.*
Co.ordinator **INDIANA SPEEDWRITING**
Near Maruthi Theatre Coimbatore - 641 002 T.N.

# திலீப் குமார் அளித்த கௌரவம்



திலிப் குமார் எனக்குப் பாராட்டு விழா நடத்தி, பொன்னாடை போர்த்தி விருந்தால் கூட நான் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருக்க மாட்டேன். அதை விடப் பெரிய கௌரவத்தை அளித்தார். ''ராஸ்தான்'' என்ற பத்திரிகையில் ''தில் ஏக் மந்திர்'' படத்தை வெகுவாகப் பாராட்டி விமர்சனம் எழுதினார் திலிப் குமார்.

பம்பாய் பட உலகமே படத்தைப் பாராட்டியது. 'ஓகோ' என்று எனக்குப் பெரும் புகழும் கிடைத்தது. கல்கத்தாவின் மரியாதைக்குரிய ''கிரிடிக்ஸ் அசோசியேஷன்'' இந்தியாவின் தலைசிறந்த பத்து டைரக்டர்கள் வரிசையில் என்னையும் ஒருவனாகத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியது. அகில இந்திய அளவில் எனக்குப் பாராட்டுக்கள் கிடைத்தது ''தில் ஏக் மந்திர்'' மூலமாகத்தான்.

இந்த இந்தி படத்தைத் தமிழ்ப் படமாகிய ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' வெளியாகி ஓராண்டுக்குப் பிறகுதான் எடுத்தேன். இடையில் நடந்தது என்ன?

ஒருநாள் கண்ணதாசன் தம் நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு என்னைக் காண வந்தார். ''இவர் பெயர் செழியன். நானும் இவருமாகச் சேர்ந்து ஒரு சினிமா எடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம்'' என்றார்.

கண்ணதாசன் தமது வழக்கப்படி என்னை ''ஸ்ரீ'' என்று அழைத்துத் தொடர்ந்து பேசினார் : ''நாங்க எடுக்கப் போகும் படத்தை நீங்கதான் டைரக்ட் செய்யணும்.''

இந்தக் கோரிக்கை என்னை ஒரு இக்கட்டில் ஆழ்த்தியது. பொதுவாக நான் அடுத்தவர்களுக்காகப் படம் டைரக்ட் செய்வது இல்லை. தயக்கத்துக்குக் காரணம் உண்டு. தயாரிப்பாளர் பணம் போட்டிருப்பதால் எல்லாம் நல்லபடியாக அமைய வேண்டுமே என்று கவலைப்பட்டு அவ்வப்போது என் பணியில் குறுக்கிடுவார். சிருஷ்டிகர்த்தா என்ற முறையில் நான் அந்தத் தலையிடுதலை விரும்ப மாட்டேன். ஆகமொத்தம், மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு அதிகம். எனவேதான் இப்போதும் கண்ணதாசனுக்கு உடனடியாகப் பதில் கூறாமல் தயங்கி, ''யோசித்துச் சொல்கிறேன்'' என்றேன். யாரிடம் மனவேறுபாடு கொள்ள நேர்ந்தாலும் கண்ணதாசனுடன் அப்படி நிகழ்வதை நான் விரும்பவில்லை.

என் தயக்கத்தைக் கவியரசு உடனே கணித்து விட்டார். ''ஸ்ரீ! ஏன் ஒப்புக் கொள்ள மாட்டேங்கறீங்க? என்ன தயக்கம் உங்களுக்கு? மனசு விட்டுப் பேச வேண்டியதுதானே!'' என்றார்.

என் மனப்போக்கையும் தர்மசங்கட நிலைமையையும் நாகரிகமான முறையில் விளக்கினேன்.

''புரியுது! புரியுது!'' என்று தமது கவர்ச்சிகரமான புன்னகையுடன் தொடர்ந்து பேசினார் கண்ணதாசன் : ''ஸ்ரீ! இப்பவே வாக்குக் கொடுக்கிறேன்; உங்கள் சொந்தப் படமென்றால் உங்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அத்தனை உரிமைகளுடன் நீங்கள் சுதந்திரமாகச் செயல்படலாம். சரிதானே? கண்ணதாசன் வாக்குத் தவற மாட்டான்'' என்றார்.

நான் உடனடியாக அவர்களுக்கு ஒரு படம் இயக்கித் தர ஒப்புக் கொண்டேன். கதை என்ன? மூவரும் சிந்தித்தோம். நான் ஏற்கெனவே படித்து மனத்தில் பதிந்திருந்த ''சுமைதாங்கி'' என்ற நாவல் இப்போது நினைவுக்கு வர, அந்தக் கதையைக் கூறி

**டைரக்டர் ஸ்ரீதர்**

னேன். ரா. கி. ரங்கராஜன் எழுதிய அந்த நாவலின் கதை கண்ணதாசனுக்கும் செழிய னுக்கும் பிடித்திருந்தது. என்றாலும் மறுபடி ஒருமுறை நூலைப் படித்துப் பார்த் தேன். படமாய் எடுக்கும் போது சில மாற் றங்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்று தோன்றியது.

இதில் ஒரு வேடிக்கை என்னவென் றால், ஒரு சிருஷ்டிகர்த்தா என்ற முறையில் என்னுடைய ' பணியில் இன்னொருவர் குறுக்கிடுவதை நான் அவ்வளவாக விரும்ப வில்லை. ஆனால் ரங்கராஜனும் சிருஷ்டி கர்த்தாதானே. அவர் நாவலை என் இஷ்டப் படி மாற்றி அமைக்க எனக்கேது உரிமை? அதை அவர் எப்படி ஏற்றுக் கொள்வார்?

தயக்கத்துடன் ரங்கராஜனை அணுகி னேன். ''தொடர்கதை மீடியம் வேறு; திரைப்பட மீடியம் என்பது வேறு. அத னால்...'' என்று நான் ஆரம்பிப்பதற்குள்,

''என்ன மாற்றங்கள் செய்ய வேண் டுமோ செய்து கொள்ளுங்கள்'' என்று ரா. கி. ரங்கராஜன் என் வாதத்தில் உள்ள நியா யத்தைப் புரிந்து கொண்டவராகப் பெருந் தன்மையுடன் கூறி விட்டார்.

''சுமைதாங்கி'' என்ற பெயரிலேயே ஜெமினி கணேசன், தேவிகா நடித்து அந்தப் படம் வெளிவந்தது. பிரமாத வெற்றி என்று கூற முடியாவிட்டாலும் முதலுக்கு மோச மில்லை.

**ஹி**ந்து பத்திரிகையில் நான் படித்த ஒரு செய்திதான் என்னுடைய அடுத்த படத் துக்கு ஆதாரமாக அமைந்தது. அந்தச் செய்தி இதுதான் : ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு பெண் தனது ஏழாவது வயதில் தன்னுள்ளே ஒரு மாற்றத்தை உணர்ந்தாள். தனது முற்பிறவி பற்றிய நினைவுகள் அவ ளுக்கு ஏற்பட்டன! தனது பெற்றோரை அழைத்துக் கொண்டு அவர்கள் வாழ்க் கைக்குச் சம்பந்தமேயில்லாத ஒரு புதிய ஊருக்குச் சென்று, ஒரு வீட்டைச் சுட்டிக் காட்டி, ''இதுதான் நான் போன ஜென்மத் தில் வாழ்ந்த வீடு'' என்றாள். அந்த வீட்டில் ஒருவரைச் சுட்டிக்காட்டி ''இவர்தான் போன ஜென்மத்தில் என் கணவர்'' என் றாள். இன்னொருவரை, ''முற்பிறவியில் என் மாமனார்'' என்று அறிமுகப்படுத்தி னாள்!

இந்தச் செய்தி ரொம்ப வித்தியாசமான ஒன்றாக இருந்ததால், என் மனசை ரொம்பப் பாதித்தது. உள்ளத்துக்குள் திரும்பத் திரும்ப அசை போடவும் ஒரு கதை உருவாகியது. அதுதான், ''நெஞ்சம் மறப்பதில்லை.'' பூர்வ ஜென்ம ஞாப கத்தை வைத்து ஆங்கிலத்தில் ஏற்கெனவே ''கேஸ் லைட்'' என்ற ஒரு படம் வெளி யாகி, மிகப் பிரபலமாயிற்று. அந்தப் படமும், ஹிந்து நாளிதழ் செய்தியும்தான் ''நெஞ்சம் மறப்பதில்லை''க்குத் தூண்டுத லாக அமைந்தன.

**நி**ம்பியார் ஒரு ஜமீன்தார். அவர் மகன் ஓர் ஏழைப் பெண்ணைக் காதலிக்க, ஜமீன் தார் கோபமுற்று, அந்தப் பெண்ணைச் சுட்டுக் கொன்று விடுகிறார்! காதலி கொலை செய்யப்பட்டதால் கிட்டத்தட்ட புத்தி பேதலித்துப் போன கதாநாயகனும் தற்கொலை செய்து கொண்டு விடுகிறான். காதலனும் காதலியும் மறுபிறப்பில் மீண் டும் சந்திக்கிறார்கள். எப்படி?

காதலி அந்த ஊரிலேயே பிறவி எடுக்க, வேறு ஊரில் பிறந்த காதலன் தன் நண்ப னுடன் அந்த ஊருக்கு வர, மீண்டும் அவர் களிடையே காதல் மலர்கிறது. அந்த ஊரில் ஒரு பாழடைந்த மாளிகை இருக்கிறது. யாருமே அந்தப் பக்கம் போவது கிடை யாது. ஒருநாள் இந்தக் காதலனும் காதலி யும் அந்த மாளிகைப் பக்கம் போக, அங்கே பழுத்த கிழவனான ஒருவனைச் சந்திக்கி றார்கள். அவர்தான் ஜமீன்தார். நூறு வய துக்கு மேலாகியும் உயிருடன் இருக்கிறார். மாளிகையை அடைந்த பிறகு காதலர்களுக் குப் பூர்வ ஜன்ம நினைவுகள் தோன்ற ஜமீன் தாருக்கும் புரிந்து விடுகிறது. ''இந்தப் பிறவியிலும் அவர்கள் காதல் நிறைவேற விடக் கூடாது'' என்று கருவிக் கொள் கிறார்.... கதை வளர்கிறது.

**நி**ம்பியாருக்கு ரொம்ப வித்தியாசமான கேரக்டர் அமைந்த இந்தப் படத்தில் பூர்வ ஜன்ம நினைவுகள் மையமாக அமைந் திருப்பதால், ''ஹாண்டிங் டியூனில்'' ஒரு பாடல் போட வேண்டும் என்று விரும்பி னேன். படத்துக்கு இசை அமைப்பாளராக ஒப்பந்தம் ஆகியிருந்த விசுவநாதன் - ராம மூர்த்தியிடம் என் விருப்பத்தைச் சொன் னேன்.

''அதற்கென்ன'' என்று அவர்களும் நிறைய டியூன்களைப் போட்டுக் காட்டி னார்கள். ஆனால் எனக்குத் திருப்தி ஏற்பட வில்லை. பயமூட்டும் 'எஃபெக்ட்' இருந் தால் இனிமை இல்லை. இனிமை இருந் தால் பயமூட்டும் 'எஃபெக்ட்' இல்லை. இதற்கிடையில் மற்ற பாடல்கள் ரிகார்ட் ஆகி, படப்பிடிப்பும் கிட்டத்தட்ட முடியும் கட்டத்தை நெருங்கி விட்டது! இன்னும் எத்தனை நாள் காத்திருப்பது? என்ன நடந்தது?

அந்த டியூனுக்காக நான் ஆறு மாதம் காத்திருந்தேன்! அது பற்றித் தெரிந்து கொள்ள நீங்கள் ஒரு வாரம் காத்திருக்கக் கூடாதா?



''அவன ஏண்டா அடிச்சே?''

'' 'போடா ஆஸ்த்ரேலியன் அம்ப யர்னு' என்ன மட்டமா திட்டினான் சார்!''

- புளியறை கணேசன்



சென்னை
சுபம் A/C 4 காட்சிகள்
அகஸ்தியா 70MM
ஈகா A/C 3 காட்சிகள்
அபிராமி A/C
உதயம் A/C
பகல் காட்சிகள்
சரண்யா சினி கம்பைன்ஸ்
K·பாக்யராஜின்
சுந்தர காண்டம்
கதை திரைக்கதை
வசனம் டைரக்‌ஷன்
K·பாக்யராஜ்
தயாரிப்பு
பூர்ணிமா பாக்யராஜ்
Elegant

## நீங்கள் கேட்டவை - தராசு

# விலைவாசி உயர்வால் 'ஜெ'யின் செல்வாக்குக் குறைகிறதா?

● ரா. வெங்கட், சீர்காழி.

**? தமிழ்ப் படங்களின் மோசமான தலைப்புக்கு சென்ஸார் தடைவிதிக்கலாமே?**

! இதெல்லாம் சென்ஸாரால் ஆகிற காரியம் அல்ல. அவர்கள் தட்டியில் புகுந்தால் பட அதிபர்கள் கோலத்தில் நுழைவார்கள். நல்ல அபிப்பிராயங்களை உருவாக்குவது தான் வழி. நமது முதல்வர் முன்வந்து, ''ஸெக்ஸ¬ம் வயலென்ஸ¬ம் வேண்டாம்; மக்களை உயர்த்தும் நல்ல படங்களை எடுங்கள்'' என்று வேண்டுகோள் விடட்டும். திருப்புமுனையாக நிச்சயம் அமையும். நமது முதல்வர் தமது சக்தியைத் தாமே சரிவர உணரவில்லை. தேவையற்ற விதங்களில் வீணடித்துக் கொண்டிருக்கிறார்.

● குரு கிருஷ்ணா, திருச்சி.

**? தொடரும் அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வால் முதல்வரின் செல்வாக்கு குறைந்து விட்டதாகவே கருதுகிறேன்... சரி தானே?**

! சுற்றுலா பொருட்காட்சியில் திரும்பின பக்கமெல்லாம் 'ஜெ' கட்அவுட் வைத்திருப்பதைப் பார்த்தால் அந்தப் பயம் அவருக்கே ஏற்பட்டு வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது!

● ம. செந்தில்நாதன், மதுரை - 2.

**? ''எங்காவது புதையல் கிடைத்தால் தான் வரி போடாமல் ஆட்சி நடத்த முடியும்'' என்று கூறுகிறாரே, நெடுஞ்செழியன்?**

! சிக்கன நடவடிக்கை என்ற புதையல் கண்ணெதிரே இருந்தும், காண மறுப்பவர்களை நாம் என்ன செய்ய முடியும்? ''வீண் விளம்பரங்கள் தவிர்க்கலாமே'' என்று சட்டமன்றத்தில் பேசப்பட்டால், ''அவசியமான விழாக்களுக்கு அவசியமான அளவில்தான் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன; ஆடம்பரமாக அல்ல'' என்று கூறும் நிதி அமைச்சருக்கு வரி போடுவது தவிர வேறு உபாயம் என்ன தோன்றக்கூடும்? இதில் இன்னொரு வேதனை கலந்த வேடிக்கை என்ன வெனில், 'ஜெ'க்கு டாக்டர் பட்டம் தொடர்பாகத் தரப்பட்ட விளம்பரங்களுக்குப் பல்வேறு கல்லூரிகளிலிருந்து தற்போது கல்லூரிக் கல்வி இயக்குனர் பணம் வசூலிப்பதுதான்!





☛ மயிலாடுதுறை. குயிலைப் ஆக...

☛ இந்தியா, அமெரிக்கா ஆக...

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

**? இளைஞர்களின் எதிர்காலம் ஒளிமயமாக அமைந்திட தங்கள் அறிவுரை?**



☛ நல்ல அறிவுரை



☛ புதையல் தேடுகிறார்!



☛ செல்வாக்கு சரிகிறதா?

! அண்மையில் மின்சார ரயிலில் பயணம் செய்த போது குரோம்பேட்டையில் பத்து இளைஞர்கள் ஏறுகிறார்கள். ''மனிதர்களே! மனிதர்களே!'' என்று தொடங்கி, ஓர் எழுச்சிப் பாடல் பாடுகிறார்கள். அதன் முடிவில், ''எல்லோரையும் மனிதர்களாக மதியுங்கள்; உங்கள் பேட்டையில் உள்ள ஆதரவற்றவர்களுக்குக் கல்விக் கண் கொடுங்கள்...'' என்று இரண்டு நிமிஷம் பேசி விட்டு அடுத்த ஸ்டேஷனில் இறங்கிப் போய் விடுகிறார்கள். இந்தப் பேச்சு செயலாக வேண்டும்.

● மல்லிகை மன்னன், மதுரை.

**? ''எனக்கு மட்டும் அவகாசம் தந்தால் மூன்று ஆண்டுகளில் அமெரிக்கா மாதிரி இந்தியாவை மாற்றிக் காட்டுவேன்'' என்று சவால் விட்டிருக்கிறாரே மன்மோகன் சிங்?**

! இந்தியா, அமெரிக்கா போல் ஆகு

மெனில் மூன்று ஆண்டுகள் அல்ல, முப்பது ஆண்டுகள் கூடக் காத்திருக்கலாம். அமெரிக்கா அளவுக்கு உயர்வது அவ்வளவு சுலபமல்ல, எனினும் முன்னேற்றம் இருக்கவே செய்யும். இப்போது நாம் காணும் சில விபரீதங்கள், ஒரு லிஸ்டத்திலிருந்து மற்றொன்றுக்கு மாறும் போது ஏற்படக் கூடியனவே. ருஷ்யாவும் இப்போது அனுபவிக்கிறது துன்பங்களை. நிதி அமைச்சரின் தன்னம்பிக்கை போற்றுதற்குரியது. ஆனால், 'அவர் கனவு நனவாகும் வரை மற்றவர்களுக்குப் பொறுமை இருக்குமா? காங்கிரஸ் அரசு நீடிக்குமா?' என்பதெல்லாம் கேள்விக்குறிகளே!


● கே. வி. அரங்கன், சென்னை.

? பீகாரில் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியின் ராஜினாமா கடிதம் பற்றி...?

! வல்லூரின் ராஜ்ய பாரத்தைப் புட்டுப் புட்டு வைக்கப்புட்டார்!



☛ 5 காட்சுகள்



☛ 400 விக்கெட்



☛ தேச விரோதி

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? மலர்ந்துள்ள இந்திய - இஸ்ரேல் உறவு குறித்து?

! தூதரகம் திறப்பதால் ஒரு கருத்துப் பரிவர்த்தனைக்கு இடம் ஏற்படுகிறது என்பது வரவேற்கத்தக்கதே. இதனால் இஸ்ரேலின் கொள்கைகள் எல்லாம் நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்றோ அராபிய முஸ்லிம்களை விரோதித்துக் கொண்டதாகவோ ஆகாது. மெய்யான பஞ்சசீலம், அணிசேராக் கொள்கை அமலாகிறது.

● என். ஆர். சுப்பிரமணியன், பூனாம்பாளையம்.

? மயிலாடுதுறை தொகுதி எப்போது குவெய்த் ஆவது? மணிசங்கர அய்யர் சூளுரைத்தாரே?

! மாற்றிக் காட்டாததற்குக் காரணம், 'அப்புறம் சதாம் ஹுசேன் மாதிரி யாராவும் இங்கேயும் கிளம்பி விடப் போகிறார்களே' என்ற கருணையாக இருக்கும்!

● வீ. சோழன், செம்போடை.

? தியாகராஜர் ஆராதனை விழாவின் இசை நிகழ்ச்சிகளை வானொலி ஒலிபரப்பில் கேட்டீர்களா?

! ஈரோடு அன்பர் சௌந்தர்ராஜன் ஆராதனை விழாவுக்கு ஆர்வத்துடன் நேரில் சென்று, (பாதுகாப்பு கருதி) கடும் வெய்யிலில் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டு, அவதியுற்றதை வர்ணிப்பதைப் பார்த்தால், டி.வி., ரேடியோ மீடியம்களின் துணையை நாடியவர்களே புத்திசாலிகள் போல!

● எல். மாறன், மேல்பட்டி.

? விகடன் வாசகர் திருவிழாவுக்குச் சென்று வந்தீரா?

! காமராஜர் மண்டபம் கலகலத்து, நிரம்பி, புல்வெளியெல்லாம் வாசகர்கள் திரண்டு நின்று ரசித்ததை வியந்து ரசித்து வந்தேன்.

● ஆர். அப்துல்சலாம், திருச்சி.

? "குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு பந்த்- ஸ்ட்ரைக் வேண்டாம்" என்ற ஜனாதிபதியின் பேச்சு குறித்து...?

! நாட்டின் இன்றைய மோசமான பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு கூறப்பட்ட நல்ல அறிவுரை. ஆனால் தொழிற்சங்கத் தலைவர்கள் சரியான நோக்கில் எடுத்துக் கொள்ளவில்லையே!

● என். ரமேஷ், திருப்பாதிரிப்புலியூர்.

? அசாருதீன் சதம் அடித்து கேப்டன் பதவியைத் தக்கவைத்துக் கொண்டு விட்டாரே?

! சதம் அடிப்பதுதான் கேப்டன் பதவிக்கு அவசியம் எனில் டெண்டுல்கர்தானே கேப்டன் ஆக வேண்டும்! வேறு பல இயல்புகளும் கேப்டனுக்குத் தேவை. கபிலின் 400 விக்கெட் சாதனையும் ஸ்ரீகாந்தின் 5 காட்ச் சாதனையும் கவனத்தைக் கவர்கின்றன. ஆனால் ஒரு குழுவாக இவர்கள் சாதனை புரிய முடியாமல் இருப்பதுதான் புதிர்!

● சித வைரவன், சென்னை ❑

? கூரை ஏறி வீரப்பனைப் பிடிக்க முடியாதவர்கள் விண்ணிலேறி பிரபாகரனைப் பிடிக்கப் போகிறார்களா?

! பிரபாகரனைச் சரணடையுமாறு நீதிமன்றம் அறிவித்தது எனில் "பிடித்து விடுவோம்" என்று மார்தட்டுவது அல்ல அதன் நோக்கம்; தேசத்தின் விரோதி என்று அதிகாரபூர்வமாக இப்போதுதான் பகிரங்கப் படுத்தியிருக்கிறோம் என்பதே அர்த்தம்.

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
சித. வைரவன்,
10, ஜெகதாம்பாள் காலனி,
சென்னை - 600 014.



ஸ்ரீ கணேசாய நம:

சத்யம் சிவம் சுந்தரம்

## சேங்காலிபுரம் ஸ்ரீ நிஸ்துலாம்பிகா சமேத ஸ்ரீ சோளேஸ்வர சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக திருப்பணிக் கமிட்டி

## பக்தகோடிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருமூலர் வடமொழியிலுள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்களை தமிழில் நமக்கு அருளியுள்ளார். அவருடைய திருமந்திரத்தில் சிவனை வழிபடும் முழுமையான பக்தி முறைகளைப் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன.

சேங்காலிபுரத்தின் சிவன் கோயிலின் சிறப்பு மிகு தெய்வம் ஸ்ரீ சோளேஸ்வரர் ஆவார். அவர் சுயம்பு வடிவமானவர். அவர் சுயம்புலிங்கம் அல்லது சோளேசலிங்கம் என்று அழைக்கப்படுகிறார். அவருடைய மற்ற திருநாமங்கள் பிரும்மலிங்கம், வேதலிங்கம், ஜோதிலிங்கம் என்பனவாகும். இத்திருக்கோயிலை சோழவம்சத்தைச் சேர்ந்த அரசர் சசிசேகரர் என்பார் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் புதுப்பித்ததாகக் கூறப்படுகிறது

கோயிலுக்கு முன் உள்ள புஷ்கரணியானது அதற்கென தனி வரலாற்று சிறப்பு பெற்று விளங்குகிறது. இப்புனித திருக்குள நீரோடு புனித கங்கை நீரும் கலப்பதாகவும் ஐதீகம். ஆகவே இத்திருக்குளத்தில் எவரொருவர் புனித நீராடுகிறாரோ அவர் இம்மையில் அளவில்லாத ஆரோக்கியத்தையும், மறுமையில் எல்லையில்லாத பேரானந்த வாழ்வையும் அடைவர் என்பதாக இத்தல வரலாறு கூறுகிறது.

சேங்காலிபுரத்திலுள்ள மேற்படி கோயிலின் அன்னை ஸ்ரீ நிஸ்துலாம்பிகை எண்ணற்ற பக்தகோடிகளால் அவள் அருள் வேண்டி வழிபடப்படுகின்றாள். ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்திலும் "ஸ்ரீ நிஸ்துலாயை நம :" என்று அன்னையின் நாமம் போற்றப்படுகிறது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் திவ்ய அனுக்கிரஹத்தோடு இச்சிவாலயத்திலுள்ள இடிபாடுகளை சரி செய்து புதுப்பித்து 1992 ஆம் ஆண்டில் இக் கோயிலின் மஹா கும்பாபிஷேகத்தை சுமார் ரூ. 3 (மூன்று) இலட்சம் செலவில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பக்த கோடிகள் அனைவரையும் இப்புனிதப் பணியில் தங்களையும் இணைத்துக் கொண்டு தாராளமாக பொருளுதவி செய்து, இக்கும்பாபிஷேகத்தை மிகச்சீரும் சிறப்புமாக நடத்திக் கொடுத்து ஸ்ரீ நிஸ்துலாம்பிகா சமேத ஸ்ரீ சோளேஸ்வரர் அருளைப் பெற வேண்டுமாய் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

சேங்காலிபுரம் ஸ்ரீ நிஸ்துலாம்பிகா சமேத ஸ்ரீ சோளேஸ்வர
சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக திருப்பணிக் கமிட்டி.
சேங்காலிபுரம், தஞ்சாவூர் மாவட்டம் - 612 604.



கல்கி பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தவரும் தற்பொழுது அமரபாரதியின் ஆசிரியருமான ஸ்ரீ ரா. வீழிநாதன் அவர்கள் பேத்தி சௌபாக்கியவதி காயத்ரிக்கும் ஸ்ரீ P. R. சுப்பையா அவர்களின் குமாரன் சிரஞ்ஜீவி ரவிக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மாலையில் நடந்த வரவேற்பிற்கு ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்!

# பெண் உரிமை பலம் பெற்றது!



● வாசுகி

முதல் முறையாகப் பெண்களுக்கான தேசிய கமிஷன் ஒன்றினை நிறுவியுள்ளது மத்திய அரசு. இது ஒரு விசாரணைக் கமிஷன் அல்ல என்பதும் அதிகாரங்களுடன் கூடிய கமிஷன் என்பதும் கவனத்துக்குரியது.

விசாரணைக் கமிஷன் எனில் அது விசாரணை நடத்தி பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பிப்பதோடு சரி. அரசு அதை ஏற்று அமுல்படுத்தலாம், அல்லது கிடப்பிலும் போடலாம்.

இப்போது ஜெயந்தி பட்நாயக் தலைமையில் அமைந்துள்ள கமிஷன் அத்தகையது அல்ல. பெண்களின் மேம்பாட்டுக்கு இந்தக் கமிஷன் பல்வேறு விதங்களில் உதவுவதை யாராலும் தடுக்க முடியாது. பரவலான அதிகாரங்கள் இருப்பதுடன் ஒரு ஸிவில் கோர்ட்டாகவும் இயங்க முடியும். சாட்சிகளை அழைக்கலாம்; தான் அலசுகிற வழக்கு தொடர்பான ஆவணங்கள் எதுவானாலும் கோரிப் பெறலாம். இதெல்லாவற்றையும் விட முக்கியம், பெண்கள் தொடர்பாக இனி அரசு எந்தச் சட்டம் இயற்றுவதானாலும் இந்தக் கமிஷனைக் கண்டிப்பாகக் கலந்தாலோசித்தே ஆக வேண்டும். ஜெயந்தி தவிர வேறு ஐந்து பேர் இதன் உறுப்பினர்கள். இவர்கள் பெண்களின் பாதுகாப்புக்காக ஏற்கெனவே உள்ள சட்டங்கள் ஒழுங்காக அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதுடன் பெண்கள் நலனுக்குரிய புதிய சட்டங்கள் இயற்றவும் நாடாளுமன்றத்துக்கு ஆலோசனைகள் வழங்கலாம்.

கமிஷன் பற்றிய அறிவிப்புச் செய்தி வருவதற்குச் சில தினங்களுக்கு முன் இந்தியா முழுவதிலும் உள்ள பெண்கள் அமைப்புக்கள், உடனடியாக தேசிய பெண்கள் கமிஷன் அமைக்கும்படி கோரிக்கை தினம் அனுஷ்டித்தன. ''அதற்கு என்ன அவசியம் நேர்ந்தது?'' அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் தமிழகக் குழுவைச் சேர்ந்த வாசுகியிடம் கேட்டோம்.

''ஐ. நா.வில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு நாடும் தேசிய பெண்கள் கமிஷன் அமைக்க வேண்டும் என்பது ஐ. நா. சபையின் பரிந்துரை. இதனை நடைமுறைப்படுத்தச் சொல்லி நீண்ட காலமாகவே எல்லா மகளிர் அமைப்புக்களும் இங்கு வலியுறுத்தி வந்தன. தேசிய முன்னணி அரசு, பல பெண்கள் அமைப்புப் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து இந்தக் கமிஷனுக்கான மசோதாவைத் தயாரித்தது. கட்சி பேதமின்றி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்த ஆதரவைப் பெற்ற இம்மசோதா சட்டமாகிப் பதினைந்து மாதங்களாகியும் கமிஷன் அமைக்கப்படவில்லை! இப்போதைய காங்கிரஸ் தலைவர்களும் எம்.பி.க்களும் வெவ்வேறு விதமாகப் பேசி வந்தார்கள். அது மட்டுமின்றி மாநில அளவிலும் இத்தகைய சுயஅதிகாரம் படைத்த கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரித்தான் நாங்கள் கோரிக்கை தினம் அனுசரித்தோம்....''

''பெண்கள் நலனுக்குரிய சில சட்டங்களை அல்லது சட்டத் திருத்தங்களை கமிஷன் நாடாளுமன்றத்துக்குச் சிபாரிசு செய்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதை நாடாளுமன்றம் அலட்சியம் செய்தால்?''

''நாடாளுமன்றம் கமிஷனின் சிபாரிசை ஏற்காமல் போகலாம். ஆனால் அலட்சியப்படுத்த முடியாது. கமிஷனின் சிபாரிசுகளை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்தப் போவதில்லையெனில் அதற்கான காரணத்தைக் கட்டாயம் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறியாக வேண்டும்.''

''இந்தக் கமிஷன் அமைத்ததன் மூலம் சராசரி இந்தியப் பெண்களின் நிலை உயரும் என்று நினைக்கிறீர்களா? இந்தியாவில் பெண்களின் பிரச்னைகள் பல்வேறுபட்டவையாயிற்றே....?''

''இந்தக் கமிஷனால் பெண்களின் பிரச்னைகள் எல்லாமே உடனடியாகத் தீர்ந்து ஒளிமயமான எதிர்காலம் உருவாகப் போகிறது என்று நாங்கள் நினைக்கவில்லை. பார்க்கப் போனால் இந்தக் கமிஷனைப்



## தோற்றுப்போன டாடா!

பாரத் ரத்னா ஜே.ஆர்.டி. டாடா, இளைஞராக இருந்த போது இந்தியா - இங்கிலாந்து தனி நபர் விமானப் பயணப் போட்டியில் கலந்து கொண்டார். ஆகாகான் பெரிய பரிசை அறிவித்திருந்தார். கராச்சியிலிருந்து விமானத்தைக் கிளப்பி, செலுத்திக் கொண்டு போன ஜே.ஆர்.டி., வழியில் கெய்ரோ வில் இறங்கினார். அங்கே, இதே போட்டியில் பங்கேற்ற இன்னொருவர் லண்டனிலிருந்து புறப்பட்டு வந்து இறங்கி யிருந்தார். அவர் விமானத்தில் ''ஸ்பார்க் பிளக்குகள்'' பழு தாகியிருந்தன. ஜே.ஆர்.டி. சற்றும் தயங்காமல் தம்வசம் இருந்த அதிகப்படியான புதிய ''ஸ்பார்க் பிளக்'' செட்டை அப்படியே அந்த நபருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார்!

இப்படி கருணை காட்டியதன் விளைவு, மிகக் குறுகிய கால வித்தியாசத்தில் அந்த ஆசாமி போட்டியில் வென்று விட, டாடா தோற்றுப் போனார்!

''ஏன் இப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''அவர் சங்கடத்தில் ஆழ்ந்திருந்த போது என் சுயநலன் பற்றி என்னால் சிந்திக்க முடியவில்லை'' என்றார் டாடா. அறுபத் திரண்டு ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த நிகழ்ச்சிக்காக டாடா என்றுமே வருந்தியதில்லை. மாறாக, டாடாவின் வாழ்க்கைக் குறிக்கோளாகவே இந்த மனப்போக்கு அமைந்திருந்தது.

நன்றி : - ஹிந்துஸ்தான் டைம்ஸ்

---

பற்றிப் பெண்களிடமே பேசும் போது கூட அவர்களுள் பலர் 'கமிஷன் எங்களுக்கு வேலை வாய்ப்பை உத்தரவாதமாக்குமா? விலைவாசியைக் குறைக்குமா...?' என்று தான் கேட்கிறார்கள். சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். பொரு ளாதார, கல்வித் துறைகளில் துணிச்சலான சீர்திருத்தங்கள் கொண்டு வந்தால்தான் வேலை வாய்ப்பு, விலைவாசி போன்ற பிரச்னைகளைத் தீர்க்கலாம். ஆனால், பெண்கள் கமிஷன் அமைத்ததன் மூலம் நாடெங்கிலுமுள்ள பெண்கள் அமைப்புக் களுக்கும் சங்கங்களுக்கும் ஒரு பெரிய பலம் கிடைத்திருக்கிறது. இந்த அமைப்புக் களின் போராட்டங்களும், உரிமைக் குரல் களும் பெண்களுக்கே உரிய பிரச்னைகளும் கமிஷன் வாயிலாக அரசாங்கத்தை எட்ட முடியும். ஓர் உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெறும் தாய்மார்களுக்குப் பேறுகால விடுப்பு கிடையாது என்ற சட்டம் அமு லாகியுள்ளது. பெண்களைப் பாதிக்கும் இந்தச் சட்டம் கொண்டு வரும் முன் எந்த மாதர் அமைப்பையும் அரசு கலந்தாலோ சிக்கவில்லை. இதில் ஆண்களுக்கும் பொறுப்பு உண்டு என்பது சுலபமாக மறக்கப்பட்டிருக்கிறது. இனி இப்படி அநீதியான சட்டம் நிறைவேற்ற முடியா தல்லவா?''

''மாநில அளவிலும் இத்தகைய கமிஷன் அமைய வேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை இப்போதைய தமிழக அரசு ஏற்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?''

''ஒவ்வொரு முறையும் ஒரு அநீதிக் காகப் போராட பெண்கள் டில்லி வரை செல்ல முடியாது என்பதுடன் மாநிலத் துக்கு மாநிலம் பெண்களின் பிரச்னைகள் வேறுபடும் என்பதாலும் மாநில அளவில் இத்தகைய கமிஷன் அத்தியாவசியமான ஒன்றாகிறது. இங்கு அதிகாரத்தில் உள்ள முதல்வரோ ஒரு பெண்மணி. எனவே எதிர் பார்ப்புடன் இருக்கிறோம். மத்திய அரசே கமிஷன் நியமித்த பிறகு மாநில அரசு அமைக்காமல் இருக்க எவ்விதக் காரண மும் இருக்க முடியாது. பார்ப்போம், என்ன செய்கிறார் என்று.''


சந்திப்பு : சீதா ரவி

---

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.

# வீட்டின் அழகு கதவில் தெரியும்!

## விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட



# மாயூரம் டிம்பர் கதவுகள்

**அழகானவை, உறுதியானவை,**

**நீடித்து உழைப்பவை !**

**காரணம்?**

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
நவீன ஆலைகளில் ஈரப்பதம் 80% லிருந்து 14% ஆக குறைக்கப்படுகிறது.
இது மரம் வளைந்து முறுக்காமல் தடுக்கிறது.
மரத்திற்கு இரசாயன கலவை பாதுகாப்பு அளிப்பதால் கரையான் அரிப்பதை தடுக்கிறது.
தச்சு வேலை இயந்திரத்தில் செய்யப்படுவதால் கதவுகள் நேர்த்தியாக அமைகின்றன.

Avoid spending Time & Money to achieve a substitute  Come, Select & Place your order at:

# MAYURAM TIMBER

**& GENERAL TRADING CORPN.**

Show Room: 13, Rameswaram Road, T. Nagar,
Madras – 600 017. Tel: 445207

H.O. 83, G.S.T. Road, Tambaram – 600 045.
Ph: 465297

# MAYAVARAM TIMBER DEPOT

No. 4, Post Office Road,
Mayiladuthurai, Tanjore Dist. Phone: 3216

Future Ads

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

மணிக்கணக்காய் ஜிம்னஷியத்தில் சிரமப்பட வேண்டுமா, **இல்லை** புல் ஓர்க்கருடன் சில நிமிடங்களே செலவிட வேண்டுமா? நீங்களே தீர்மானியுங்கள்.



நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான், வீட்டிலே தனிமையில் சில நிமிடங்கள் புல்ஒர்க்கர்-3-ஐ பயன் படுத்துங்கள். தசைக் கட்டுடன் திகழவும், இரத்த ஓட்டத்தை மேம் படுத்தவும், கொழுப்பைக் குறைக்கவும்.

புல்ஒர்க்கர்-3 உங்களுக்கு 14-நாள் முயற்சித்துப் பார்ப்பதற்கான வசதியுடன் அஞ்சல் மூலம் கிடைக்கிறது. உங்களுக்கு திருப்தியில்லை எனில், திருப்பி அனுப்பிவிடுங்கள், நாங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறோம் (ஹேண்டிலிங் மற்றும் ஃபார்வர்டிங் கட்டணங்களை கழித்துவிட்டு)

விலை: புல்ஒர்க்கர்-3 ரூ. 360, டம்மி டிம்மர் (ரெகுலர்) ரூ. 247, அட்வான்ஸ்டு ரூ. 344 புல் ஹைட் ரூ. 315.

புல் ஓர்க்கர் 3



எல்லா பிரபலமான ஸ்போர்ட்ஸ் கடைகளிலும் அசல் புல்ஒர்க்கர் கிடைக்கிறது. எங்களுடைய ஷோ ரூமிலும் கிடைக்கிறது.

புல்ஒர்க்கர் பிரை. லிட்.
மேத்தா மஹால், 15, மேத்யூ ரோடு, பம்பாய்-400 004.

புல்ஒர்க்கர் பிரை. லிட்.

Kol/BW-3/92

**BULLWORKER**

**FITNESS FOR LIFE**